# பொருளியல்
# ECONOMICS

## நூல் - 01

## பேரினப் பொருளாதாரம்
### (தேசிய வருமானம்)

* மூன்றாம் பதிப்பு
* புதிய விடயங்கள் சேர்க்கப்பட்டது
* A/L புதிய பாடத்திட்டத்திற்குரியது
* G.A.Q கற்கைகளுக்கானது

வீ.பரமேஸ்வரன்

# பொருளியல்
# Economics
## நூல் – 01
## பேரினப் பொருளாதாரம்
## (தேசிய வருமானம்)

* மூன்றாம் பதிப்பு
* புதிய விடயங்கள் சேர்க்கப்பட்டது
* A/L புதிய பாடத்திட்டத்திற்குரியது
* G.A.Q கற்கைகளுக்கானது

**V.PARAMESHWARAN** B.BA (Hons)

*Tutorial Staff* : *St.Joseph's College Colombo-10*
*Former Visiting Lecturer* : *Open University Of SriLanka &*
*Srilanka Technical College Colombo*

KSK Publication

Subject : Economics

Title : Macro Economics (National Income)

Author : V.Parameshwaran

Edition : 1st Edition - July 1998

2nd Edition - November 2001

3rd Edition - September 2004

Copyright© : Reserved

ISBN : 955 - 8143 - 01 - 4

Printers & Publisher : K S K Publication

# 179, Pickearings Road,

Colombo - 13.

Price : 125/-

(One Hundred and Twenty Five Only)

சிவமயம்

Sivanayani Sivamohan

# பொருளடக்கம்


பக்கம்

1. நுண்பாகப் பொருளியலும் பேரினப் பொருளியலும் ....... 01
2. பேரினப் பொருளாதாரத்தின் முக்கியத்துவம் .................. 03
3. பொருளாதாரத் துறைகள் ................................................ 04
4. பொருளாதார இடைத்தொடர்புகள் (எளிய பொருளாதாரம், மூடிய பொருளாதாரம், திறந்த பொருளாதாரம்) ............ 07
5. எல்லை நுகர்வு நாட்டம் ................................................ 15
6. எல்லை சேமிப்பு நாட்டம் ................................................ 16
7. சராசரி நுகர்வு நாட்டம் ................................................ 18
8. சராசரி சேமிப்பு நாட்டம் ................................................ 19
9. நுகர்வுத் தொழிற்பாடு ................................................ 20
10. சேமிப்புத் தொழிற்பாடு ................................................ 23
11. தன்னிச்சையான நுகர்வு ................................................ 24
12. தேசிய வருமானத்தின் சமநிலை ...................................... 26
13. வரைபட முறையில் சமநிலைத் தேசிய வருமானம் ..... 36
14. பெருக்கிக் கோட்பாடு ................................................ 41
15. தேசிய கணக்கீடு ................................................ 45
16. சென்மதி நிலுவையும் தேசிய கணக்கீடும் .................... 75
17. சூழல் தேசிய கணக்கீடும் ................................................ 77
18. தேசிய கணக்கீட்டில் பெண்களின் பங்களிப்புக்கள் ...... 78
19. மொத்தக் கேள்வியும் மொத்த நிரம்பலும் ...................... 79
20. வெளிப்பாச்சலும் உட்பாச்சலும் ...................................... 80
21. தேசிய வருமானச் சுற்றோட்டத்தினை பொருட்சந்தை, காரணிச் சந்தை ஆகியவற்றுடன் தொடர்பு படுத்தல் ... 81
22. பயிற்சிகள் ................................................ 82-113
23. கடந்தகால பரீட்சை வினாக்கள் ....................................113-127

# பேரினப் பொருளாதாரம்
# MACRO ECONOMICS

## நுண்பாகப் பொருளியலும் பேரினப் பொருளியலும்
## Micro Economics and Macro Economics

நுண்பாகப் பொருளியல் என்பது ஒரு பொருளாதாரத்தை பல்வேறு பகுதிகளாகப் பிரித்து அப்பகுதிகளைப்பற்றி தனித்தனியாக ஆய்வு செய்யும் நடவடிக்கைகளைக் குறிக்கும். அதாவது ஒரு பொருளாதாரத்தின் ஒரு பகுதியை தனியாக, நுணுக்கமாக ஆய்வு செய்யும் நடவடிக்கையினை நுண்பாகப் பொருளியல் குறிக்கும். இது சிற்றினப் பொருளியல் எனவும் கூறப்படும்.

தனிமனிதர்களின் அல்லது சிலரின் பொருளாதார நடவடிக்கை களையும், தொழில் நிறுவனங்களையும். தனிப்பட்ட பொருட்களின் விலை நிர்ணயம் போன்றவற்றையும் ஆராயும் கோட்பாடுகள் யாவும் நுண்பாகப் பொருளியல் கோட்பாடுகளாகும்.

*உதாரணமாக*

எல்லைப்பயன் கோட்பாடு, கேள்விக் கோட்பாடு, நிரம்பல் கோட்பாடு, உற்பத்தி, செலவுக் கோட்பாடுகள், சந்தைய மைப்புக்கள் பற்றிய ஆய்வுகள் யாவும் நுண்பாகப் பொருளியல் ஆய்வுகளாகும்.

பேரினப் பொருளியல் என்பது ஒரு பொருளாதாரத்தை பகுதிகளாகப் பிரிக்காமல் மொத்த ரீதியாக அல்லது தொகை ரீதியாக ஆய்வு செய்கின்ற நடவடிக்கைகளைக் குறிக்கும். அதாவது ஒரு பொருளாதாரத்தை ஒன்றுடனொன்று தொடர்புடைய முழுமையான ஒரு அமைப்பாக கருதி அதனை ஆய்வு செய்யும் நடவடிக்கையினை பேரினப் பொருளியல் குறிக்கும். இது பேரண்டப் பொருளியல் அல்லது தொகைப் பொருளியல் அல்லது பேரியல் பொருளியல் எனவும் கூறப்படும்.

*உதாரணமாக*

ஒரு பொருளாதாரத்தின் மொத்த உற்பத்தி, மொத்த நுகர்வு, மொத்த வருமானம், மொத்த செலவு, மொத்த சேமிப்பு, மொத்த

முதலீடு, நாட்டின் பொது விலை மட்டம், நாட்டின் பணநிரம்பல், மொத்த வேலை வாய்ப்பு, பொருளாதார வளர்ச்சி, அபிவிருத்தி, சென்மதி நிலுவை போன்ற கோட்பாடுகள் யாவும் பேரினப் பொருளாதாரக் கோட்பாடுகளாகும்.

## வேறுபாடுகள்

| நுண்பாகப் பொருளியல் | பேரினப் பொருளியல் |
|---|---|
| 1. ஒரு பொருளாதாரத்தின் பகுதி களைப் பற்றி தனித்தனியாக ஆய்வு செய்கின்றது. | 1. ஒரு பொருளாதாரத்தை முழுமை யாக ஆய்வு செய்கின்றது. |
| 2. குறிப்பிட்ட ஒரு மாறியில் ஏற்படும் மாற்றத்தை ஆய்வு செய்கின்றது.(ஏனையவை மாறவில்லை எனக் கொள்ளப் படும்) | 2. ஒரு பொருளாதாரத்தில் பல மாறிகளில் ஏற்படும் மாற்றங் களையும் தொடர்புகளையும் ஆய்வு செய்கின்றது. |
| 3. குறித்த ஒரு விடயத்தைப் பற்றி நுணுக்கமாக / ஆழமாக ஆய்வு செய்யும். | 3. ஒரு பொருளாதாரத்தை முழுமை யாக ஆய்வு செய்வதனால் நுணுக்கமான / ஆழமான ஆய்வாக அமையாது. |
| 4. அதிகமான எடுகோள் களையும் விதிகளையும் கொண்டது, இதனால் நம்பகத் தன்மை குறைந்தது. | 4. நடைமுறைப் பிரயோகத்தை அடிப்படையாகக் கொண்டது. இதனால் நம்பகத்தன்மை கூடியது. |
| 5. தனிநபர்கள், தனிநிறுவ னங்கள், தனிப்பட்ட பொருள் என்பவை பற்றிய ஆய்வு. | 5. ஒட்டுமொத்தமான பொருளா தாரத்தைப்பற்றிய முழுமையான ஆய்வு. |
| *உதாரணம்:* எல்லைப்பயன், கேள்வி, நிரம்பல் கோட்பாடுகள், உற் பத்தி, செலவுக் கோட்பாடு கள்,சந்தை அமைப்புக்கள். | *உதாரணம்:* மொத்த வருமானம், மொத்த நுகர்வு, மொத்த முதலீடு, மொத்த சேமிப்பு, பொதுவிலை மட்டம், பணநிரம்பல் |

## பேரினப் பொருளாதாரக் குறிக்கோள்கள்

1. பொருளாதார உறுதிப்பாட்டை ஏற்படுத்துதல்
   (i) உள்நாட்டு உறுதிப்பாட்டை ஏற்படுத்துதல்
   (ii) வெளிவாரியான உறுதிப்பாட்டை ஏற்படுத்துதல்

2. பொருளாதார அபிவிருத்தியை ஏற்படுத்துதல்
   (i) பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்துதல்
   (ii) நிறைதொழில் மட்டத்தை அல்லது நிறைதொழில் மட்டத்திற்கு அண்மிய நிலையை அடைதல்.
   (iii) சமூக நீதியை ஏற்படுத்துதல் / நியாயத்துவத்தை ஏற்படுத்துதல்
   (iv) வறுமை நிலையை நீக்குதல்

## பேரினப் பொருளாதாரத்தின் முக்கியத்துவம்

1. அரசின் பொருளாதாரக் கொள்கைகளை உருவாக்குவதற்கும் அவற்றைத் திறமையாகச் செயற்படுத்துவதற்கும் பேரினப் பொருளாதாரம் துணைபுரிக்கின்றது.

2. தற்காலப் பொருளாதார அமைப்பு முறையை அறிந்து கொள்வதற்கும் ஒரு பொருளாதாரத்தைப் பற்றி முழுமையாக அறிந்து கொள்வதற்கும் பயன்படுகின்றது.

3. ஒரு பொருளாதாரத்தில் வருமான சமமின்மையைக் குறைத்து சமூக நீதியை ஏற்படுத்துவதற்குப் பேரினப் பொருளியல் அவசியமாகின்றது.

4. எதிர்காலத்தை சிறந்த முறையில் திட்டமிடுவதற்கு துணைபுரிகின்றது.

5. பொருளியல் கோட்பாடுகளை ஆராய்வதற்கும் நுண்பாகப் பொருளியலுக்கு உதவுவதற்கும் பயன்படுகின்றது.

6. நாட்டில் வேலை வாய்ப்புக்களை அதிகரித்து நிறைதொழில் மட்டத்தை ஏற்படுத்துவதற்கு அவசியமாகின்றது.

7. நாட்டின் பணவீக்க, பணச்சுருக்க நிலைமைகளைக் கட்டுப்படுத்தி பொருளாதார உறுதிநிலையை ஏற்படுத்துவதற்கு அவசியமானதாகும்.

8. பொருளாதார வளர்ச்சியையும் பொருளாதார அபிவிருத்தியையும் ஏற்படுத்துவதற்கு பேரினப் பொருளாதாரம் அவசியமாகின்றது.

9. உலக நாடுகளை ஒன்றுடனொன்று ஒப்பிடுவதற்கு பேரினப் பொருளியல் பயன்படுகின்றது.

10. தேசிய கணக்கீட்டை மேற்கொள்வதற்கு அதாவது தேசிய வருமானம், தேசிய உற்பத்தி, தேசிய செலவு, முதலீடு, சேமிப்பு, நுகர்வு போன்றவற்றை அறிந்து கொள்வதற்கு பேரினப் பொருளியல் துணை புரிகின்றது.

## பொருளாதாரத் துறைகள் / பொருளாதார முகவர்கள் / பொருளாதார இயக்கிகள்

## (Economic Sectors/ Economic Agents)

ஒரு நாட்டில் காணப்படுகின்ற பேரினப் பொருளாதாரத் துறைகளை பின்வரும் நான்கு வகையாகப் பிரிக்கலாம்.

(1) வீட்டுத்துறை
(2) நிறுவனத்துறை
(3) அரசதுறை
(4) வெளிநாட்டுத்துறை

இத்துறைகளுடன் நிதி நிறுவனங்கள் / நிதித்துறை என்ற ஒரு துறையும் காணப்படும்.

### (1) வீட்டுத்துறை / குடும்பத்துறை / குடித்தனத்துறை Household

ஒரு நாட்டிலுள்ள எல்லாச் சமூகங்களையும் சேர்ந்த தனிநபர்கள் வீட்டுத் துறையினர்களாகக் கருதப்படுகின்றனர். இவர்கள் ஒரே கூரையின் கீழ் வாழ்ந்து ஒரே குடும்ப வரவு செலவுத் திட்டத்தின் மூலம் தமது தேவைகளைப் பூர்த்தி செய்யும் குழுவினர்களாகக் காணப்படுவர்.

ஒரு சமூகத்தின் பொருளாதார நடவடிக்கைகள் யாவும் இறுதியில் வீட்டுத் துறையினரின் தேவைகளைப் பூர்த்தி செய்வதனையே இலக்காகக் கொண்டு இயங்குகின்றன.

### *வீட்டுத் துறை ஒன்றின் பிரதான செயற்பாடுகள்*

1. நாட்டின் உற்பத்திச் செயற்பாட்டிற்குத் தேவையான நிலம், உழைப்பு, முதல், முயற்சி ஆகிய காரணிச் சேவைகளை வீட்டுத் துறையினர் வழங்குகின்றனர்.
2. வீட்டுத் துறையினர் வழங்கும் காரணிச் சேவைகளுக்காக வாடகை, கூலி, வட்டி, இலாபம் எனும் காரணி வருமானங்களைப் பெற்றுக் கொள்கின்றனர்.
3. வீட்டுத் துறையினர் தாம் பெறும் காரணி வருமானங்களை பொருட்கள் சேவைகளின் கொள்வனவுக்குப் பயன்படுத்துவதுடன் சேமிப்பு நடவடிக்கைகளுக்கும் பயன்படுத்துகின்றனர்.
4. சுயதேவையை நோக்காகக் கொண்டு சந்தைக்கு அனுப்பப்படாத சீவனோபாய நடவடிக்கைகளிலும் வீட்டுத்துறையினர் ஈடுபடுகின்றனர்.
5. பொருட்கள் சேவைகளின் நுகர்வு பற்றிய தீர்மானங்களை மேற்கொண்டு அவற்றை நடைமுறைப்படுத்துவதில் ஈடுபடுகின்றனர்.
6. அரசாங்கத்திற்கு வரிகளைச் செலுத்துதலும் அரசிடமிருந்து மாற்றல்களைப் பெறுதலும்.

## (2) நிறுவனத்துறை *(Firm)*

பொருட்கள் சேவைகளின் உற்பத்தி தொடர்பான நடவடிக்கைகளில் ஈடுபடும் பகுதியினரே நிறுவனத்துறை ஆகும். இந்நிறுவனத்துறையில் அரசதுறை நிறுவனங்கள், தனியார்துறை நிறுவனங்கள் ஆகியவை உள்ளடங்கும்.

### *நிறுவனத்துறை ஒன்றின் பிரதான செயற்பாடுகள்*

1. பொருட்கள், சேவைகள் ஆகியவற்றின் உற்பத்தி பற்றிய தீர்மானங்களை மேற்கொள்ளுதலும் பொருட்கள் சேவைகளை உற்பத்தி செய்தலும்.
2. பொருட்கள் சேவைகளின் உற்பத்திக்காக காரணிச் சேவைகளைக் கொள்வனவு செய்து அவற்றுக்கான கொடுப்பனவுகளை மேற்கொள்ளல்.
3. பொருட்கள் சேவைகளின் இறக்குமதி, பொருட்கள் சேவைகளின் ஏற்றுமதி ஆகிய நடவடிக்கைகளில் ஈடுபடல்

4. பொருட்கள் சேவைகளின் உற்பத்தியை அதிகரிப்பதற்காகவும் அதன் மூலம் பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்துவதற்காகவும் முதலீடுகளை மேற்கொள்ளல்.
5. அரசாங்கத்திற்கு வரியைச் செலுத்துதலும் அரசிடமிருந்து பல்வேறு சேவைகளைப் பெற்றுக் கொள்ளலும்.

### (3) அரசதுறை / பொதுத்துறை (Government Sector)

ஒரு பொருளாதாரத்தில் பொருளாதார உறுதி, பொருளாதார அபிவிருத்தி என்பனவற்றை ஏற்படுத்தும் நோக்குடன் சமூக நீதியை ஏற்படுத்துதல், சமூகநல சேவைகள், பொதுச் சேவைகள் என்பனவற்றை வழங்கல் ஆகியவற்றை நோக்கமாகக் கொண்ட துறை அரச துறை எனப்படும்.

*அரசதுறை ஒன்றின் பொருளாதார செயற்பாடுகள்*

1. பொதுப் பொருட்களையும் சேவைகளையும் வழங்கல்
2. பொருளாதார உட்கட்டமைப்பு வசதிகளை வழங்கல்
3. சமூகநல சேவைகளை வழங்கல்
4. நாட்டில் சமூக நீதியை ஏற்படுத்துதல்
5. வீட்டுத்துறை, நிறுவனத்துறை ஆகியவற்றிடமிருந்து வரிகளை அறவிடுதலும் மானிய உதவிகளை வழங்கலும்

### (4) வெளிநாட்டுத்துறை (*Overseas Sector*)

ஒரு பொருளாதாரமானது திறந்த பொருளாதாரமாகக் காணப்படும் போது அதனுடன் தொடர்பு கொண்டுள்ள வெளிநாட்டு நிறுவனத்துறையினை இது குறிக்கும். வெளிநாட்டுத் துறையானது பொருட்கள் சேவைகளின் ஏற்றுமதி, பொருட்கள் சேவைகளின் இறக்குமதி ஆகிய பொருளாதார செயற்பாடுகளை பிரதானமாகக் கொண்டிருக்கும்.

## பொருளாதாரம் ஒன்றின் பிரதான தொழிற்பாடு

ஒரு பொருளாதாரத்தில் காணப்படுகின்ற வீட்டுத்துறை, நிறுவனத்துறை, அரசதுறை ஆகிய துறைகள் மேற்கொள்கின்ற தீர்மானங்களின் அடிப்படையிலேயே ஒரு பொருளாதாரத்தின் தொழிற்பாடு அமைந்துள்ளது. இத்தகைய துறைகளுக்கிடையே காணப்படுகின்ற தொடர்புகள் / இடைத் தொடர்புகள் ஊடாகவே ஒரு பொருளாதாரமானது இயங்குகின்றது.

இத்தகைய தொழிற்பாட்டின் விளைவாகவே ஒரு பொருளாதாரத்தில் பொருட்கள் சேவைகளின் உற்பத்திகள், வருமானங்கள், செலவுகள் என்பன தோன்றுகின்றன.

## பொருளாதார இடைத்தொடர்புகள்

ஒரு பொருளாதாரத்தில் வீட்டுத்துறை, நிறுவனத்துறை, அரசதுறை, வெளிநாட்டுத்துறை என பல்வேறு துறைகள் காணப்படுவதனால் அவற்றுக்கிடையிலான தொடர்புகளும் பின்வரும் பல்வேறு வகைப்பட்டதாகக் காணப்படுகின்றது.

1. வீட்டுத்துறை, நிறுவனத்துறை ஆகிய இரண்டு துறைகளுக் கிடையிலான தொடர்பு. (எளிய பொருளாதாரம்)
2. வீட்டுத்துறை. நிறுவனத்துறை, அரசதுறை ஆகிய மூன்று துறைகளுக்கிடையிலான தொடர்பு. (மூடிய பொருளாதாரம்)
3. வீட்டுத்துறை, நிறுவனத்துறை, அரசதுறை, வெளிநாட்டுத்துறை ஆகிய நான்கு துறைகளுக்கிடையிலான தொடர்பு. (திறந்த பொருளாதாரம்)

## (1) வீட்டுத்துறை, நிறுவனத்துறை ஆகிய இரு துறைகளுக்கிடையிலான தொடர்பு.

### (எளிய பொருளாதார மாதிரி / இரு துறைகளின் மாதிரி)

### *(Two Sector Model)*

வீட்டுத்துறை, நிறுவனத்துறை ஆகிய இரண்டு துறைகள் மாத்திரம் காணப்படுகின்ற ஒரு பொருளாதாரத்தின் நடவடிக்கைகளை இரு துறைகளின் மாதிரி குறிக்கும்.

இவ் எளிய பொருளாதாரமானது பின்வரும் இரண்டு பிரிவுகளை உள்ளடக்குகின்றது.

1. சேமிப்பும் முதலீடும் தொழிற்படாத எளிய பொருளாதாரம்
2. சேமிப்பும் முதலீடும் தொழிற்படுகின்ற எளிய பொருளாதாரம்

### *சேமிப்பும், முதலீடும் தொழிற்படாத எளிய பொருளாதாரம்*


இப் பொருளாதாரத்தில் வீட்டுத்துறையிடமிருந்து உற்பத்திக் காரணிகள் நிறுவனத்துறைக்குச் செல்வதும் நிறுவனத்துறையிடமிருந்து காரணி வருமானங்கள் வீட்டுத்துறைக்குச் செல்வதும் இக்காரணி

வருமானங்களை நிறுவனத்துறைக்கு வழங்கி நிறுவனத்துறை உற்பத்தி செய்த பொருட்கள் சேவைகளை வீட்டுத்துறையினர் கொள்வனவு செய்வதுமாகிய நடவடிக்கைகள் இடம்பெறும்.

இங்கு நிறுவனத்துறையிடமிருந்து வீட்டுத்துறைக்கு காரணி வருமானங்கள் செல்ல வீட்டுத்துறையிடமிருந்து நிறுவனத்துறைக்கு நுகர்வுச் செலவு என்ற அடிப்படையில் வருமானங்கள் செல்கின்றது.

இவ்வாறு வீட்டுத்துறை, நிறுவனத்துறை ஆகியவற்றுக்கிடையே வருமானமானது மாறி மாறி சுழன்று செல்வது ***'தேசிய வருமானச் சுற்றோட்டம்'*** எனப்படும்.

சேமிப்பும் முதலீடும் தொழிற்படாத எளிய பொருளாதாரம் ஒன்றின் தேசிய வருமானச் சுற்றோட்டத்தினை பின்வரும் வரைபடம் மூலம் காட்டலாம்.





## பணப்பாய்ச்சலும் மெய்ப்பாய்ச்சலும் / பணவோட்டமும் மெய்யோட்டமும்
## Money Flow and Real flow

எளிய தேசிய வருமானச் சுற்றோட்டத்தில் வீட்டுத்துறையிடமிருந்து நிறுவனத்துறைக்கு உற்பத்திக் காரணிகள் செல்வதும் நிறுவனத் துறையிடமிருந்து வீட்டுத்துறைக்கு பொருட்கள் சேவைகள் செல்வதும் மெய்ப்பாய்ச்சல் எனப்படும்.

மாறாக நிறுவனத்துறையிடமிருந்து வீட்டுத்துறைக்கு காரணி வருமானங்கள் பண அடிப்படையில் செல்வதும் வீட்டுத்துறையிடமிருந்து

நிறுவனத்துறைக்கு பொருட்கள் சேவைகளுக்கான கொடுப்பனவு என்ற அடிப்படையில் பணம் செல்வதும் **பணப்பாய்ச்சல்** எனப்படும்.

பணப்பாய்ச்சல், மெய்ப்பாய்ச்சல் ஆகியவற்றை பின்வருமாறு வரைபடத்தில் காட்டலாம்.




## எளிய பொருளாதாரத்தில் உற்பத்தி, வருமானம், செலவு என்பவற்றுக்கிடையிலான தொடர்பு

எளிய பொருளாதாரத்தில் நிறுவனத்துறையினரின் உற்பத்தித் தொழிற்பாட்டின் மூலம் ஒரு வருமானத் தொழிற்பாடும், அதன் மூலம் ஒரு செலவுத் தொழிற்பாடும் ஏற்படுகின்றது. எனவே பேரினப் பொருளாதாரத்தில் உற்பத்தி, வருமானம் செலவு என்பன ஒன்றுடனொன்று தொடர்புபட்ட தொழிற்பாடுகளாகக் காணப்படுகின்றன.

எளிய தேசிய வருமானச் சுற்றோட்டத்தில் உற்பத்தி, வருமானம், செலவு என்பன ஒன்றுக்கொன்று சமனாகக் காணப்படும். அதாவது நிறுவனத்துறையினால் உற்பத்தி செய்யப்படும் பொருட்கள் சேவைகளின் பெறுமதியான தேசிய உற்பத்தியானது உற்பத்தியில் ஈடுபட்டதற்காக உற்பத்திக் காரணிகள் பெற்ற வருமானமான தேசிய வருமானத்திற்கு சமனாகக் காணப்படும். ஏனெனில் தேசிய உற்பத்தியானது உற்பத்தியில் பங்கு கொண்ட உற்பத்திக் காரணிகளுக்கு வழங்கப்பட்ட கொடுப்பனவுகளை அடிப்படையாகக் கொண்டு கணிப்பிடப்படுகின்றது. இதே போல தேசிய வருமானமானது

உற்பத்தியில் ஈடுபட்டதற்காக உற்பத்திக் காரணிகள் பெற்ற வருமானங்களை அடிப்படையாகக் கொண்டு கணிப்பிடப்படுகின்றது. எனவே தேசிய உற்பத்தியும் தேசிய வருமானமும் சமனாகக் காணப்படும்.

தேசிய உற்பத்தியைக் கொள்வனவு செய்வதற்கு ஏற்படும் செலவே தேசிய செலவு ஆகும். அதாவது தேசிய வருமானத்தைக் கொண்டு தேசிய உற்பத்தியைக் கொள்வனவு செய்யும் போதே தேசிய செலவு ஏற்படுகின்றது. எனவே தேசிய உற்பத்தி, தேசிய வருமானம், தேசிய செலவு ஆகிய மூன்றும் சமனாகக் காணப்படும்.

அதாவது

தேசிய உற்பத்தி = தேசிய வருமானம் = தேசிய செலவு

## சேமிப்பும் முதலீடும் தொழிற்படுகின்ற எளிய பொருளாதாரம்

### சேமிப்பு - *Saving*

ஒரு பொருளாதாரத்தில் வீட்டுத்துறையினது வருமானத்தில் நுகர்வுக்காக செலவிடப்படாத பகுதி, நிறுவனத்துறையினது வருமானத்தில் ஒதுக்கி வைக்கப்பட்ட பகிரப்படாத இலாபங்கள், ஒதுக்கங்கள் என்பன சேமிப்புக்களாகக் கருதப்படும்


இச் சேமிப்புக்கள் தேசிய வருமானச் சுற்றோட்டத்திலிருந்து வெளியேறுவதால் அவை **வெளிப்பாய்ச்சல்கள்** *(Withdrawals)* என அழைக்கப்படுகின்றன. இவை தேசிய வருமானச் சுற்றோட்டத்தினை சுருங்கச் செய்கின்றன.

### முதலீடு - *Investment*


ஒரு பொருளாதாரத்தில் மூலதனப் பொருட்களை உருவாக்கும் செயற்பாடு முதலீடு எனப்படும். அச்செயற்பாடு நிறுவனத்துறையின ராலேயே மேற்கொள்ளப்படுகின்றது. இம்முதலீட்டு செயற்பாட்டுக்கு வீட்டுத்துறையினதும் நிறுவனத்துறையினதும் சேமிப்புக்கள் பயன்படுத்தப் படுகின்றன.

சேமிப்பானது நிறுவனத்துறையின் முதலீடாக தேசிய வருமானச் சுற்றோட்டத்தில் சேர்த்துக் கொள்ளப்படுவதனால் முதலீடானது **உட்பாய்ச்சல்கள்** ***(Injections)*** எனப்படுகின்றது. இது தேசிய வருமானச் சுற்றோட்டத்தை விரிவடையச் செய்கின்றது.

சேமிப்பும் முதலீடும் தொழிற்படுகின்ற எளிய பொருளாதாரத்தின் தேசிய வருமானச் சுற்றோட்டத்தினை பின்வரும் வரைபடம் மூலம் காட்டலாம்.




**குறிப்பு:** சேமிப்பும் முதலீடும் தொழிற்படுகின்ற எளிய பொருளாதாரத்தின் தேசிய வருமானச் சுற்றோட்டத்தினை பின்வருமாறும் காட்டலாம்.



# 2. வீட்டுத்துறை, நிறுவனத்துறை, அரசதுறை ஆகிய மூன்று துறைகளுக்கிடையிலான தொடர்பு / மூடிய பொருளாதார மாதிரி (Three Sector Model)

வீட்டுத்துறை நிறுவனத்துறை ஆகியவற்றைக் கொண்ட எளிய பொருளாதாரத்தில் அரசாங்கத்துறையின் தலையீடு இடம்பெறும் போது மூன்று துறைகளை உள்ளடக்கிய மூடியபொருளாதார மாதிரி தோற்றம் பெறும்.

ஒரு பொருளாதாரத்தில் அரசாங்கமானது பின்வரும் வழிகளில் தலையிடுகின்றது.


1. வீட்டுத்துறையினருக்கும் நிறுவனத்துறையினருக்கும் பல்வேறு சேவைகளை வழங்குகின்றது.
   *உதாரணம்:* சமூகநல சேவைகள், கீழ்க்கட்டமைப்பு வசதிகள், இவற்றுக்காக அரசாங்கத்துக்கு ஏற்படும் செலவுகள், அரச செலவுகள் (Government Expenditure) என கூறப்படும்.

2. அரசாங்கம் சேவைகளை மேற்கொள்வதற்காக வீட்டுத்துறை யிடமிருந்தும் நிறுவனத்துறையிடமிருந்தும் வரிகளை (Tax) அறவிடுகின்றது.

அரசாங்கம் வீட்டுத்துறை நிறுவனத்துறை ஆகியவற்றுக்கு மேற்கொள்கின்ற செலவுகள் (மாற்றல் கொடுப்பனவுகள் தவிர்ந்த) தேசிய வருமானச் சுற்றோட்டத்தில் ஒரு அதிகரிப்பை / விரிவை ஏற்படுத்து வதனால் அரச செலவானது **(G)** ஒரு உட்பாய்ச்சலாக கருதப் படுகின்றது.

வீட்டுத்துறையினதும் நிறுவனத்துறையினதும் வருமானத்தில் ஒரு பகுதி அரசுக்கு வரியாகச் செலுத்தப்படுவதனால் வரியானது தேசிய வருமானச் சுற்றோட்டத்தில் ஒரு குறைவினை / சுருக்கத்தினை ஏற்படுத்துகின்றது. இதனால் வரியானது **(T)** ஒரு வெளிப் பாய்ச்சலாகக் கருதப்படுகின்றது.

மூன்று துறைகளைக் கொண்ட மூடிய பொருளாதாரத்தின் தேசிய வருமானச் சுற்றோட்டத்தினை பின்வருமாறு வரைபடம் மூலம் காட்டலாம்.




இப் பொருளாதாரத்தில் சேமிப்பு, வரி என்பன வெளிப்பாய்ச்சல் களாகவும் முதலீடு, அரசசெலவு என்பன உட்பாய்ச்சல்களாகவும் காணப்படும்.

## 3. நான்கு துறைகளின் பொருளாதார மாதிரி /திறந்த பொருளாதார மாதிரி (Four Sector Model)


மூடிய பொருளாதாரம் ஒன்றில் வெளிநாட்டுத்துறையைச் சேர்க்கும் போது திறந்த பொருளாதார மாதிரி தோற்றம் பெறும். இவ்வெளிநாட்டுத் துறையில் ஏற்றுமதி இறக்குமதி என்பன உள்ளடங்குகின்றன.

நாட்டின் உற்பத்தியில் ஒரு பகுதியை ஏற்றுமதி செய்வதன் மூலம் நிறுவனத்துறைக்கு பணம் கிடைப்பதனால், தேசிய வருமானச்

சுற்றோட்டமானது விரிவடைகின்றது. இதனால் ஏற்றுமதியானது (X - Export) உட்பாய்ச்சலாகக் கருதப்படுகின்றது.

வெளிநாடுகளிலிருந்து பொருட்கள் சேவைகளை இறக்குமதி செய்வதனால் நிறுவனத்துறையிடமிருந்து பணம் வெளியேறுவதனால் தேசிய வருமானச் சுற்றோட்டமானது சுருக்கமடைகின்றது. இதனால் இறக்குமதியானது (M - Import) வெளிப்பாய்ச்சலாகக் கருதப் படுகின்றது.

திறந்த பொருளாதாரம் ஒன்றின் தேசிய வருமானச் சுற்றோட்டத்தினை பின்வருமாறு வரைபடத்தில் காட்டலாம்.




இப்பொருளாதாரத்தில் சேமிப்பு, வரி, இறக்குமதி என்பன வெளிப் பாய்ச்சல்களாகவும் முதலீடு, அரச செலவு, ஏற்றுமதி என்பன உட்பாய்ச்சல்களாகவும் காணப்படும்.

### தேசிய வருமானச் சுற்றோட்டத்தின் முக்கியத்துவம்

1. தேசிய வருமானச் சுற்றோட்டமானது ஒரு நாட்டின் பொருளாதாரத்தைப் பற்றிய தெளிவான விளக்கத்தை அளிக்கின்றது. அதாவது ஒரு பொருளாதாரம் திறமையாக

செயற்படுகின்றதா அல்லது பொருளாதாரத்தின் செயற்பாட்டுக்கு இடையூறுகள் காணப்படுகின்றனவா என்பதை அறிய உதவுகின்றது.

2. இக்கோட்பாடானது பாதகமான சமநிலைப் பிரச்சினைகளுக்கு தீர்வு கண்டு சாதகமான சமநிலையை உருவாக்குவதற்கு பயன்படுகின்றது.

3. ஒரு பொருளாதாரத்தில் 'வெளிப்பாய்ச்சல்'களின் பங்கினை விளக்கி அவை எவ்வாறு நாட்டின் பொருளாதாரத்தைப் பாதிக்கின்றது என்பதை விளக்குகின்றது.

4. ஒரு நாட்டின் பொருளாதாரத்தில் விலைமட்ட அதிகரிப்பை அல்லது வீழ்ச்சியை கட்டுப்படுத்த சேமிப்பு, முதலீடு ஆகியவற்றில் சமநிலையை கொண்டுவர பணக்கொள்கை எவ்வாறு உதவுகின்றது என்பதை விளக்குகின்றது.

5. இவ்வருமான, செலவுச் சுற்றோட்டமானது ஒரு நாட்டில் மேற்கொள்ளப்படுகின்ற பாதீட்டுப் பற்றாக்குறைக்கான நிதியீட்டக் கொள்கையின் முக்கியத்துவத்தை விளக்குகின்றது.

## எல்லை நுகர்வு நாட்டம்
## Marginal Propency to Consume (MPC)

பொருளாதாரம் ஒன்றில் வருமான மாற்றத்தில் எத்தனை பங்கு நுகர்வில் மாற்றத்தினை ஏற்படுத்துகின்றது என்பதனை அளவிட்டுக் கூறுவது எல்லை நுகர்வு நாட்டம் ஆகும். இது நுகர்வு மாற்றத்திற்கும் வருமான மாற்றத்திற்கும் இடையிலான விகிதமாகக் காட்டப்படும்.

$$\text{எல்லை நுகர்வு நாட்டம்} = \frac{\text{நுகர்வு மாற்றம்}}{\text{வருமான மாற்றம்}}$$

$$MPC = \frac{\Delta C}{\Delta Y} \quad OR \quad \frac{\Delta C}{\Delta Yd}$$

*உதாரணம்:*

| வருமானம் (Y) ரூபா | நுகர்வு (C) ரூபா |
|---|---|
| 5,000 | 4,750 |
| 6,000 | 5,500 |

$$MPC = \frac{\triangle C}{\triangle Y} = \frac{750}{1,000} = 0.75$$

எல்லை நுகர்வு நாட்டமானது பொதுவாக 1ஐ விட சிறிதாகவும் 0 ஐ விட பெரிதாகவும் (1>MPC>0) காணப்படும்.

## எல்லை சேமிப்பு நாட்டம்
## Marginal Propency to Saving (MPS)

பொருளாதாரம் ஒன்றில் வருமான மாற்றத்தில் எத்தனை பங்கு சேமிப்பில் மாற்றத்தினை ஏற்படுத்துகின்றது என்பதனை அளவிட்டுக் கூறுவது எல்லை சேமிப்பு நாட்டம் ஆகும். இது சேமிப்பில் ஏற்படும் மாற்றத்திற்கும் வருமான மாற்றத்திற்கும் இடையிலான விகிதமாகக் காட்டப்படும்.

$$\text{எல்லை சேமிப்பு நாட்டம்} = \frac{\text{சேமிப்பு மாற்றம்}}{\text{வருமான மாற்றம்}}$$

$$MPS = \frac{\triangle S}{\triangle Y} \quad OR \quad \frac{\triangle S}{\triangle yd}$$

*உதாரணம்:*

| வருமானம் (Y) ரூபா | நுகர்வு (C) ரூபா | சேமிப்பு (S) ரூபா |
|---|---|---|
| 5,000 | 4,750 | 250 |
| 6,000 | 5,500 | 500 |

$$MPS = \frac{\triangle S}{\triangle Y} = \frac{250}{1,000} = 0.25$$

(இங்கு $S = Y - C$ ஆகும்)

*குறிப்பு* : **1**

எல்லை நுகர்வு நாட்டத்தினதும் **(MPC)** எல்லை சேமிப்பு நாட்டத்தினதும் **(MPS)** பெறுமதிகளின் கூட்டுத்தொகை எப்பொழுதும் 1 ஆகக் காணப்படும்.

அதாவது $MPC + MPS = 1$

அல்லது

$MPS = 1 - MPC$ ஆகும்

*குறிப்பு* : **2**

எல்லை நுகர்வு நாட்டத்தினதும் எல்லை சேமிப்பு நாட்டத்தினதும் கூட்டுத்தொகையின் பெறுமதியானது எப்பொழுதும் 1 ஆகக் காணப்படும் என்பதனை பின்வருமாறு நிறுவிக் காட்டலாம்.

$$MPC = \frac{\triangle C}{\triangle Y}$$

$$MPS = \frac{\triangle S}{\triangle Y}$$

$$Y = C + S$$

$$\triangle Y = \triangle C + \triangle S$$

$$\frac{\triangle Y}{\triangle Y} = \frac{\triangle C}{\triangle Y} + \frac{\triangle S}{\triangle Y}$$

$$\therefore \quad 1 = MPC + MPS$$

## சராசரி நுகர்வு நாட்டம்
## Average Propency to Consume (APC)

பொருளாதாரம் ஒன்றில் வருமானத்தில் எத்தனை பங்கு நுகர்வுக்காக செலவிடப்படுகின்றது என்பதனை அளவிட்டுக் கூறுவது சராசரி நுகர்வு நாட்டம் ஆகும். இது நுகர்வுக்கும் வருமானத்திற்கும் இடையிலான விகிதமாகக் காட்டப்படும்.

$$\text{சராசரி நுகர்வு நாட்டம்} = \frac{\text{நுகர்வு}}{\text{வருமானம்}}$$

$$APC = \frac{C}{Y}$$

*உதாரணம்:*

| வருமானம் (Y) ரூபா | நுகர்வு (C) ரூபா | சராசரி நுகர்வு நாட்டம் (APC) |
|---|---|---|
| 1,000 | 1,500 | 1.5 |
| 2,000 | 2,250 | 1.125 |
| 3,000 | 3,000 | 1 |
| 4,000 | 3,750 | 0.93 |
| 5,000 | 4,500 | 0.9 |

*குறிப்பு :*

வருமானத்தைவிட நுகர்வு கூடுதலாகக் காணப்படுமாயின் சராசரி நுகர்வு நாட்டம் ஒன்றைவிட கூடுதலாகவும், மாறாக வருமானத்தைவிட நுகர்வு குறைவாகக் காணப்படுமாயின் சராசரி நுகர்வு நாட்டம் ஒன்றைவிட குறைவாகவும், மாறாக வருமானம் நுகர்வுக்குச் சமமாகக் காணப்படுமாயின் சராசரி நுகர்வு நாட்டத்தின் பெறுமதி ஒன்று ஆகவும் காணப்படும்.

அதாவது

$Y < C \Rightarrow APC > 1$

$Y > C \Rightarrow APC < 1$

$Y = C \Rightarrow APC = 1$

## சராசரி சேமிப்பு நாட்டம்
## Average Propency to Savings (APS)

பொருளாதாரம் ஒன்றில் வருமானத்தில் எத்தனை பங்கு சேமிப்பாகக் காணப்படுகின்றது என்பதனை அளவிட்டுக் கூறுவது சராசரி சேமிப்பு நாட்டம் ஆகும். இது சேமிப்புக்கும் வருமானத்திற்கும் இடையிலான விகிதமாகக் காட்டப்படும்.

$$\text{சராசரி சேமிப்பு நாட்டம்} = \frac{\text{சேமிப்பு}}{\text{வருமானம்}}$$

$$APS = \frac{S}{Y}$$

*உதாரணம்:*

| வருமானம் Y | நுகர்வு C | சேமிப்பு S | சராசரி நுகர்வு நாட்டம் APC | சராசரி சேமிப்பு நாட்டம் APS |
|---|---|---|---|---|
| 1,000 | 1,400 | -400 | 1.4 | -0.4 |
| 2,000 | 2,200 | -200 | 1.1 | -0.1 |
| 3,000 | 3,000 | 0 | 1 | 0 |
| 4,000 | 3,800 | 200 | 0.95 | 0.05 |
| 5,000 | 4,600 | 400 | 0.92 | 0.08 |

*குறிப்பு : **1***

சராசரி நுகர்வு நாட்டத்தினதும் சராசரி சேமிப்பு நாட்டத்தினதும் கூட்டுத்தொகை எப்பொழுதும் ஒன்று ஆகக் காணப்படும்.

அதாவது $APC + APS = 1$

அல்லது

$APS = 1 - APC$ ஆகும்.

*குறிப்பு : **2***

சராசரி நுகர்வு நாட்டத்தினதும் சராசரி சேமிப்பு நாட்டத்தினதும் கூட்டுத் தொகையின் பெறுமதியானது எப்பொழுதும் 1 ஆகக் காணப்படும் என்பதனைப் பின்வருமாறு நிறுவிக் காட்டலாம்.

$$APC = \frac{C}{Y}$$

$$APS = \frac{S}{Y}$$

$$Y = C + S$$

$$\frac{Y}{Y} = \frac{C}{Y} + \frac{S}{Y}$$

$$\therefore \quad 1 = APC + APS$$

*உதாரணம்:*

பொருளாதாரம் ஒன்று தொடர்பான பின்வரும் வருமான மட்டங்கள், நுகர்வுகள், என்பனவற்றை பயன்படுத்தி MPC, MPS, APC, APS ஆகியவற்றைக் கணிப்பிடுக.

| Y | C | S | MPC | MPS | APC | APS |
|---|---|---|---|---|---|---|
| 0 | 200 | -200 | ---- | ---- | ---- | ---- |
| 100 | 260 | -160 | 0.6 | 0.4 | 2.60 | -1.60 |
| 200 | 320 | -120 | 0.6 | 0.4 | 1.60 | -0.60 |
| 300 | 380 | -80 | 0.6 | 0.4 | 1.27 | -0.27 |
| 400 | 440 | -40 | 0.6 | 0.4 | 1.10 | -0.10 |
| 500 | 500 | 0 | 0.6 | 0.4 | 1.00 | 0.00 |
| 600 | 560 | 40 | 0.6 | 0.4 | 0.93 | 0.07 |
| 700 | 620 | 80 | 0.6 | 0.4 | 0.88 | 0.12 |
| 800 | 680 | 120 | 0.6 | 0.4 | 0.85 | 0.15 |
| 900 | 740 | 160 | 0.6 | 0.4 | 0.82 | 0.18 |
| 1000 | 800 | 200 | 0.6 | 0.4 | 0.80 | 0.20 |

## நுகர்வுத் தொழிற்பாடு / நுகர்வுச்சார்பு
## *Consumption Function*

பொருளாதாரம் ஒன்றில் வருமானத்துக்கும் நுகர்வுக்கும் இடையிலான தொடர்பைக் கூறும் தொழிற்பாடு நுகர்வுத் தொழிற்பாடு ஆகும். அதாவது வருமானத்தின் (Y) சார்பாக அல்லது செலவிடக் கூடிய வருமானத்தின் (Yd) சார்பாக நுகர்வு குறிப்பிடப்படுவதை இத் தொழிற்பாடு குறிக்கும்.

நுகர்வுத் தொழிற்பாடு பின்வருமாறு காட்டப்படும்.

$$C = f(y) \quad \text{அல்லது} \quad C = f(yd)$$

இங்கு, C - நுகர்வு (Consumption)
f - தொழிற்பாடு (Function)
y - வருமானம் (Yield)
Yd - செலவிடக்கூடிய வருமானம் (Disposable Yield)

பொருளாதாரம் ஒன்றில் வருமானத்துக்கும் சேமிப்புக்கும் இடையில் எப்பொழுதும் நேரான தொடர்பு காணப்படும். அதாவது வருமானம் அதிகரிக்க நுகர்வு அதிகரிப்பதாகவும், வருமானம் குறைவடைய நுகர்வு குறைவடைவதாகவும் காணப்படும்.

வருமானத்துக்கும் நுகர்வுக்கும் இடையிலான தொடர்பைக் காட்டும் நுகர்வுக் கோட்டை நேர்கோடு எனக் கொண்டால் **நுகர்வுக் கோட்டுக்கான சமன்பாடு** பின்வருமாறு காட்டப்படும்.

$$C = a + by \quad \text{அல்லது} \quad C = a + byd$$

இங்கு, C - நுகர்வு
a - வருமானம் பூச்சியமாக உள்ளபோது நுகர்வின் அளவு / தன்னிச்சையான நுகர்வு
b - நுகர்வுக் கோட்டின் சரிவு / எல்லை நுகர்வு நாட்டம் (MPC) / தூண்டப்பட்ட நுகர்வு

$$b = \frac{\triangle c}{\triangle y} \quad \text{அல்லது} \quad b = \frac{\triangle c}{\triangle yd}$$

y - வருமானம் yd - செலவிடக் கூடிய வருமானம்

*குறிப்பு :*
செலவிடக் கூடிய வருமானம் (Yd) என்பது வருமானத்திலிருந்து (Y) நேர்வரிகளை (T) கழிப்பதன் மூலம் பெறப்படும். அதாவது $Yd = Y - T$ ஆகும். அரச தலையீடற்ற எளிய பொருளாதாரத்தில் வரிகள் காணப்படாது என்பதனால் அங்கு வருமானமும் (Y) செலவிடக்கூடிய வருமானமும் (Yd) சமனாக காணப்படும். அதாவது $Y = Yd$ ஆக காணப்படும். ஆனால் அரச தலையீடு காணப்படும் போது $Yd = Y - T$ ஆகும்

அரச தலையீடுள்ள பொருளாதாரத்தில் வரியுடன் (T) மாற்றல்களும் (R) தரப்பட்டிருப்பின் $Yd = Y - T + R$ என காட்டப்படும்

*உதாரணம்:*

பின்வரும் வருமான மட்டங்கள், நுகர்வு என்பனவற்றுக்கான நுகர்வுச் சார்பைப் பெற்று நுகர்வுக் கோட்டை வரைக.

| வருமானம் (Y) | நுகர்வு (C) |
|---|---|
| 2000<br>4000 | 1800<br>3400 |

$$C = a + by$$


$$b = \frac{\triangle c}{\triangle y} = \frac{1600}{2000} = 0.8$$

$$1800 = a + 0.8 \times 2000$$

$$1800 = a + 1600$$

$$a = 200$$

∴ நுகர்வுச் சார்பு $C = 200 + 0.8y$



## சேமிப்புத் தொழிற்பாடு / சேமிப்புச் சார்பு
## *Savings Function*

பொருளாதாரம் ஒன்றில் வருமானத்திற்கும் சேமிப்புக்கும் இடையிலான தொடர்பைக் கூறும் தொழிற்பாடு சேமிப்புத் தொழிற்பாடு எனப்படும். அதாவது, வருமானத்தின் சார்பாக அல்லது செலவிடக் கூடிய வருமானத்தின் சார்பாக சேமிப்பு குறிப்பிடப்படுவதனை இத் தொழிற்பாடு குறிக்கும்.

சேமிப்பு சார்பு பின்வருமாறு காட்டப்படும்.

$$S = f(y) \quad \text{அல்லது} \quad S = f(yd)$$

இங்கு,
- S - சேமிப்பு (Savings)
- f - தொழிற்பாடு (Function)
- y - வருமானம் (Yield)
- Yd - செலவிடக்கூடிய வருமானம் (Disposable Yield)

பொருளாதாரம் ஒன்றில் வருமானத்துக்கும் சேமிப்புக்கும் இடையில் நேரான தொடர்பு காணப்படும்.

சேமிப்பு கோடானது நேர்கோடு எனக் கொள்ளப்பட்டால் சேமிப்பு கோட்டுக்கான சமன்பாடு பின்வருமாறு காட்டப்படும்.

$$S = -a + by \quad \text{அல்லது} \quad S = -a + byd \quad \text{அல்லது} \quad S = -a + sy$$

இங்கு,
- S - சேமிப்பு
- a - வருமானம் பூச்சியமாக உள்ளபோது உள்ள சேமிப்பின் அளவு
- b - சேமிப்புக் கோட்டின் சரிவு/ எல்லை சேமிப்பு நாட்டம் (MPS) / தூண்டப்பட்ட சேமிப்பு

$$b = \frac{\Delta S}{\Delta y} \quad \text{அல்லது} \quad b = \frac{\Delta S}{\Delta yd}$$

- y - வருமானம்
- yd - செலவிடத்தக்க வருமானம்

*உதாரணம்:*

பின்வரும் தரவுகளைப் பயன்படுத்தி சேமிப்புச் சார்பைக் கணிப்பிட்டு, சேமிப்புக் கோட்டை வரைக.

| வருமானம் (Y) ரூபா | நுகர்வு (C) ரூபா | சேமிப்பு (S) ரூபா |
|---|---|---|
| 400 | 350 | 50 |
| 500 | 425 | 75 |

$$S = a + by$$


$$b = \frac{\triangle S}{\triangle Y} = \frac{25}{100} = 0.25$$

$$50 = a + 0.25 \times 400$$

$$50 = a + 100$$

$$a = -50$$

∴ சேமிப்புச் சமன்பாடு $S = -50 + 0.25y$




### தன்னிச்சையான நுகர்வு
### *Autonomous Consumption*

ஒரு பொருளாதாரத்தில் வருமானமானது பூச்சியமாகக் காணப்படுகின்ற போது ஏற்படுகின்ற நுகர்வின் அளவே தன்னிச்சையான நுகர்வு ஆகும். அதாவது வருமானம் பூச்சியமாக அமைந்தாலும் நுகர்வு பூச்சியமாக அமையாது என்பதனையே இது குறிக்கும்.

நுகர்வுச் சமன்பாடாகிய $C = a + by$ என்பதில் a என்பதே தன்னிச்சையான நுகர்வு ஆகும். இது வருமானம் எவ்வளவாக இருந்தாலும் ஒரேயளவாகவே இருக்கும்.

*உதாரணம்:*

பொருளாதாரம் ஒன்று தொடர்பான பின்வரும் தரவுகளைப் பயன்படுத்தி கீழே தரப்படும் வினாக்களுக்கு விடை தருக.

| வருமானம் (Y) | நுகர்வு (C) |
|---|---|
| 300 | 275 |
| 400 | 350 |

(i) நுகர்வுக் கோட்டின் சரிவின் (b) பெறுமதியைக் கணிப்பிடுக.

$$b = \frac{\triangle c}{\triangle y} = \frac{75}{100} = 0.75$$

∴ சரிவின் பெறுமதி = 0.75

(ii) தன்னிச்சையான நுகர்வின் (a) அளவினை கணிப்பிடுக.


$$C = a + by$$
$$275 = a + 0.75 \times 300$$
$$275 = a + 225$$
$$50 = a$$

∴ தன்னிச்சையான நுகர்வு = 50

(iii) நுகர்வுக் கோட்டின் சமன்பாட்டினைக் காண்க.

$$C = 50 + 0.75y$$

(iv) நுகர்வுக் கோட்டை வரைபில் காட்டுக.



(v) சேமிப்புச் சமன்பாட்டைத் தருக.

$$S = -50 + 0.25y$$

(vi) எந்த வருமான மட்டத்தில் சேமிப்பு பூச்சியமாகும்?

$$S = -50 + 0.25y$$
$$0 = -50 + 0.25y$$
$$50 = 0.25y$$
$$200 = y$$

∴ 200 ரூபா வருமான மட்டத்தில் சேமிப்பு பூச்சியமாகும்.

## தேசிய வருமானத்தின் சமநிலை/ சமநிலைத் தேசிய வருமானம்/ பேரினப் பொருளாதார சமநிலை

ஒரு பொருளாதாரத்தில் மொத்த வருமானம் அல்லது மொத்த உற்பத்தியானது மொத்த செலவுக்குச் சமனாகக் காணப்படும் நிலை தேசிய வருமான சமநிலை எனப்படும். இச்சமநிலையின் போது மொத்தக் கேள்வி மட்டமானது மொத்த நிரம்பல் மட்டத்திற்கு சமனாகவும் வெளிப்பாய்ச்சல்கள் உட்பாய்ச்சல்களுக்குச் சமனாகவும் காணப்படும். அத்துடன் மொத்த வெளியீடானது தளம்பலில்லாமல் உறுதியாகக் காணப்படும்.

தேசிய வருமான சமநிலையின் இயல்புகளை பின்வருமாறு காட்டலாம்


| | | | |
|---|---|---|---|
| (1) | மொத்த வருமானம் | = | மொத்த செலவு |
| | Y | = | E |
| | (Yield) | = | (Expenditure) |
| (2) | மொத்தக் கேள்வி | = | மொத்த நிரம்பல் |
| | AD | = | AS |
| | (Aggregate Demand) | = | (Aggregate Supply) |
| (3) | வெளிப்பாய்ச்சல் | = | உட்பாய்ச்சல் |
| | W | = | Ij |
| | (Withdrawals) | = | (Injections) |

*குறிப்பு:*

தேசிய வருமானம் சமநிலையடைவதற்கான பிரதான நிபந்தனை வெளிப்பாய்ச்சல்களும் உட்பாய்ச்சல்களும் சமனாகக் காணப்பட வேண்டும் என்பதாகும். வெளிப்பாய்ச்சல் களானது உட்பாய்ச்சல்களுக்கு சமனாகக் காணப்படாத போது தேசிய வருமான சமநிலை பாதிக்கப்படும்.

## சமநிலைத் தேசிய வருமானக் கோடு

தேசிய வருமான சமநிலையின் போது ஒரு பொருளாதாரத்தின் மொத்த வருமானத்திற்கும் மொத்த செலவுக்கும் இடையிலான தொடர்பினைக் காட்டும் கோடு சமநிலைத் தேசிய வருமானக் கோடு எனப்படும். இக்கோட்டில் எல்லாப் புள்ளிகளிலும் மொத்த வருமானமும் மொத்தச் செலவும் சமனாகக் காணப்படும்.




## எளிய பொருளாதாரத்தின் தேசிய வருமான சமநிலை

1. சேமிப்பும் முதலீடும் தொழிற்படாத எளிய பொருளாதாரம் ஒன்றின் தேசிய வருமான சமநிலை பின்வருமாறு காட்டப்படும்.

$$Y = C$$

இங்கு வருமானம் முழுவதும் நுகர்வுக்குச் செலவிடப்படுவதனால் சேமிப்புக்களோ முதலீடுகளோ காணப்படாது. இதனால் வெளிப்பாய்ச்சல், உட்பாய்ச்சல் என்பன இடம்பெறாமையினால் வருமானச் சுற்றோட்டத்தில் சுருக்கமோ விரிவோ இன்றி பொருளாதாரம் ஒரே சீராக இயங்கும்.

2. சேமிப்பும் முதலீடும் தொழிற்படுகின்ற எளிய பொருளாதாரம் ஒன்றின் தேசிய வருமான சமநிலை பின்வருமாறு காட்டப்படும்.

$$Y = C + I$$

இங்கு, Y - சமநிலைத் தேசிய வருமானம்
C - நுகர்வு
I - முதலீடு

இச்சமநிலையின் போது பின்வரும் பண்புகளை எளிய பொருளாதாரம் கொண்டிருக்கும்.

(1) மொத்த வருமானம் = மொத்த செலவு

$$Y = E$$
$$C + S = C + I$$

(2) மொத்தக்கேள்வி = மொத்த நிரம்பல்

$$AD = AS$$
$$C + I = C + S$$

(3) வெளிப்பாய்ச்சல் = உட்பாய்ச்சல்

சேமிப்பு = முதலீடு

$$S = I$$

(சமநிலைக்கான பிரதான நிபந்தனை)

***உதாரணம் 1:***

எளிய பொருளாதாரம் ஒன்று தொடர்பான தரவுகள் பின்வருமாறு

நுகர்வு (C) $= 500 + 0.8y$

முதலீடு (I) = 300 மில்லியன் ரூபா

இப்பொருளாதாரத்தின் சமநிலைத் தேசிய வருமான மட்டத்தை காண்க.

**விடை**

$$Y = C + I$$
$$Y = 500 + 0.8y + 300$$
$$Y - 0.8Y = 800$$
$$0.2Y = 800$$
$$Y = 800/0.2$$
$$Y = 4{,}000$$

∴ சமநிலைத் தேசிய வருமானம் = 4000 மில்லியன் ரூபா

***உதாரணம் 2:***

எளிய பொருளாதாரம் ஒன்றின் நுகர்வானது எப்பொழுதும் வருமானத்தில் 75% ஆகவும், முதலீடு 200 மில்லியன் ரூபாவாகவும் காணப்பட்டது எனின் சமநிலை வெளியீட்டு மட்டத்தை காண்க.

**விடை**

$$C = 0.75\,y$$
$$I = 200$$
$$Y = C + I$$
$$Y = 0.75y + 200$$
$$y - 0.75y = 200$$
$$0.25y = 200$$
$$y = 800$$

*உதாரணம் 3:*

$$C = 200 + 0.6y$$
$$I = 200$$

(i) Y ஐக் காண்க

$$Y = C + I$$
$$Y = 200 + 0.6Y + 200$$
$$Y = 400 + 0.6Y$$
$$Y - 0.6Y = 400$$
$$0.4Y = 400$$
$$Y = 400/0.4$$
$$= 1,000$$

(ii) சமநிலையின் போது நுகர்வின் அளவு யாது?

*முறை (1)*

$$Y = C + I$$
$$Y - I = C$$
$$1000 - 200 = C$$
$$800 = C$$
$$\therefore \text{நுகர்வு} = 800$$

*முறை (2)*

$$C = 200 + 0.6y$$
$$= 200 + 0.6 \times 1,000$$
$$= 200 + 600$$
$$= 800$$

(iii) சேமிப்பின் அளவு யாது?

$$S = I$$
$$I = 200$$
$$\therefore \text{சேமிப்பு} = 200$$

*உதாரணம் 4:*

$$S = -100 + 0.25y$$
$$I = 500$$

சமநிலை வெளியீட்டு மட்டம் யாது?

விடை

$$S = I$$
$$-100 + 0.25y = 500$$
$$0.25y = 600$$
$$Y = 2,400$$

## மூடிய பொருளாதாரத்தின் தேசிய வருமான சமநிலை

அரசதுறையினைக் கொண்ட மூடிய பொருளாதாரம் ஒன்றின் தேசிய வருமான சமநிலை பின்வருமாறு காட்டப்படும்.

$$Y = C + I + G$$

இங்கு, G - அரச செலவு

இச்சமநிலையின் போது பின்வரும் பண்புகளை மூடிய பொருளாதாரம் கொண்டிருக்கும்.

(1) மொத்த வருமானம் = மொத்த செலவு

$$Y = E$$

$$C + S + T = C + I + G$$

(2) மொத்தக்கேள்வி = மொத்த நிரம்பல்

$$AD = AS$$

$$C + I + G = C + S + T$$

(3) வெளிப்பாய்ச்சல் = உட்பாய்ச்சல்

சேமிப்பு + வரி = முதலீடு + அரச செலவு

$$S + T = I + G$$

(சமநிலைக்கான பிரதான நிபந்தனை)

*உதாரணம் 1:*

மூடிய பொருளாதாரம் ஒன்று தொடர்பான தரவுகள் பின்வருமாறு:

நுகர்வு (C) $= 200 + 0.75y$

முதலீடு (I) = 300 மில்லியன் ரூபா

அரச செலவு (G) = 200 மில்லியன் ரூபா

இப்பொருளாதாரத்தின் சமநிலைத் தேசிய வருமான மட்டத்தை காண்க.

**விடை**

$$Y = C + I + G$$

$$= 200 + 0.75y + 300 + 200$$

$$= 700 + 0.75y$$

$$Y - 0.75\,y = 700$$

$$0.25\,y = 700$$

$$Y = 2{,}800$$

*உதாரணம் 2:*

முடிய பொருளாதாரம் ஒன்று தொடர்பான தரவுகள் பின்வருமாறு:

நுகர்வு (C) = 0.8yd

முதலீடு (I) = 500 மில்லியன் ரூபா

அரச செலவு (G) = 300 மில்லியன் ரூபா

வரி (T) = 0.25y

கணிப்பிடுக.

(i) சமநிலைத் தேசிய வருமான மட்டம் யாது?

**விடை**

$$
\begin{aligned}
Y &= C + I + G \\
&= 0.8yd + 500 + 300 \\
&= 0.8\,(Y - 0.25y) + 800 \\
&= 0.8 \times 0.75y + 800 \\
&= 0.6y + 800 \\
Y - 0.6y &= 800 \\
0.4y &= 800 \\
y &= 800/0.4 \\
y &= 2{,}000
\end{aligned}
$$

> *குறிப்பு:*
>
> Yd = Y - t
>
> Yd - செலவிடத்தக்க வருமானம் (Disposable Yield)
>
> y = வருமானம்
>
> t = நேர்வரி

(ii) வரியின் அளவு யாது?

**விடை**

$$
\begin{aligned}
T &= 0.25y \\
&= 0.25 \times 2{,}000 \\
&= 500
\end{aligned}
$$

(iii) செலவிடத்தக்க வருமானம் யாது?

**விடை**

$$
\begin{aligned}
Yd &= Y - T \\
&= 2{,}000 - 500 \\
&= 1{,}500
\end{aligned}
$$

(iv) வரவு செலவுத் திட்ட நிலுவை யாது?

**விடை**

வரவு செலவு திட்ட நிலுவை $= T - G$

$= 500 - 300$

$= 200$ (மிகை)

(v) சமநிலையின் போதான நுகர்வின் அளவு யாது?

**விடை**

$$C = 0.8yd$$
$$= 0.8 \times 1{,}500$$
$$= 1{,}200$$

(vi) சமநிலையின் போதான சேமிப்பின் அளவு யாது?

**விடை**

$$S = Yd - C$$
$$= 1{,}500 - 1{,}200$$
$$= 300$$

(vii) சமநிலையின் போது வெளிப்பாய்ச்சலானது உட்பாய்ச்சலுக்குச் சமன் எனக் காட்டுக.

**விடை**

வெளிப்பாய்ச்சல் = உட்பாய்ச்சல்

$$S + T = I + G$$
$$300 + 500 = 500 + 300$$
$$800 = 800$$

***உதாரணம் 3:***

நுகர்வு $C = 500 + 0.75yd$

முதலீடு $I = 400$

அரச செலவு $G = 300$

வரி $T = 100$

சமநிலை வெளியீட்டு மட்டத்தை காண்க.

**விடை**

$$Y = C + I + G$$
$$= 500 + 0.75yd + 400 + 300$$
$$= 1{,}200 + 0.75\,(Y - 100)$$
$$= 1{,}200 + 0.75y - 75$$
$$0.25Y = 1{,}125$$
$$Y = 1{,}125 / 0.25$$
$$Y = 4{,}500$$

**உதாரணம் 4:**

$$S = -300 + 0.2yd$$
$$I = 400$$
$$G = 300$$
$$T = 0.25y$$

சமநிலை வெளியீட்டு மட்டத்தை காண்க.

$S = -300 + 0.2yd$ எனின்,

$C = 300 + 0.8yd$ ஆகும்.

$$\therefore Y = C + I + G$$
$$= 300 + 0.8(y - 0.25y) + 400 + 300$$
$$= 1{,}000 + 0.8 \times 0.75y$$
$$= 1{,}000 + 0.6y$$
$$0.4y = 1{,}000$$
$$Y = 2{,}500$$

**உதாரணம் 5:**

நுகர்வு = செலவுக்கான வருமானத்தில் 90%

முதலீடு = 400 மில்லியன் ரூபா

அரச செலவு = 550 மில்லியன் ரூபா

நேர்வரி = வருமானத்தில் 10%

(i) சமநிலை வெளியீட்டு மட்டம்

வீடை

$$S = 0.9yd$$
$$I = 400$$
$$G = 550$$
$$T = 0.1y$$

$$\therefore Y = C + I + G$$
$$= 0.9\,(y - 0.1y) + 400 + 550$$
$$= 0.9 \times 0.9y + 950$$
$$= 0.81y + 950$$
$$Y - 0.81y = 950$$
$$0.19y = 950$$
$$Y = 950/0.19$$
$$y = 5{,}000$$

∴ சமநிலை வெளியீட்டு மட்டம் 5,000 மில்லியன் ரூபா

(ii) பாதீட்டுப் பற்றாக்குறையின் அளவினைக் கணிப்பிடுக.

**விடை**

பாதீட்டு நிலுவை $= T - G$
$= 0.1y - G$
$= 0.1 \times 5,000 - 550$
$= 500 - 550$
$= -50$ (பற்றாக்குறை)

∴ பாதீட்டுப் பற்றாக்குறையின் அளவு = 50 மில்லியன் ரூபா

(iii) பாதீட்டுப் பற்றாக்குறை எவ்வாறு நிதியிடப்பட்டுள்ளது?

**விடை**

$S + T = I + G$
$S = I + G - T$
$= 400 + 550 - 500$
$= 450$

∴ சேமிப்பு = 450
முதலீடு = 400

∴ முதலிடப்படாத சேமிப்பு = 50

எனவே தனியார் துறையின் முதலிடப்படாத சேமிப்பு 50 மில்லியன் ரூபாவினையே அரசு பாதீட்டுப் பற்றாக்குறையினை நிதியிட பயன்படுத்தியுள்ளது.

(iv) இப்பொருளாதாரத்தின் வருமானப் பெருக்கியின் பெறுமதியைக் காண்க.

$$\text{வருமானப் பெருக்கி } (K) = \frac{1}{MPS + (MPC \times \text{வரிவீதம்})}$$

$$= \frac{1}{0.1 + (0.9 \times 0.1)}$$

$$= \frac{1}{0.1 + 0.09}$$

$$= \frac{1}{0.19}$$

$$= 5.26$$

(v) இப்பொருளாதாரத்தின் அரசாங்கச் செலவீடு ரூபா 100 மில்லியனால் அதிகரித்தால் சமநிலை வெளியீட்டு மட்டம் எத்தனை மில்லியனால் அதிகரிக்கும்.

விடை = $100 \times 5.26 = 526$ மில்லியனால் அதிகரிக்கும்.

## திறந்த பொருளாதாரத்தின் தேசிய வருமான சமநிலை

திறந்த பொருளாதாரம் ஒன்றின் தேசிய வருமான சமநிலை பின்வருமாறு காட்டப்படும்.

$$\boxed{Y = C + I + G + (x - m)}$$

இங்கு; X - ஏற்றுமதி
M - இறக்குமதி

இச் சமநிலையின் போது பின்வரும் பண்புகளை திறந்த பொருளாதாரம் கொண்டிருக்கும்.

(1) மொத்த வருமானம் = மொத்த செலவு

$$Y = E$$
$$C + S + T = C + I + G + (x - m)$$

(2) மொத்தக்கேள்வி = மொத்த நிரம்பல்

$$AD = AS$$
$$C + I + G + (x - m) = C + S + T$$

(3) வெளிப்பாய்ச்சல் = உட்பாய்ச்சல்

சேமிப்பு + வரி + இறக்குமதி = முதலீடு + அரச செலவு + ஏற்றுமதி

$$S + T + M = I + G + X$$

(சமநிலைக்கான பிரதான நிபந்தனை)

*உதாரணம் 1:*

திறந்த பொருளாதாரம் ஒன்று தொடர்பான தரவுகள் பின்வருமாறு

$C = 1{,}000 + 0.8yd$     $T = 0.2y$
$I = 500$     $X = 380$
$G = 300$     $M = 200$

(i) சமநிலைத் தேசிய வருமான மட்டத்தைக் காண்க.

**விடை**

$$\begin{aligned} y &= C + I + G + (x - m) \\ &= 1{,}000 + 0.8\,(y - 0.2y) + 500 + 300 + (380 - 200) \\ &= 1980 + 0.8 \times 0.8y \\ &= 1980 + 0.64y \\ y - 0.64y &= 1980 \\ 0.36y &= 1980 \\ y &= 1980/0.36 \\ &= 5{,}500 \end{aligned}$$

(ii) செலவிடத்தக்க வருமானம் யாது?

விடை

$$
\begin{aligned}
Yd &= Y - t \\
&= 5,500 - (0.2 \times 5,500) \\
&= 5,500 - 1,100 \\
&= 4,400
\end{aligned}
$$

(iii) நுகர்வின் அளவு யாது?

விடை

$$
\begin{aligned}
C &= 1,000 + 0.8yd \\
&= 1,000 + 0.8 \times 4,400 \\
&= 1,000 + 3,520 \\
&= 4,520
\end{aligned}
$$

(iv) சேமிப்பின் அளவு யாது?

விடை

$$
\begin{aligned}
S &= Yd - C \\
&= 4,400 - 4,520 \\
&= -120
\end{aligned}
$$

(v) சமநிலையின் போது வெளிப்பாய்ச்சலானது உட்பாய்ச்சலுக்குச் சமனாகும் விதத்தைக் காட்டுக.

விடை

வெளிப்பாய்ச்சல் = உட்பாய்ச்சல்

$$
\begin{aligned}
S + T + M &= I + G + X \\
-120 + 1,100 + 200 &= 500 + 300 + 380 \\
1,180 &= 1,180
\end{aligned}
$$

## சமநிலைத் தேசிய வருமான மட்டத்தை வரைபட முறையில் கணிப்பிடல்

***உதாரணம் 1:***

எளிய பொருளாதாரம் ஒன்று தொடர்பான தரவுகள் பின்வருமாறு

$C = 500 + 0.75y$


$I = 300$ மில்லியன் ரூபா

சமநிலை வெளியீட்டு மட்டத்தை வரைபில் காட்டுக.

***குறிப்பு***

வரைபை வரைவதற்கு அட்டவணை தயாரிக்கப்படல் வேண்டும். ஏதாவது இரு வருமான மட்டங்களை எடுத்து அவற்றுக்குரிய நுகர்வின் அளவுகளைக் கணிப்பிட வேண்டும்.

| Y | C | C + I |
|---|---|---|
| 1000 | 1250 | 1550 |
| 4000 | 3500 | 3800 |




*குறிப்பு :*

Y=E என்ற 45° .கோடும், C + I என்ற கோடும் சந்திக்கும் நிலையில் சமநிலைத் தேசிய வருமானம் நிர்ணயிக்கப்படும். எனவே வரைபடத்தின்படி சமநிலைத் தேசிய வருமானம் 3200 மில்லியன் ரூபாவாகும்.

***உதாரணம் 2:***

மூடிய பொருளாதாரம் ஒன்று தொடர்பான தரவுகள் பின்வருமாறு


C = 500 + 0.75y

I = 200 மில்லியன் ரூபா

G = 300 மில்லியன் ரூபா

சமநிலை வெளியீட்டு மட்டத்தை வரைபில் காட்டுக. (அட்டவணை தயாரித்தல் வேண்டும்)

| Y | C | C + I | C + I + G |
|---|---|---|---|
| 1000 | 1250 | 1450 | 1750 |
| 5000 | 4250 | 4450 | 4750 |




சமநிலைத் தேசிய வருமானம் = 4000 மில்லியன் ரூபாவாகும்.

*உதாரணம் 3:*


திறந்த பொருளாதாரம் ஒன்று தொடர்பான தரவுகள் பின்வருமாறு

$$C = 300 + 0.75y$$
$$I = 200$$
$$G = 100$$
$$X = 200$$
$$M = 100$$

சமநிலை வெளியீட்டு மட்டத்தை வரைபில் காட்டுக.


அட்டவணை:

| Y | C | C + I | C + I + G | C + I + G + (x - m) |
|---|---|---|---|---|
| 1,000 | 1,050 | 1,250 | 1,350 | 1,450 |
| 3,000 | 2,550 | 2,750 | 2,850 | 2,950 |



## குறிப்பு

எளிய பொருளாதாரம், மூடிய பொருளாதாரம், திறந்த பொருளாதாரம் ஆகியவற்றின் சமநிலை மட்டங்களை பின்வருமாறு ஒரே வரைபடத்தில் காட்டலாம்.




$Y_0$ - சேமிப்பு, முதலீடு என்பன அற்ற எளிய பொருளாதார சமநிலை வருமான மட்டம் $(Y = C)$

$Y_1$ - சேமிப்பு, முதலீடு என்பன காணப்படுகின்ற எளிய பொருளாதார சமநிலை வருமான மட்டம் $(Y = C + I)$

$Y_2$ - மூடிய பொருளாதார சமநிலை வருமான மட்டம் $(Y = C + I + G)$

$Y_3$ - திறந்த பொருளாதார சமநிலை வருமான மட்டம் $(Y = C + I + G + (x - m))$

# பெருக்கிக் கோட்பாடு
## Theory of Multiplier

ஒரு பொருளாதாரத்தில் முதலீடு, அரசசெலவு, ஏற்றுமதி போன்ற மாறிகளில் ஏற்படும் மாற்றமானது நாட்டின் சமநிலைத் தேசிய வருமான மட்டத்தில் எத்தனை மடங்கு மாற்றத்தை ஏற்படுத்துகின்றது என்பதனை அளவிட்டுக் கூறுவது பெருக்கி அல்லது வருமானப் பெருக்கி எனப்படும்.

பெருக்கியானது பின்வரும் முறைகளில் கணிப்பிடப்படும்.

1. எளிய பொருளாதாரத்தில் வருமானப் பெருக்கி பின்வருமாறு கணிப்பிடப்படும்.

$$\text{வருமான பெருக்கி} = \frac{1}{MPS}$$

அதாவது எல்லை சேமிப்பு நாட்டத்தின் தலைகீழ்ப்படுத்திய பெறுமதியே இங்கு பெருக்கியாகக் கொள்ளப்படும்.

***உதாரணம்*** : ஒரு பொருளாதாரத்தின் எல்லை நுகர்வு நாட்டத்தின் பெறுமதி 0.8 எனின்,

$$\text{பெருக்கி } (K) = \frac{1}{MPS}$$

$$= \frac{1}{1 - 0.8}$$

$$= \frac{1}{0.2}$$

$$= 5$$

இங்கு பெருக்கி 5 என்பதன் கருத்து முதலீடு ஒரு மடங்கினால் அதிகரித்தால் சமநிலைத் தேசிய வருமானம் 5 மடங்கினால் அதிகரிக்கும் என்பதாகும்.

***உதாரணம்*** : எளிய பொருளாதாரமொன்றின் நுகர்வுச்சார்பு $C = 100 + 0.8y$ ஆகவும் முதலீடு $I = 200$ மில்லியன் ரூபாவாகவும் காணப்படுகின்றது எனக் கொள்க.

(i) சமநிலை வெளியீட்டு மட்டம் யாது?

$$Y = C + I$$

$$= 100 + 0.8y + 200$$

$$0.2\,Y = 300$$

$$Y = 1500 \text{ மில்லியன் ரூபா}$$

(ii) பெருக்கியின் பெறுமதி யாது?

$$\text{பெருக்கி (K)} = \frac{1}{MPS}$$

$$= \frac{1}{0.2}$$

$$= 5$$

(iii) முதலீடானது 100 மில்லியன் ரூபாவினால் அதிகரிப்பின் சமநிலை வெளியீட்டு மட்டத்தில் எத்தகைய மாற்றங்கள் ஏற்படும்?

$$5 \times 100 = 500$$

∴ சமநிலை வெளியீட்டு மட்டமானது 500 மில்லியன் ரூபாவினால் அதிகரிக்கும்.

2. மூடிய பொருளாதாரமொன்றில் வருமானப் பெருக்கியானது பின்வருமாறு கணிப்பிடப்படும்.

$$\text{வருமானப் பெருக்கி} = \frac{1}{MPS + (MPC \times \text{வரிவீதம்})}$$

***உதாரணம்*** : மூடிய பொருளாதாரம் பற்றிய தரவுகள் பின்வருமாறு

| | | | |
|---|---|---|---|
| நுகர்வு | C | = | 100 + 0.75yd |
| முதலீடு | I | = | 300 மில்லியன் ரூபா |
| அரச செலவு | G | = | 200 மில்லியன் ரூபா |
| நேர் வரி | T | = | 0.2 Y |

(i) சமநிலைத் தேசிய வருமானமட்டம் யாது?

$$Y = C + I + G$$
$$= 100 + 0.75yd + 300 + 200$$
$$= 600 + 0.75\,(Y - 0.2y)$$
$$= 600 + 0.6y$$
$$0.4\,y = 600$$

Y = 1500 மில்லியன் ரூபா

**(ii)** பெருக்கியின் பெறுமதி யாது?

$$\text{பெருக்கி (K)} = \frac{1}{MPS + (MPC \times \text{வரிவீதம்})}$$

$$= \frac{1}{0.25 + (0.75 \times 0.2)}$$

$$= \frac{1}{0.25 + 0.15}$$

$$= \frac{1}{0.4}$$

$$= 2.5$$

*குறிப்பு* : இங்கு வருமானப் பெருக்கி / பெருக்கி 2.5 என்பதன் கருத்து முதலீடு அல்லது அரச செலவானது ஒரு மடங்கால் மாறினால் சமநிலைத் தேசிய வருமானமானது 2.5 மடங்கினால் மாறும் என்பதாகும்.

**(iii)** அரச செலவானது 200 மில்லியன் ரூபாவினால் அதிகரிப்பின் புதிய சமநிலைத் தேசிய வருமானம் யாது?

$$200 \times 2.5 = 500$$

$$Y = 1500$$

$$\therefore \text{புதிய } Y = 2000 \text{ மில்லியன் ரூபா}$$

***3. திறந்த பொருளாதாரமொன்றில் பெருக்கியானது பின்வருமாறு கணிப்பிடப்படும்.***

$$\text{வருமானப் பெருக்கி} = \frac{1}{MPS + (MPC \times \text{வரிவீதம்}) + MPM}$$

***உதாரணம்*** : திறந்த பொருளாதாரம் பற்றிய தரவுகள் பின்வருமாறு

நுகர்வு $C = 0.9\,Yd$

முதலீடு $I = 200$ மில்லியன் ரூபா

அரச செலவு $G = 150$ மில்லியன் ரூபா

வரி $T = 0.1\,Y$

ஏற்றுமதி $X = 100$ மில்லியன் ரூபா

இறக்குமதி $M = 0.11\,y$

கணிப்பிடுக. :

(i) சமநிலை வெளியீட்டு மட்டம் யாது?

$$
\begin{aligned}
Y &= C + I + G + (X - M) \\
&= 0.9\,Yd + 200 + 150 + (100 - 0.11y) \\
&= 0.9\,(Y - 0.1Y) + 450 - 0.11\,Y \\
&= 0.81\,Y + 450 - 0.11Y \\
&= 0.7\,Y + 450 \\
0.3\,Y &= 450 \\
Y &= 1500 \text{ மில்லியன் ரூபா}
\end{aligned}
$$

(ii) பெருக்கியின் பெறுமதி யாது?

$$\text{பெருக்கி } (K) = \frac{1}{MPS + (MPC \times \text{ வரிவீதம் }) + MPM}$$

$$= \frac{1}{0.1 + (0.9 \times 0.1) + 0.11}$$

$$= \frac{1}{0.1 + 0.09 + 0.11}$$

$$= \frac{1}{0.3}$$

$$= 3.33$$

*குறிப்பு* : இங்கு வருமானப்பெருக்கி 3.33 என்பதன் கருத்து முதலீடு, அரசசெலவு, ஏற்றுமதி போன்ற மாறிகள் ஒரு மடங்கால் மாறினால் நாட்டின் சமநிலைத் தேசிய வருமானம் 3.33 மடங்கால் மாறும் என்பதாகும்.

*குறிப்பு* : இங்கு MPM என்பது எல்லை இறக்குமதி நாட்டத்தினைக் குறிக்கும்.

$$MPM = \frac{\triangle M}{\triangle Y}$$

வரிவீதம் என்பது எல்லை வரி நாட்டத்தினைக் (MPT) குறிக்கும்.

$$MPT = \frac{\triangle T}{\triangle Y}$$

# தேசிய வருமான கணிப்பீடுகள் / தேசிய கணக்கீடு

## NATIONAL ACCOUNTING

ஒரு நாட்டின் உற்பத்திக் காரணிகளான நிலம், உழைப்பு, மூலதனம், முயற்சி என்பனவற்றின் உற்பத்திச் செயற்பாட்டினால் உற்பத்திச் சுற்றோட்டம் ஒன்றும், அதற்கு ஈடான வருமானச் சுற்றோட்டம் ஒன்றும், செலவுச் சுற்றோட்டம் ஒன்றும் ஏற்படுகின்றது. ஒரு வருடகாலப் பகுதியில் இச் சுற்றோட்டங்களின் பெறுமதியினை கணிப்பீடு செய்து கூறுவதே தேசிய கணக்கீடு ஆகும்.

### *தேசிய கணக்கீட்டு முறைகள்*

தேசிய வரும்ானக் கணிப்பீடுகள் பின்வரும் மூன்று முறைகளில் கணிப்பிடப்படுகின்றன.

1) உற்பத்தி முறை
2) வருமான முறை
3) செலவு முறை

மேற்கூறப்பட்ட மூன்று முறைகளிலும் கணிப்பிட்டு பெறப்படும் தேசிய வருமானமானது ஒன்றுக்கொன்று சமமாகவே காணப்படும். அதாவது ஒரு வருட காலப்பகுதியில் உற்பத்திக் காரணிகளைக் கொண்டு உற்பத்தி செய்யப்பட்ட அனைத்து முடிவுப் பொருட்கள் சேவைகளின் பெறுமதி தேசிய உற்பத்தி எனப்படும். இவ் உற்பத்தியில் ஈடுபட்டதற்காக உற்பத்திக் காரணிகள் பெற்ற மொத்த வருமானம் தேசிய வருமானம் எனப்படும். தேசிய உற்பத்தி மீது செலவிடப்பட்ட இத்தேசிய வருமானம் தேசிய செலவு எனப்படும். எனவே தேசிய உற்பத்தி, தேசிய வருமானம், தேசிய செலவு ஆகிய மூன்றும் சமமாகவே காணப்படும்.

**(GNP = GNY = GNE)**

### *உற்பத்தி முறையிலான தேசிய கணக்கீடு*

ஒரு வருட காலப்பகுதியில் ஒரு நாட்டில் நிலம், உழைப்பு, முதல், முயற்சி ஆகிய உற்பத்திக் காரணிகளைப் பயன்படுத்தி உற்பத்தி செய்யப்பட்ட அனைத்து இறுதி / முடிவுப் பொருட்கள் சேவைகளின் பணப் பெறுமதியைக் கூட்டுவதன் மூலம் தேசிய வருமானத்தைக் கண்டறியும் முறையே உற்பத்தி முறையிலான தேசிய கணிப்பீடு ஆகும்.

இவ்வாறு தேசிய உற்பத்தியைக் கணிப்பிடும் போது பல்கணிப்பீட்டுப் பிரச்சினை/இரட்டைக் கணிப்பீட்டுப் பிரச்சினை ஏற்படலாம்.

## பல் கணிப்பீடு /இரட்டைக் கணிப்பீடு

குறிப்பிட்ட வருடத்திற்கான தேசிய உற்பத்தியைக் கணிப்பிடும் போது முடிவுப் பொருட்கள், இடைநிலைப் பொருட்கள், மூலப் பொருட்கள் என பல்வேறு வகையான பொருட்களின் உற்பத்தியையும் கணிப்பீட்டில் சேர்த்தால் இங்கு ஒரு உற்பத்தியானது இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட தடவைகள் கணிப்பீட்டுக்குள் சேர்க்கப்படக்கூடும். இதுவே பல்கணிப்பீடாகும்.

அதாவது இடைநிலைப் பொருட்கள், மூலப்பொருட்கள் என்பனவற்றின் உற்பத்திப் பெறுமதிகள் அவற்றைக் கொண்டு உற்பத்தி செய்யப்பட்ட இறுதி /முடிவுப் பொருட்களுக்குள் அடங்கியிருக்கும் போது இடைநிலைப் பொருட்கள், மூலப்பொருட்கள் என்பனவற்றின் பெறுமதிகளை தேசிய உற்பத்திக் கணிப்பீட்டில் மீண்டும் சேர்த்தால் அவை இரண்டு /இரண்டுக்கு மேற்பட்ட தடவைகள் தேசிய உற்பத்திக் கணிப்பீட்டில் இடம் பெறுவதே பல்கணிப்பீடாகும்.

*உதாரணம் :*

தைத்த ஆடையின் உற்பத்திப் பெறுமதியினுள் துணியின் உற்பத்திப் பெறுமதியும், துணியின் உற்பத்திப் பெறுமதியினுள் நூலின் உற்பத்திப் பெறுமதியும், நூலின் உற்பத்திப் பெறுமதியினுள் பஞ்சின் உற்பத்திப் பெறுமதியும் அடங்கியிருக்கும் போது இவை ஒவ்வொன்றினதும் உற்பத்திப் பெறுமதிகளை தேசிய கணக்கீட்டில் சேர்க்கும் போது பல்கணிப்பீட்டுப் பிரச்சனை ஏற்படும்.

## பல்கணிப்பீட்டு முறையை நீக்குதல்

தேசிய உற்பத்தியைக் கணிப்பிடும் போது ஏற்படும் பல்கணிப்பீட்டுப் பிரச்சினையை நீக்குவதற்கு பின்வரும் இரண்டு முறைகள் பயன் படுத்தப்படலாம்.

(1) கூட்டிய பெறுமதி முறை

(2) இறுதி உற்பத்திப் பெறுமதி முறை

## (1) கூட்டிய பெறுமதி முறை / சேர்க்கப்பட்ட பெறுமதி முறை / ஊட்டிய பெறுமதி முறை

ஒரு பொருளின் உற்பத்திக்கு குறிப்பிட்ட ஒரு நிறுவனத்தினால்/ உற்பத்தியாளரால் மேலதிகமாக சேர்க்கப்பட்ட பெறுமதியே கூட்டிய பெறுமதி ஆகும்.

ஒரு பொருளின் உற்பத்திப் பெறுமதியிலிருந்து அவ்வுற்பத்திக்கான இடைக் கொடுப்பனவுகளை /உள்ளீடுகளின் பெறுமதிகளைக் கழிப்பதன் மூலம் கூட்டிய பெறுமதியைக் கணிப்பிடலாம்.

கூட்டிய பெறுமதி = உற்பத்திப்பெறுமதி - இடைக்கொடுப்பனவு

இக் கூட்டிய பெறுமதியினுள் காரணி வருமானங்களும், மூலதனத்தின் பெறுமானத் தேய்வும் உள்ளடங்கியிருக்கும்.

## (2) இறுதி உற்பத்திப் பெறுமதி முறை

தேசிய உற்பத்தியைக் கணிப்பிடும் போது மூலப் பொருட்கள், இடைத்தரப் பொருட்கள் என்பனவற்றின் உற்பத்திப் பெறுமதிகளைக் கணிப்பீட்டில் சேர்க்காமல் அவற்றைப் பயன்படுத்தி உற்பத்தி செய்யப்பட்ட இறுதி உற்பத்திப் பொருளின் பெறுமதியை மட்டும் கணிப்பீட்டில் சேர்ப்பதனை இம்முறை குறிக்கும்.

இறுதி உற்பத்திப் பெறுமதி முறையானது ஒரு கோட்பாட்டு ரீதியான எண்ணக் கருவாக காணப்படுகின்ற போதிலும் நடைமுறையில் இம்முறையைப் பயன்படுத்துவது சிரமமானதாகும். ஏனெனில் ஒரே பொருள் இறுதி உற்பத்தி பொருளாகவோ அல்லது மூலப் பொருளாகவோ பயன்படுத்தப்படுவதே இதற்குக் காரணமாகும்.

உதாரணமாக கோதுமை மாவினை வீட்டுத்துறையினர் கொள்வனவு செய்தால் அது இறுதி நுகர்வுப் பொருளாகவும் ஒரு பேக்கரி உரிமையாளன் கொள்வனவு செய்தால் அது ஒரு மூலப் பொருளாகவும் காணப்படும்.

எனவேதான் நடைமுறையில் தேசிய உற்பத்தியைக் கணிப்பிடும் போது **கூட்டிய பெறுமதி** முறையே கையாளப்படுகின்றது.

பல்கணிப்பீட்டுப் பிரச்சினையை நீக்குவதற்குக் கையாளப்படும் கூட்டிய பெறுமதி முறை, இறுதி உற்பத்திப் பெறுமதி முறை ஆகியவற்றை பின்வரும் உதாரணம் மூலம் காட்டலாம்.

| விபரம் | உற்பத்தி பெறுமதி (ரூபா) | இடைக் கொடுப்பனவுகள் (ரூபா) | கூட்டிய பெறுமதி (ரூபா) |
|---|---|---|---|
| பஞ்சு உற்பத்தி | 1,000 | 0 | 1,000 |
| நூல் உற்பத்தி | 3,000 | 1,000 | 2,000 |
| துணி உற்பத்தி | 6,000 | 3,000 | 3,000 |
| ஆடை உற்பத்தி | 10,000 | 6,000 | 4,000 |
| மொத்தம் | 20,000 | 10,000 | 10,000 |

எனவே உதாரணத்தின்படி கூட்டிய பெறுமதிகளின் மொத்தமாகிய 10,000 ரூபாவினை மட்டும் தேசிய உற்பத்திக் கணிப்பீட்டில் சேர்க்கலாம். அல்லது இறுதி உற்பத்திப் பொருளாகிய ஆடை உற்பத்தியின் பெறுமதி 10,000 ரூபாவினை மட்டும் தேசிய உற்பத்திக் கணிப்பீட்டில் சேர்க்கலாம். இதன் மூலம் பல்கணிப்பீட்டுப் பிரச்சனை நீக்கப்பட முடியும்.

## மொத்த உள்நாட்டு உற்பத்தி

## Gross Domestic Production (GDP)

ஒரு வருட காலப் பகுதியில் ஒரு நாட்டின் அரசியல் எல்லைக்குள் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள் சேவைகளின் கூட்டப்படும் பெறுமதிகளின் மொத்த தொகையே மொத்த உள்நாட்டு உற்பத்தி ஆகும்.

அதாவது ஒரு வருடத்தில் ஒரு நாட்டுக்குள் உற்பத்தி செய்யப்பட்ட இறுதிப் பொருட்கள் சேவைகளின் மொத்த பணப்பெறுமதியே இதுவாகும்.

மொத்த உள்நாட்டு உற்பத்தி கணிப்பீட்டினுள் பின்வரும் விடயங்கள் அடங்குகின்றன.

1. வேளாண்மை, காட்டுத்தொழில், கடற்றொழில்
2. சுரங்கத்தொழிலும் கல்அகழ்வுத்தொழிலும்
3. தயாரிப்புத் தொழில்
4. கட்டடவாக்கம் /நிர்மாணத் தொழில்
5. மின்சாரம், வாயு, நீர், நலத்துறைப் பணிகள்
6. போக்குவரத்து, களஞ்சியப்படுத்தல், தொடர்பாடல்
7. மொத்த வியாபாரமும் சில்லறை வியாபாரமும்
8. வங்கித்தொழில், காப்புறுதி, அசையாத சொத்துக்கள்
9. குடியிருப்புக்களின் உடமை /வீட்டு உரிமை
10. பொது நிர்வாகமும் பாதுகாப்பு சேவையும்
11. வேறெங்கும் குறிப்பிடப்படாத பணிகள் /ஏனைய சேவைகள்

மேற்கூறப்பட்ட 11 விடயங்களும் பின்வரும் மூன்று பிரதான துறைகளாகப் பிரிக்கப்படுகின்றன.

**(1) விவசாயத்துறை / முதற்துறை**

1. வேளாண்மை, காட்டுத்தொழில், கடற்றொழில்

**(2) கைத்தொழில்துறை / இரண்டாந்துறை**

2. சுரங்கத்தொழிலும் கல் அகழ்வுத் தொழிலும்
3. தயாரிப்புத் தொழில்
4. கட்டடவாக்கம் / நிர்மாணத் தொழில்
5. மின்சாரம், வாயு, நீர், நலத்துறைப்பணிகள்

**(3) சேவைத்துறை / மூன்றாந்துறை**

6. போக்குவரத்து, களஞ்சியப்படுத்தல், தொடர்பாடல்
7. மொத்த வியாபாரமும், சில்லறை வியாபாரமும்
8. வங்கித்தொழில், காப்புறுதி, அசையாத சொத்துக்கள்
9. குடியிருப்புக்களின் உடமை / வீட்டு உரிமை.
10. பொது நிர்வாகமும் பாதுகாப்பு சேவையும்
11. ஏனைய சேவைகள்

மேற்கூறப்பட்ட மூன்று பிரதான துறைகளினதும் விடயங்களினதும் கூட்டப்பட்ட பெறுமதிகளை கூட்டுவதன் மூலம் பெறப்படுவது மொத்த உள்நாட்டு உற்பத்தி ஆகும்.

## பொருளாதாரக் கட்டமைப்பும் பொருளாதாரக் கட்டமைப்பு மாற்றமும்

ஒரு நாட்டின் குறிப்பிட்ட வருடத்திற்கான மொத்த உள்நாட்டு உற்பத்தியில் விவசாயத்துறை, கைத்தொழில்துறை, சேவைத்துறை ஆகிய ஒவ்வொரு துறைகளும் வகிக்கின்ற சார்பளவான பங்களிப்பினை கூறுவதே பொருளாதாரக் கட்டமைப்பு ஆகும்.

மேற் கூறப்பட்ட மூன்று துறைகளினதும் சார்பளவான பங்களிப்பில் காலத்துக்குக் காலம் ஏற்படும் மாற்றம் பொருளாதாரக் கட்டமைப்பு மாற்றம் எனப்படும். உதாரணமாக ஒரு காலப்பகுதியில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் விவசாயத்துறையின் பங்கு கூடுதலாக இருந்து இன்னுமொரு காலப்பகுதியில் கைத்தொழில் துறையின் பங்கு கூடுதலாக இருப்பின் குறிப்பிட்ட பொருளாதாரத்தின் கட்டமைப்பில் மாற்றம் ஏற்பட்டுள்ளது எனலாம்.

*உதாரணம் :*

குறிப்பிட்ட ஆண்டுக்கான ஒரு பொருளாதாரம் பற்றிய தரவுகள் வருமாறு

| | | |
|---|---|---|
| விவசாயத்துறையில் கூட்டிய பெறுமதி | 38000 | மில்லியன் ரூபா |
| கைத்தொழில் துறையில் கூட்டிய பெறுமதி | 52000 | மில்லியன் ரூபா |
| சேவைத் துறையில் கூட்டிய பெறுமதி | 110000 | மில்லியன் ரூபா |
| ∴ மொத்த உள்நாட்டு உற்பத்தி | 200000 | மில்லியன் ரூபா |

GDP இல் விவசாயத்துறையின் பங்களிப்பு $= \frac{38000}{200000} \times 100 = 19\%$

GDP இல் கைத்தொழில்துறையின் பங்களிப்பு $= \frac{52000}{200000} \times 100 = 26\%$

GDP இல் சேவைத்துறையின் பங்களிப்பு $= \frac{110000}{200000} \times 100 = 55\%$

## மொத்த தேசிய உற்பத்தி

Gross National Production (GNP)

ஒரு வருட காலப்பகுதியில் ஒரு நாட்டுக்குச் சொந்தமான உற்பத்திக் காரணிகளைக் கொண்டு உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள் சேவைகளின் கூட்டப்படும் பெறுமதிகளின் மொத்தத் தொகையே மொத்தத் தேசிய உற்பத்தி ஆகும்.

அதாவது ஒரு நாட்டில் தங்கியிருக்கின்ற அல்லது தங்கியிருக்காத ஆனால் அந்நாட்டுக்குச் சொந்தமான உற்பத்திக்காரணிகளைக் கொண்டு உற்பத்தி செய்யப்பட்ட இறுதிப் பொருட்கள் சேவைகளின் மொத்த பெறுமதியே இதுவாகும்.

மொத்த உள்நாட்டு உற்பத்தியுடன் வெளிநாட்டிலிருந்து கிடைத்த காரணி வருமானத்தை கூட்டி வெளிநாட்டுக்கு அனுப்பிய காரணி வருமானத்தை கழிப்பதன் மூலம் மொத்தத் தேசிய உற்பத்தி கணிப்பிடப் படுகின்றது.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| மொத்தத் தேசிய உற்பத்தி | = | மொத்த உள்நாட்டு உற்பத்தி | + | வெளிநாட்டிலிருந்து கிடைத்த காரணி வருமானம் | - | வெளிநாட்டுக்கு அனுப்பிய காரணி வருமானம் |

அல்லது

| | | | | |
|---|---|---|---|---|
| GNP | = | GDP | + | வெளிநாட்டிலிருந்து கிடைத்த தேறிய காரணி வருமானம் |

| | | | | |
|---|---|---|---|---|
| வெளிநாட்டிலிருந்து கிடைத்த தேறிய காரணி வருமானம் | = | வெளிநாட்டிலிருந்து கிடைத்த காரணி வருமானம் | - | வெளிநாட்டுக்கு அனுப்பிய காரணி வருமானம் |

## வெளிநாட்டிலிருந்து கிடைத்த காரணி வருமானம்

குறிப்பிட்ட நாட்டு உற்பத்திக் காரணிகள் வெளிநாட்டில் உற்பத்தி நடவடிக்கைகளில் ஈடுபட்டு தமது நாட்டுக்கு அனுப்புகின்ற இலாபம், வட்டி போன்றவையே வெளிநாட்டிலிருந்து கிடைத்த காரணி வருமானங்கள் ஆகும்.

இவை குறிப்பிட்ட நாட்டுக்கு சொந்தமான காரணி வருமானங்கள் என்பதனால் அந்நாட்டு மொத்த உள்நாட்டு உற்பத்தியுடன் கூட்டப் படுகின்றன.

## வெளிநாட்டுக்கு அனுப்பிய காரணி வருமானம்

வெளிநாட்டு உற்பத்திக் காரணிகள் குறிப்பிட்ட நாட்டுக்குள் உற்பத்தி நடவடிக்கையில் ஈடுபட்டு தமது நாடுகளுக்கு அனுப்புகின்ற இலாபம், வட்டி போன்றவையே வெளிநாட்டுக்கு அனுப்பிய காரணி வருமானம் ஆகும்.

இவை வெளிநாடுகளுக்குச் சொந்தமான காரணி வருமானங்கள் என்பதனால் குறிப்பிட்ட நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியிலிருந்து கழிக்கப்படுகின்றன.

## நடைமுறை காரணிச் செலவு விலைகளிலான மொத்த தேசிய உற்பத்தி / நடைமுறை காரணிவிலை தேசிய உற்பத்தி / நடப்புவிலை தேசிய உற்பத்தி (GNP at Current Factor Cost Prices)

ஒரு வருட காலப்பகுதியில் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள் சேவைகளின் பணப்பெறுமதியானது அவ்வுற்பத்திக்குப் பயன்படுத்தப்பட்ட உற்பத்திக் காரணிகளின் விலைகளின் அடிப்படையில் கணிப்பிடப் படுவதே **காரணிச் செலவு விலைகளிலான தேசிய உற்பத்தி** ஆகும்.

ஒவ்வொரு ஆண்டும் உற்பத்திக் காரணிகளுக்கு நிலவுகின்ற விலைகளை அடிப்படையாகக் கொண்டு, கணிப்பிடப்படும் தேசிய உற்பத்தியே **நடைமுறை காரணி விலைகளிலான தேசிய உற்பத்தி** ஆகும்.

இவ்வாறு நடைமுறை விலைகளில் தேசிய உற்பத்தியைக் கணிப்பிடும் போது காலத்துக்குக் காலம் விலைகளில் ஏற்படும் அதிகரிப்புக்கள் தேசிய உற்பத்திக் கணிப்பீட்டுக்குள் உள்ளடக்கப்பட்டுவிடும். இதன் காரணமாக நடைமுறை விலைகளில் கணிக்கப்பட்ட தேசிய உற்பத்தியானது ஒரு நாட்டின் உண்மையான / மெய்யான தேசிய உற்பத்தியைக் காட்டாது. இது தேசிய உற்பத்தியின் பணப்பெறுமதியை மாத்திரமே காட்டும். இதனால் இதனை பணத்தேசிய உற்பத்தி எனவும் அழைப்பர்.

ஒரு நாட்டின் நடைமுறைவிலைத் தேசிய உற்பத்தியில் ஏற்படும் மாற்றங்களைக் கொண்டு அந்நாட்டின் உண்மையான உற்பத்தி அளவில் ஏற்பட்ட மாற்றத்தினை அறிய முடியாது என்பதனாலேயே பணவீக்க விளைவுகளை நீக்கி கணிப்பிடப்படுகின்ற நிலையான விலைத்தேசிய உற்பத்தி கணிப்பிடப்படுகின்றது.

## *நிலையான விலைகளிலான மொத்தத் தேசிய உற்பத்தி / மெய்த் தேசிய உற்பத்தி / உண்மைத் தேசிய உற்பத்தி / மாறாவிலைத் தேசிய உற்பத்தி / மெய்நியதிகளிலான தேசிய உற்பத்தி / ஒருமைவிலை மதிப்பீடு*
## (GNP at Constant Factor Cost Prices)

தெரிந்தெடுக்கப்பட்ட ஏதாவது ஒரு அடிப்படை ஆண்டில் நிலவுகின்ற விலைகளை அடிப்படையாகக் கொண்டு கணிக்கப்பட்ட ஒரு ஆண்டுக்குரிய தேசிய உற்பத்தியே நிலையான விலைத் தேசிய உற்பத்தி ஆகும்.

அதாவது நடைமுறை விலைகளில் கணிக்கப்பட்ட தேசிய உற்பத்தியானது பணவீக்க விளைவுகளை உள்ளடக்கியிருப்பதனால் அதனை நீக்கி கணிப்பிடப்படுகின்ற தேசிய உற்பத்தியே மெய்த்தேசிய உற்பத்தி ஆகும்.

எனவே நிலையான விலைத் தேசிய உற்பத்தியானது காலத்துக்கு காலம் விலைகளில் ஏற்படும் மாற்றங்களை உள்ளடக்கமாட்டாது. இதனால் நிலையான விலைத் தேசிய உற்பத்தியில் ஏற்படும் மாற்றமானது ஒரு நாட்டின் உண்மையான தேசிய உற்பத்தியில் ஏற்பட்ட மாற்றத்தினை, அதாவது உற்பத்தியின் மெய்ப் பெறுமதியில் ஏற்பட்ட மாற்றத்தினை காட்டுவதாக அமையும்.

$$\text{நிலையான விலை மொத்த தேசிய உற்பத்தி} = \frac{\text{நடைமுறை விலைகளிலான மொத்த தேசிய உற்பத்தி}}{\text{மொத்த தேசிய உற்பத்திச் சுருக்கி}} \times 100$$

இலங்கையில் நிலையான விலைகளிலான மொத்த தேசிய உற்பத்தியானது 1996 ஆம் ஆண்டு விலைகளை அடிப்படையாகக் கொண்டு (1996 = 100 ) கணிப்பிடப்படுகின்றது.

நிலையான விலைத்தேசிய உற்பத்தியில் ஏற்படும் அதிகரிப்பானது ஒரு நாட்டின் உண்மையான உற்பத்தி அதிகரிப்பை / மெய்த்தேசிய உற்பத்தியின் அதிகரிப்பை காட்டுவதனால் ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சியை அளவிடுவதற்கு நிலையான விலைத் தேசிய உற்பத்தியே பயன்படுத்தப்படுகின்றது.

# மொத்த தேசிய உற்பத்திச் சுருக்கி / உள்ளார்ந்த தேசிய உற்பத்திச் சுருக்கி
(GNP Deflator)

குறிப்பிட்ட வருடத்திற்கான நடைமுறை விலைகளிலான மொத்த தேசிய உற்பத்தியை நிலையான விலைகளிலான மொத்த தேசிய உற்பத்தியாக மாற்றுவதற்குப் பயன்படுத்தப்படுகின்ற நிறையிடப்பட்ட ஓர் விலைச் சுட்டெண்ணே மொத்த தேசிய உற்பத்திச் சுருக்கி ஆகும்.

இச் சுட்டெண் 1996 ஆம் ஆண்டை அடியாண்டாகக் கொண்டு கணிப்பிடப்படுகின்றது. இது நடைமுறை விலைத்தேசிய உற்பத்தியில் காணப்படும் பணவீக்க விளைவுகளை நீக்குவதனால் சுருக்கி (Deflator) எனப்படுகின்றது.

$$\text{மொத்த தேசிய உற்பத்தி சுருக்கி} = \frac{\text{நடைமுறை விலைத் தேசிய உற்பத்தி}}{\text{நிலையான விலைத் தேசிய உற்பத்தி}} \times 100$$

### *மொத்த தேசிய உற்பத்தி சுருக்கியின் பயன்பாடுகள்/ முக்கியத்துவம்*

1. நாட்டின் பணவீக்க போக்கினை அறியலாம்.
2. நாட்டின் உண்மையான தேசிய உற்பத்தியில் ஏற்படும் மாற்றத்தை அறிந்து பொருளாதார வளர்ச்சி வீதத்தை அளவிடலாம்.
3. மக்களின் வாழ்க்கைச் செலவிலும் வாழ்க்கைத் தரத்திலும் ஏற்படும் மாற்றங்களை அளவிடலாம்.
4. அரச ஊழியர்களுக்கான சம்பளம், வாழ்க்கைச்செலவுப்படி என்பனவற்றை அரசாங்கம் நிர்ணயித்துக் கொள்வதற்கு இது உதவும்.
5. அரசின் சார்பில் மத்திய வங்கியானது நாட்டின் பணவீக்க, பணச்சுருக்க நாணயக் கொள்கைகளை கையாள இச்சுட்டெண் பயன்படுகின்றது.

# பொருளாதார வளர்ச்சியும் பொருளாதார வளர்ச்சி வீதமும்
(Economic Growth and Growth Rate)

ஒரு நாட்டின் நிலையான விலைகளில் கணிக்கப்பட்ட மொத்த தேசிய உற்பத்தியில் நீண்ட காலத்தில் ஏற்படும் தொடர்ச்சியான அதிகரிப்பே பொருளாதார வளர்ச்சி ஆகும்.

* இங்கு நீண்ட காலம் என்பது குறைந்தது பத்து வருடங்களைக் குறிக்கும்.

பொருளாதார வளர்ச்சியானது நிலையான விலைகளில் கணிக்கப்பட்ட மொத்த உள்நாட்டு உற்பத்தி, நிலையான விலைகளிலான மொத்த தேசிய உற்பத்தி, நிலையான விலைகளிலான தலா உற்பத்தி என்பனவற்றில் ஏற்படுகின்ற அதிகரிப்பை அடிப்படையாகக் கொண்டு கணிப்பிடப்படும்.

இப் பொருளாதார வளர்ச்சியானது முன்னைய ஆண்டு உற்பத்தியுடன் ஒப்பிடுகையில் நடைமுறை ஆண்டில் எத்தனை சதவீதத்தால் அதிகரித்துள்ளது என்பதனைக் கூறுவதே பொருளாதார வளர்ச்சி வீதம் ஆகும்.

$$\text{பொருளாதார வளர்ச்சி வீதம்} = \frac{\text{நிலையான விலைத் தேசிய உற்பத்தியில் ஏற்பட்ட மாற்றம்}}{\text{முன்னைய வருட நிலையான விலைத்தேசிய உற்பத்தி}} \times 100$$

*உதாரணம் :*

| | |
|---|---|
| 2003 ஆம் ஆண்டுக்கான நிலையான விலைத் தேசிய உற்பத்தி | 2000 மில்லியன் ரூபா |
| 2004 ஆம் ஆண்டுக்கான நிலையான விலைத் தேசிய உற்பத்தி | 2120 மில்லியன் ரூபா |

2004 ஆம் ஆண்டுக்கான பொருளாதார வளர்ச்சி வீதம்

$$= \frac{2120 - 2000}{2000} \times 100$$

$$= 6\%$$

## நடைமுறை சந்தை விலைகளிலான மொத்த தேசிய உற்பத்தி / சந்தை விலை தேசிய உற்பத்தி (GNP at Current Market Prices)

நுகர்வோன் ஒரு பண்டத்திற்கு செலுத்தும் விலையே சந்தை விலையாகும். இவ் விலையானது அரசினால் விதிக்கப்படும் நேரில் வரிகளினால் அதிகரிக்கும் அதேவேளை அரசால் வழங்கப்படும் மானியத்தின் அளவால் குறைவடையும்.

குறிப்பிட்ட வருட காலப்பகுதியில் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள் சேவைகளின் பணப்பெறுமதியானது அவற்றின் சந்தை விலைகளை அடிப்படையாகக் கொண்டு கணிப்பிடப்படுவதே சந்தை

விலைகளிலான மொத்தத் தேசிய உற்பத்தி ஆகும். எனவே இறுதிப் பொருட்கள் சேவைகளின் மொத்த விற்பனைப் பெறுமதியே இதுவாகும்.

நடைமுறைக் காரணி விலைகளில் கணிக்கப்பட்ட மொத்தத் தேசிய உற்பத்தியுடன் மறைமுக வரிகளைக் கூட்டி மானியங்களைக் கழிப்பதன் மூலம் சந்தை விலைத் தேசிய உற்பத்தியானது கணிப்பிடப்படும். இதனைப் பின்வருமாறு காட்டலாம்.

நடைமுறைச் சந்தை விலைத் தேசிய உற்பத்தி = நடைமுறைக் காரணி விலைத் தேசிய உற்பத்தி + மறைமுக வரிகள் - மானியம்

காரணிவிலைத் தேசிய உற்பத்தி = சந்தைவிலைத் தேசிய உற்பத்தி + மானியம் - மறைமுக வரிகள்

சந்தை விலைத் தேசிய உற்பத்தி = நடைமுறைக் காரணி விலைத் தேசிய உற்பத்தி + தேறிய மறைமுக வரிகள்

தேறிய மறைமுக வரி = மறைமுக வரி - மானியம்

## தேறிய தேசிய உற்பத்தி / தேறிய மொத்தத் தேசிய உற்பத்தி (Net Gross National Production)

குறிப்பிட்ட ஆண்டுக்கான ஒரு நாட்டின் மொத்த தேசிய உற்பத்தியின் ஒரு பகுதி அவ்வுற்பத்தியில் பயன்படுத்தப்பட்ட மூலதனச் சொத்துக்களில் ஏற்பட்ட தேய்வினை ஈடு செய்வதற்காக ஒதுக்கப் படுகின்றது. இவ்வாறு மூலதன தேய்வுக்காக ஒதுக்கப்பட்டது போக மிகுதியாக உள்ள உற்பத்தியே தேறிய தேசிய உற்பத்தி ஆகும். மொத்த தேசிய உற்பத்தியிலிருந்து மூலதனத் தேய்வினை / பெறுமானத் தேய்வினை கழிப்பதன் மூலம் தேறிய தேசிய உற்பத்தியானது கணிப்பிடப்படும்.

இதனைப் பின்வருமாறு காட்டலாம்.

தேறிய தேசிய உற்ப்பத்தி = மொத்தத் தேசிய உற்பத்தி - பெறுமானத் தேய்வு

## தலா உற்பத்தி /ஆள்வீத மொத்த தேசிய உற்பத்தி

ஒரு ஆண்டுக்குரிய ஒரு நாட்டின் மொத்தத் தேசிய உற்பத்தியினை அந்நாட்டு மக்கள் அனைவரிடையேயும் சமமாகப் பங்கிட்டால் ஒருவருக்குக் கிடைக்கக் கூடிய சராசரி உற்பத்தியே தலா உற்பத்தி ஆகும்.

இது பின்வருமாறு கணிப்பிடப்படும்.

$$\text{தலா மொத்தத் தேசிய உற்பத்தி} = \frac{\text{மொத்தத் தேசிய உற்பத்தி}}{\text{நடு ஆண்டுச் சனத்தொகை}}$$

நாடுகளின் பொருளாதார அபிவிருத்தியினை அளவிடுவதற்கு தலா உற்பத்தியும் ஓர் குறிகாட்டியாக பயன்படுத்தப்படுகின்றது. எனினும் இத் தலா உற்பத்தியானது பல குறைபாடுகளைக் கொண்டதாகக் காணப்படுகின்றது.

அந்த வகையில் ஓர் அபிவிருத்திச் சுட்டெண் என்ற வகையில் தலா உற்பத்தியில் காணப்படும் குறைபாடுகள் பின்வருமாறு

1. எல்லோரும் சமமான வருமானத்தை/ உற்பத்தியைப் பெறுவதாகக் காட்டப்படுகின்றது. ஆனால் நடைமுறையில் இவ்வாறான சமமான வருமானப் பங்கீடு காணப்படுவதில்லை.
2. வருமானம் உழைக்காத சிறுவர்கள், மாணவர்கள் போன்றோரும் வருமானம் உழைப்பதாகக் காட்டப்படுகின்றது.
3. தலா உற்பத்தியைக் கொண்டு அடிப்படைத் தேவைகள் எந்த அளவு நிறைவேறியுள்ளன என்பதனை அறிந்து கொள்ள முடியாது.
4. ஏனைய அபிவிருத்திக் குறிகாட்டிகளான சராசரி ஆயுட்காலம், சுகாதாரம், போசாக்கு மட்டம், கல்வி மட்டம் போன்றவற்றை தலா உற்பத்தியைக் கொண்டு அளவிட முடியாது.
5. உற்பத்தியில் வளர்ச்சி கண்ட துறைகளை தலா உற்பத்தியைக் கொண்டு கண்டறிய முடியாது.
6. சூழல் மாசடைதல், சுற்றாடல் அழிவுறல் போன்றவை தேசிய உற்பத்தி கணிப்பீட்டில் உள்ளடக்கப்படாமையினால் தலா உற்பத்தியும் குறைபாடுடையதாகக் காணப்படுகின்றது.
7. சட்ட விரோத உற்பத்திகள், கறுப்புச் சந்தை நடவடிக்கைகள் சுயதேவை உற்பத்திகள் போன்றவற்றை தேசிய உற்பத்தி கணிப்பீடுகள் உள்ளடக்காமையினால் தலா உற்பத்தியும் குறைபாடுடையதாகக் காணப்படுகின்றது.

## உற்பத்தி முறையிலான தேசிய கணக்கீட்டு அட்டவணை

1. விவசாயம், காட்டுத்தொழில், கடற்றொழில்
2. சுரங்கத்தொழிலும், கல் அகழ்வுத் தொழிலும்
3. தயாரிப்புத் தொழில்
4. நிர்மாணத் தொழில்/ கட்டடவாக்கம்
5. மின்சாரம், வாயு, நீர், நலத்துறைப் பணிகள்
6. போக்குவரத்து, களஞ்சியப்படுத்தல், தொடர்பாடல்
7. மொத்த சில்லறை வியாபாரம்
8. வங்கித்தொழில், காப்புறுதி, உண்மைச் சொத்துக்கள்
9. குடியிருப்புக்களின் உடமை
10. பொது நிர்வாகமும் பாதுகாப்பும்
11. ஏனைய பணிகள்
12. நடைமுறைக் காரணிச் செலவு விலைகளிலான மொத்த உள்நாட்டு உற்பத்தி (1 + 2 + 3 + ............ + 11)
13. வெளிநாட்டிலிருந்து கிடைத்த காரணி வருமானம்
14. வெளிநாட்டுக்கு அனுப்பிய காரணி வருமானம்
15. நடைமுறைக் காரணிச் செலவு விலைகளிலான மொத்தத் தேசிய உற்பத்தி (12 + 13 - 14)
16. நேரில் வரிகள்
17. மானியம்
18. நடைமுறைச் சந்தை விலைகளிலான மொத்தத் தேசிய உற்பத்தி (15 + 16 - 17)
19. மூலதனத் தேய்வு / பெறுமானத்தேய்வு
20. தேறிய தேசிய உற்பத்தி (18 - 19)
21. மொத்த தேசிய உற்பத்திச் சுருக்கி
22. நிலையான விலைகளிலான மொத்தத் தேசிய உற்பத்தி $\left(\frac{15}{21} \times 100\right)$
23. முன்னைய வருட நிலையான விலைகளிலான மொத்த தேசிய உற்பத்தி

24. பொருளாதார வளர்ச்சி வீதம் $\left(\frac{22-23}{23} X 100\right)$

25. நடு ஆண்டுச் சனத்தொகை

26. தலா உற்பத்தி நடைமுறை விலைகளில் $\left(\frac{15}{25}\right)$

27. தலா மெய்த் தேசிய உற்பத்தி $\left(\frac{22}{25}\right)$

28. வெளிநாட்டிலிருந்து கிடைத்த தேறிய காரணி வருமானம் (13 - 14)

29. வெளிநாட்டுக்கு அனுப்பிய தேறிய காரணி வருமானம் (14 -13)

30. தேறிய மறைமுக வரி (16 - 17)

31. தேறிய மானியம் (17 - 16)

## வருமான முறையிலான தேசிய கணக்கீடு

ஒரு வருட காலப்பகுதியில் ஒரு நாட்டில் பொருட்கள் சேவைகளின் உற்பத்தியில் ஈடுபட்டதற்காக உற்பத்திக் காரணிகளின் உடைமையாளர்கள் பெற்ற வாடகை, கூலி, வட்டி, இலாபம் என்பனவற்றைக் கூட்டுவதன் மூலம் தேசிய வருமானத்தைக் கணிப்பிடும் முறையே வருமான முறையிலான தேசிய கணக்கீடு ஆகும்.

## வருமான வழி கணிப்பீட்டில் உள்ளடக்கப்படாத வருமான வகைகள்

1. மாற்றல் வருமானங்கள் / ஒரு பக்க பெறுவனவுகள் (ஓய்வூதியம், மானிய உதவுதொகைகள், வெளிநாட்டு தனியார் மாற்றல் பெறுவனவுகள்)
2. ஏற்கனவே உற்பத்தி செய்யப்பட்ட / பாவித்த பொருட்களை மறுவிற்பனை செய்வதன் மூலம் பெறும் வருமானங்கள் (பழைய வீடு, பாவித்த தளபாடங்கள் என்பனவற்றை விற்பனை செய்வதன் மூலம் பெறும் வருமானங்கள்)
3. அரசுக்குக் கடன் வழங்கி பெறும் வட்டி வருமானங்கள்

## வருமான வகைகள்

ஒரு நாட்டின் வருமானத்தை பின்வரும் தலைப்புகளின் கீழ் கணிப்பிட முடியும்.

### 1. வாடகை

பொருட்கள் சேவைகளின் உற்பத்திக்காக நிலையான சொத்துக்களைக் குத்தகைக்கு வழங்குவதன் மூலம் உழைக்கும் வாடகை வருமானத்தை இது குறிக்கும். தனியார் துறை, அரசதுறை வருமானங்கள் இதிலடங்கும். இவ்வாடகை வருமானத்துக்குள் நிலையான சொத்துக்களின் பெறுமானத் தேய்வும் உள்ளடக்கப் பட்டிருக்கும்.

### 2. கூலிகளும் சம்பளங்களும்

பொருட்கள் சேவைகளின் உற்பத்தியில் பங்கு கொண்டதற்காக ஊழியர்கள் பெற்ற சகல கூலிகளையும் சம்பளங்களையும் இது குறிக்கும். இதற்குள் தனியார்துறை, அரசதுறை வருமானங்கள் உள்ளடக்கப்படும்.

### 3. வட்டி

உற்பத்தி நடவடிக்கைகளுக்கு கடன் வழங்குவதன் மூலம் பெறப்படும் வட்டி வருமானத்தை இது குறிக்கும். இதற்குள் தனியார்துறை, அரசதுறை வருமானங்கள் உள்ளடங்கும்.

### 4. இலாபம்

தனியார்துறை, அரசதுறை ஆகியவற்றில் காணப்படும் அனைத்து உற்பத்தி நிறுவனங்களும் உழைக்கும் மொத்தலாபங்கள் யாவும் இதில் உள்ளடக்கப்படும். இதற்குள் ஒதுக்கங்கள், பகிரப்படாத இலாபங்கள் என்பனவும் அடங்கியிருக்கும்.

### 5. சுயதொழில் வருமானங்கள்

சுயதொழில் முயற்சிகள் மூலம் பெறப்படும் வருமானங்களை இது குறிக்கும். இதற்குள், இலாபம், கூலி, வாடகை, வட்டி என பல்வேறு வருமானங்களும் அடங்குவதனால் இதனை கலப்பு வருமானம் எனவும் கூறுவர். சுயதொழில் வருமானங்களும் பெறுமானத் தேய்வினை உள்ளடக்கியதாகக் காணப்படும்.

மேற்கூறப்பட்ட விடயங்களைக் கூட்டுவதன் மூலம் மொத்த உள்நாட்டு வருமானத்தைக் கணிப்பிடலாம்.

இதனை பின்வருமாறு காட்டலாம்.

| | | |
|---|---|---|
| 1. | வாடகை | XXXXX |
| 2. | கூலி | XXXXX |
| 3. | வட்டி | XXXXX |
| 4. | இலாபம் | XXXXX |
| 5. | பெறுமானத்தேய்வு | XXXXX |
| | மொத்த உள்நாட்டு வருமானம் | XXXXX |

## மொத்த உள்நாட்டு வருமானம்

ஒரு வருட காலப்பகுதியில் ஒரு நாட்டின் அரசியல் எல்லைக்குள் உற்பத்தியில் ஈடுபட்டதற்காக உற்பத்திக் காரணிகளின் உடமை யாளர்கள் பெற்ற வாடகை, கூலி, வட்டி, இலாபம் ஆகிய வருமானங் களின் மொத்த பெறுமதியே மொத்த உள்நாட்டு வருமானம் ஆகும். இவ் மொத்த உள்நாட்டு வருமானத்துக்குள் உற்பத்தியில் பங்கு கொண்ட நிலையான சொத்துக்களின் பெறுமான தேய்வும் உள்ளடங்கியிருக்கும்.

## மொத்த தேசிய வருமானம்

ஒரு வருட காலப்பகுதியில் ஒரு நாட்டைச் சேர்ந்த / அந்நாட்டுக்குச் சொந்தமான உற்பத்திக் காரணிகள் அந்நாட்டுக்கு உள்ளேயும் வெளியேயும் பொருட்கள் சேவைகளின் உற்பத்தியில் ஈடுபட்டதற்காக பெற்ற வாடகை, கூலி, வட்டி, இலாபம் ஆகிய வருமானங்களின் கூட்டுத்தொகையே மொத்தத் தேசிய வருமானம் ஆகும். இது பின்வருமாறு காட்டலாம்.

மொத்தத் தேசிய வருமானம் = மொத்த உள்நாட்டு வருமானம் + வெளிநாட்டிலிருந்து கிடைத்த தேறிய காரணி வருமானம்

## தேறிய தேசிய வருமானம்

குறிப்பிட்ட வருடத்திற்கான ஒரு நாட்டின் மொத்தத் தேசிய வருமானத்தின் ஒரு பகுதி அவ்வாண்டில் மூலதனச் சொத்துக்களின் தேய்வினை ஈடுசெய்வதற்காக ஒதுக்கப்படுகின்றது. இவ்வாறு மூலதனத் தேய்விற்காக ஒதுக்கியது போக எஞ்சியுள்ள தொகையே தேறிய தேசிய வருமானம் ஆகும்.

இதனைப் பின்வருமாறு காட்டலாம்.

| | | | | |
|---|---|---|---|---|
| தேறிய தேசிய வருமானம் | = | மொத்தத் தேசிய வருமானம் | - | பெறுமானத் தேய்வு / மூலதனத் தேய்வு |

## மெய்த்தேசிய வருமானம் / நிலையான விலைகளிலான மொத்த தேசிய வருமானம்

குறிப்பிட்ட வருடத்திற்கான ஒரு நாட்டின் நடைமுறை விலைகளிலான மொத்தத் தேசிய வருமானத்தில் காணப்படும் பணவீக்க விளைவுகளை நீக்கி கணிப்பிடப்படும் வருமானமே மெய்த்தேசிய வருமானம் ஆகும்.

அதாவது ஏதாவது ஒரு அடியாண்டின் விலைகளை அடிப்படையாகக் கொண்டு நடைமுறை ஆண்டுக்கான தேசிய வருமானத்தை கணிப்பிடுவதனை இது குறிக்கும்.
இதனை பின்வருமாறு காட்டலாம்.

$$\text{மெய்த்தேசிய வருமானம்} = \frac{\text{நடைமுறை விலைத் தேசிய வருமானம்}}{\text{மொத்தத் தேசிய உற்பத்திச் சுருக்கி}} \times 100$$

*குறிப்பு* : மூடிய பொருளாதாரத்தில் நிலையான விலைகளிலான மொத்த தேசிய உற்பத்தியும் மெய்த்தேசிய வருமானமும் சமமாகக் காணப்படும்.

ஆனால் ஏற்றுமதி, இறக்குமதி என்பன இடம்பெறுகின்ற திறந்த பொருளாதாரம் ஒன்றில் வர்த்தகமாற்று வீதத்தில் ஏற்படுகின்ற தேறிய விளைவுகள் மெய்த் தேசிய வருமானத்தைப் பாதிக்கின்றது. அதாவது நடைமுறையில் திறந்த பொருளாதாரம் ஒன்றில் மெய்த்தேசிய உற்பத்தியுடன் வர்த்தக மாற்றுவீத தேறிய விளைவுகளையும் கூட்டுவதன் மூலமே மெய்த்தேசிய வருமானம் பெறப்படுகின்றது.

| | | | | |
|---|---|---|---|---|
| மெய்த் தேசிய வருமானம் | = | மெய்த்தேசிய உற்பத்தி | + | வர்த்தக மாற்றுவீத தேறிய விளைவுகள் |

*குறிப்பு* : வர்த்தக மாற்றுவீதம் என்பது ஒரு நாட்டின் ஏற்றுமதியின் இறக்குமதி இயலளவினைக் குறிக்கின்றது. அதாவது ஏற்றுமதி அலகொன்றின் இறக்குமதி ஆற்றலை/ கொள்வனவு சக்தியினை / மெய்வருமானத்தினைக் குறிக்கின்றது.

அதாவது ஒரு அலகு ஏற்றுமதியைக் கொண்டு எத்தனை அலகு பொருட்களை இறக்குமதி செய்யலாம் என்பதனை அளவிட்டுக் கூறுவதே வர்த்தக மாற்றுவீதம் ஆகும். இது பின்வருமாறு கணிப்பிடப்படும்.

$$\text{வர்த்தக மாற்று வீதம்} = \frac{\text{ஏற்றுமதி விலைச் சுட்டெண்}}{\text{இறக்குமதி விலைச் சுட்டெண்}} \times 100$$

எனவே வர்த்தக மாற்றுவீதத்தில் ஏற்படுகின்ற தேறிய விளைவுகள் எதிர்க்கணியமாக அமைந்தால் மெய்த்தேசிய வருமானம் குறைவடையும். மாறாக வர்த்தக மாற்றுவீத தேறிய விளைவுகள் நேர்க்கணியமாக அமைந்தால் மெய்த்தேசிய வருமானம் அதிகரிக்கும்.

## தலா வருமானம் /
## ஆள்வீத மொத்த தேசிய வருமானம்

குறிப்பிட்ட ஒரு ஆண்டுக்கான ஒரு நாட்டின் மொத்த தேசிய வருமானத்தை அந்நாட்டு மக்கள் அனைவரிடையேயும் சமமாகப் பங்கிட்டால் ஒருவருக்குக் கிடைக்கக் கூடிய சராசரி வருமானமே தலா வருமானம் ஆகும்.

தலா வருமானம் பின்வருமாறு கணிப்பிடப்படும்.

$$\text{தலா வருமானம்} = \frac{\text{மொத்தத் தேசிய வருமானம்}}{\text{நடு ஆண்டு சனத்தொகை}}$$

# வீட்டுத்துறையினரின் வருமானமும் வீட்டுத்துறையினரின் செலவிடக்கூடிய வருமானமும்

## *வீட்டுத்துறை வருமானம் / குடித்தன வருமானம் / தனிநபர்களின் வருமானம்*

குறிப்பிட்ட வருட காலப்பகுதியில் ஒரு நாட்டினல் குடித்தனத்துறையினர் பெற்ற வருமானமே குடித்தன வருமானமாகும்.

குறிப்பிட்ட ஆண்டுக்கான மொத்த தேசிய வருமானத்திலிருந்து வீட்டுத்துறையினருக்கு கிடைக்காத வருமானங்களைக் கழித்து, மொத்த தேசிய வருமானத்தில் இடம்பெறாத ஆனால் வீட்டுத்துறையினருக்கு கிடைக்கின்ற வருமானங்களைக் கூட்டுவதன் மூலம் குடித்தன வருமானத்தைக் கணிப்பிடலாம்.

இதனைப் பின்வருமாறு காட்டலாம்.

| | | |
|---|---|---|
| குடித்தன வருமானம் | = | மொத்த தேசிய வருமானம் - (பெறுமானத்தேய்வு ஒதுக்கம் + நிறுவன வரிகள் + நிறுவன பகிரப்படாத இலாபம் + வரியல்லா அரச வருமானம்) + வீட்டுத்துறையினருக்கான மாற்றல்கள் + அரசுக்குக் கடன் வழங்கி வீட்டுத்துறை பெறும் வட்டி. |

## *வீட்டுத்துறையினரின் செலவிடக்கூடிய வருமானம் / கையாள்தகு வருமானம்*

குறிப்பிட்ட ஆண்டில் ஒரு நாட்டில் குடித்தனத்துறையினர் பெற்ற வருமானத்தில் அவர்கள் எவ்வளவு தொகையினை செலவிடக்கூடியதாக இருக்குமோ அத்தொகையே கையாள்தகு வருமானம் ஆகும்.

குடித்தன வருமானத்திலிருந்து குடித்தன துறையினர் மீதான நேர்வரிகளைக் கழிப்பதன் மூலம் கையாள்தகு வருமானத்தினைக் கணிப்பிடலாம்.

| | | | | |
|---|---|---|---|---|
| குடித்தனத்துறையின் செலவிடக்கூடிய வருமானம் | = | குடித்தன வருமானம் | - | வீட்டுத்துறையினர் மீதான நேர்வரிகள் |

*குறிப்பு* : வீட்டுத்துறையினருக்கான மாற்றல்கள் என்பது பின்வரும் விடயங்களை உள்ளடக்குகின்றது.

1. ஒய்வூதியம்
2. தேறிய வெளிநாட்டு தனியார் மாற்றல்கள்
3. உணவு முத்திரை
4. இலவச பாடநூல்கள், சீருடைகள்
5. விதவை, அநாதை நிதிக் கொடுப்பனவு
6. புலமைப் பரிசில்கள்
7. சமுர்த்தி மற்றும் ஏனைய வீட்டுத்துறையினருக்கான மானியங்கள்

இம்மாற்றல் கொடுப்பனவுகள் நாட்டில் பொருட்கள் சேவைகளின் உற்பத்தி எதனையும் மேற்கொள்ளாமல் வீட்டுத்துறைக்கு இலவசமாக வழங்கப் படுவதனால் இவற்றுக்கு சமமான உற்பத்தி பொருளாதாரத்தில் நடை பெற்றிருக்க மாட்டாது. எனவேதான் மாற்றல் கொடுப்பனவுகள் தேசிய வருமான கணிப்பீட்டில் உள்ளடக்கப்படுவதில்லை.

## *வருமான முறையிலான தேசிய கணக்கீட்டு அட்டவணை*

1. வாடகை
2. கூலியும், சம்பளமும்
3. வட்டி
4. இலாபம்
5. பெறுமானத் தேய்வு /மூலதனத்தேய்வு
6. மொத்த உள்நாட்டு வருமானம் (1 + 2 + 3 + 4 + 5)
7. வெளிநாட்டிலிருந்து கிடைத்த தேறிய காரணி வருமானம்
8. மொத்தத் தேசிய வருமானம் (6 + 7)
9. தேறிய தேசிய வருமானம் (8 - 5)

## செலவு முறையிலான தேசிய கணக்கீடு

ஒரு வருட காலப்பகுதியில் உற்பத்தி செய்யப்பட்ட இறுதிப் பொருட்கள் சேவைகளைக் கொள்வனவு செய்வதற்கு ஏற்பட்ட செலவுகளைக் கூட்டுவதன் மூலம் தேசிய கணக்கீட்டை மேற்கொள்ளும் முறையே செலவு முறையிலான தேசிய கணிப்பீடு ஆகும்.

## செலவு வழிக் கணிப்பீட்டில் உள்ளடக்கப்படாத செலவு வகைகள்

1. அரசினால் மேற்கொள்ளப்படும் மாற்றல் கொடுப்பனவுகள்/ ஒருபக்க கொடுப்பனவுகள்
2. ஏற்கனவே பாவித்த பொருட்களை கொள்வனவு செய்வதற்கு ஏற்படும் செலவுகள்
3. மூலப்பொருட்கள், இடைநிலைப் பொருட்கள், என்பனவற்றை கொள்வனவு செய்வதற்கு ஏற்படும் செலவுகள்
4. அரசினால் மேற்கொள்ளப்படும் வட்டிக் கொடுப்பனவுகள்

## செலவு வகைகள்

செலவுகள் பிரதானமாக பின்வரும் 2 வகையாக பிரிக்கப் படுகின்றன

1. நுகர்வுச் செலவு
2. மூலதனவாக்கம் /முதலீடு

## நுகர்வுச் செலவு (Consumption)

ஒரு வருட காலப்பகுதியில் உற்பத்தி செய்யப்பட்ட நுகர்வுப் பொருட்கள் சேவைகளைக் கொள்வனவு செய்வதற்கு ஏற்பட்ட செலவே நுகர்வுச் செலவு ஆகும்.

நுகர்வுச் செலவு பின்வரும் 2 பிரிவுகளை உள்ளடக்குகின்றது.

1. தனியார் நுகர்வு
2. அரச நுகர்வு /பொது நுகர்வு

## தனியார் நுகர்வு (Private Consumption)

ஒருவருட காலப் பகுதியில் ஒரு நாட்டிலுள்ள தனியார் துறையினர் நுகர்வுப் பொருட்கள் சேவைகளைக் கொள்வனவு செய்வதற்கு ஏற்பட்ட செலவே தனியார் நுகர்வுச் செலவு ஆகும்.

இது பின்வரும் 2 விடயங்களை உள்ளடக்குகின்றது.

1. உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள், காரணியல்லாத சேவைகள் மீதான தனியார் நுகர்வு
2. இறக்குமதி செய்யப்பட்ட பொருட்கள், காரணியல்லாத சேவைகள் மீதான தனியார் நுகர்வு

### *அரச நுகர்வு /பொது நுகர்வு* (Public Consumption)

ஒரு வருட காலப்பகுதியில் ஒரு நாட்டின் அரசதுறையினர் நுகர்வுப் பொருட்கள் சேவைகளைக் கொள்வனவு செய்வதற்கு மேற்கொண்ட செலவே அரச நுகர்வு ஆகும்.

இது பின்வரும் 2 பிரதான பிரிவுகளை உள்ளடக்குகின்றது.

1. மத்திய அரசின் நடைமுறைச் செலவுகள்
2. உள்ளூராட்சி அரசின் நடைமுறைச் செலவுகள்

## மூலதனவாக்கம்/ முதலீட்டுச் செலவு/ மொத்த முதலீடு/ மொத்த உள்நாட்டு மூலதனவாக்கம் (Gross Domestic Capital Formation)

ஒரு வருட காலப்பகுதியில் ஒரு நாட்டின் அரசியல் எல்லைக்குள் முதலீட்டுப் பொருட்கள் மீது மேற்கொள்ளப்பட்ட செலவே மொத்த முதலீடு ஆகும். இது இரண்டு பிரிவுகளை உள்ளடக்கும்.

1. மொத்த உள்நாட்டு நிலையான மூலதனவாக்கம்
2. இருப்புக்களின் மாற்றம்

## மொத்த உள்நாட்டு நிலையான மூலதனவாக்கம் (Gross Domestic Fixed Capital Formation)

ஒரு வருட காலப்பகுதியில் பொருட்கள் சேவைகளின் உற்பத்திக்கென மீண்டும் மீண்டும் பயன்படுத்தக் கூடியதாக உள்ள மூலதனச்சொத்துக்கள் மீது ஈடுபடுத்தப்பட்ட மூலதனமே மொத்த உள்நாட்டு நிலையான மூலதனவாக்கம் ஆகும். அதாவது நிலையான சொத்துக்கள் மீது ஈடுபடுத்தப்பட்ட பணமே இதுவாகும்.

***உதாரணம்*** : இயந்திரங்கள், பொறிகள் , கருவிகள், கட்டடங்கள், தளபாடங்கள் போன்றவை.

இச்சொத்துக்கள் தேய்வடையக்கூடியவை என்பதனால் இவற்றின் தேய்வினை ஈடுசெய்தல் வேண்டும் அல்லது புதிய சொத்துக்களை மாற்றியமைத்தல் வேண்டும்.

மொத்த உள்நாட்டு நிலையான மூலதனவாக்கத்தின் பிரிவுகளாகப் பின்வருவன காணப்படுகின்றன.

1. காணி அபிவிருத்தி
2. பயிரிடலும் மீள் பயிரிடலும்
3. கட்டடவாக்கம்
4. பொறியும் பொறித்தொகுதியும்
5. போக்குவரத்து கருவிகள்
6. ஏனைய மூலதனப் பொருட்கள்

இவற்றைவிட மொத்த உள்நாட்டு நிலையான மூலதனவாக்கத்தை பின்வரும் பிரதான பிரிவுகளாகவும் வகைப்படுத்த முடியும்.

1. அரசினதும் அரச தொழில் முயற்சிகளினதும் நிலையான மூலதனவாக்கம்
2. அரச கூட்டுத்தாபனங்களினதும் தனியார் துறையினதும் நிலையான மூலதனவாக்கம்

## இருப்புக்களின் மாற்றங்கள் / தொக்குகளின் மாற்றம் (Changes in Stocks)

ஒரு நாட்டில் குறிப்பிட்ட ஆண்டின் இறுதியில் காணப்பட்ட இருப்புக்கும் அதற்கு முந்திய ஆண்டின் இறுதியில் காணப்பட்ட இருப்புக்கும் இடையிலான வித்தியாச தொகையே இருப்புக்களின் மாற்றம் ஆகும். அதாவது மூலப் பொருட்கள், முடிவுப்பொருட்கள், அரைகுறை உற்பத்திப் பொருட்கள் என்பனவற்றை உள்ளடக்கி குறிப்பிட்ட ஓர் ஆண்டின் இறுதியில் காணப்பட்ட தொகைக்கும் அதற்கு முந்திய வருட இறுதியில் காணப்பட்ட தொகைக்கும் இடையிலான வேறுபாடே இதுவாகும்.

## மூலதனவாக்கத்தின் மூலங்கள்

ஒரு நாட்டின் மொத்த மூலதனவாக்கமானது பின்வரும் மூலங்களைக் கொண்டு காணப்படுகின்றது.

**1) உள்நாட்டு மூலங்கள்**

இது உள்நாட்டில் மேற்கொள்ளக்கூடிய சேமிப்புக்களின் அளவினைக் குறிக்கின்றது. இதில் பின்வரும் பிரிவுகள் அடங்குகின்றன.

1. வீட்டுத் துறையின் சேமிப்பு
2. நிறுவனத் துறையின் சேமிப்பு
3. அரசாங்க துறையின் சேமிப்பு

- ❖ இங்கு வீட்டுத்துறை சேமிப்பு என்பது வீட்டுத்துறையினர் தமது வருமானத்திலிருந்து நிகழ்கால நுகர்வுக்காக செலவிடப்படாத பகுதியைக் குறிக்கின்றது. (s = y- c)
- ❖ நிறுவனத்துறையின் சேமிப்பு என்பது நிறுவனங்கள் தமது வருமானத்திலிருந்து ஒதுக்கி வைத்துள்ள ஒதுக்கங்கள், பகிரப்படாத இலாபங்கள் போன்றவற்றைக் குறிக்கும்.
- ❖ அரச சேமிப்பு என்பது அரச பாதீட்டில் நடைமுறைக் கணக்கு மிகையினைக் குறிக்கும்.

**2) வெளிநாட்டு மூலங்கள்**

இது பின்வரும் விடயங்களை உள்ளடக்கும்.

1. வெளிநாடுகளிலிருந்தான தனியார் முதலீடுகள், கடன்கள்
2. வெளிநாட்டு நன்கொடைகள், ஏனைய மாற்றல் பெறுவனவுகள்

## மொத்த உள்நாட்டு செலவு
## (Gross Domestic Expenditure)

ஒரு வருட காலப்பகுதியில் ஒரு நாட்டின் அரசியல் எல்லைக்குள் இறுதிப் பொருட்கள் சேவைகள் மீது மேற்கொள்ளப்பட்ட செலவே மொத்த உள்நாட்டுச் செலவு ஆகும்.

இது பின்வருமாறு கணிப்பிடப்படும்.

மொத்த உள்நாட்டுச் செலவு = மொத்த நுகர்வு + மொத்த முதலீடு

அல்லது

மொத்த உள்நாட்டு செலவு = தனியார் நுகர்வு + பொது நுகர்வு + மொத்த உள்நாட்டு நிலையான மூலதனவாக்கம் + இருப்புக்களின் மாற்றம்

## மொத்த உள்நாட்டு உற்பத்தி மீதான செலவு
## (Expenditure on Gross Domestic Production)

ஒரு வருட காலப்பகுதியில் ஒரு நாட்டின் அரசியல் எல்லைக்குள் உற்பத்தி செய்யப்பட்ட இறுதிப் பொருட்கள் சேவைகள் மீது

மேற்கொள்ளப்பட்ட செலவே மொத்த உள்நாட்டு உற்பத்தி மீதான செலவு ஆகும்.

இது பின்வருமாறு கணிப்பிடப்படும்.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| மொத்த உள்நாட்டு உற்பத்தி மீதான செலவு | = | மொத்த உள்நாட்டு செலவு | + | பொருட்கள் காரணியல்லாத சேவைகளின் ஏற்றுமதி | - | பொருட்கள் காரணியல்லாத சேவைகளின் இறக்குமதி |

அல்லது

| | | | | |
|---|---|---|---|---|
| மொத்த உள்நாட்டு உற்பத்தி மீதான செலவு | = | மொத்த உள்நாட்டு செலவு | + | பொருட்கள் காரணியல்லாத சேவைகளின் தேறிய ஏற்றுமதி |

❖ தேறிய ஏற்றுமதி = ஏற்றுமதி - இறக்குமதி

மொத்த உள்நாட்டு உற்பத்தி மீதான செலவானது சந்தை விலையில் கணிக்கப்பட்ட மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு சமனாகக் காணப்படும்.

| | | |
|---|---|---|
| மொத்த உள்நாட்டு உற்பத்தி மீதான செலவு | = | சந்தை விலைகளிலான மொத்த உள்நாட்டு உற்பத்தி |

## மொத்த தேசிய உற்பத்தி மீதான செலவு அட்டவணை

1. உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள் காரணியல்லாத சேவைகள் மீதான தனியார் நுகர்வு.
2. இறக்குமதி செய்யப்பட்ட பொருட்கள் காரணியல்லாத சேவைகள் மீதான தனியார் நுகர்வு
3. மொத்த தனியார் நுகர்வு (1 + 2)
4. மத்திய அரசின் நுகர்வுச் செலவு
5. உள்ளூராட்சி அரசின் நுகர்வுச் செலவு
6. மொத்த அரச நுகர்வு / பொது நுகர்வு (4 + 5)

7. மொத்த நுகர்வுச் செலவு (3 + 6)
8. மொத்த உள்நாட்டு நிலையான மூலதனவாக்கம்
9. தொக்குகளின் மாற்றம் /இருப்புக்களின் மாற்றம்
10. மொத்த உள்நாட்டு மூலதனவாக்கம் /மொத்த முதலீடு (8 + 9)
11. மொத்த உள்நாட்டுச் செலவு (7 + 10)
12. பொருட்கள் காரணியல்லாத சேவைகளின் ஏற்றுமதி
13. பொருட்கள் காரணியல்லாத சேவைகளின் இறக்குமதி
14. மொத்த உள்நாட்டு உற்பத்தி மீதான செலவு (11 + 12 - 13)
15. வெளிநாட்டிலிருந்து கிடைத்த தேறிய காரணி வருமானம்
16. மொத்த தேசிய உற்பத்தி மீதான செலவு (14 + 15)
17. மூலதன தேய்வு
18. தேறிய தேசிய உற்பத்தி மீதான செலவு (16 - 17)

## மொத்த மூலவளங்கள்
## (Total Resources)

குறிப்பிட்ட வருடகாலப் பகுதியில் ஒரு நாட்டிற்குக் கிடைக்கின்ற பொருட்களினதும் சேவைகளினதும் மொத்தப் பெறுமதியே அந்நாட்டின் மொத்த மூலவளங்கள் ஆகும்.

மொத்த மூலவளங்களானது ஒரு நாட்டிற்கு பின்வரும் 2 வழிகளில் கிடைக்கின்றது.

1. மொத்த உள்நாட்டு உற்பத்தி (நடைமுறை சந்தை விலைகளில்)
2. பொருட்கள் காரணியல்லாத சேவைகளின் இறக்குமதி

எனவே மூலவளங்களின் கிடைப்பனவானது உள்நாட்டு உற்பத்தி, இறக்குமதி ஆகியவற்றின் மூலம் கிடைக்கின்றது.

## மூலவளங்களின் பயன்பாடு
## (Utilization of Resources)

உள்நாட்டு உற்பத்தி, இறக்குமதி என்பனவற்றின் மூலம் ஒரு நாடு பெற்றுக்கொண்ட மூலவளங்களை என்னென்ன வழிகளில் பயன்படுத்துகின்றது என்பதனைக் கூறுவதே மூலவளங்களின் பயன்பாடு ஆகும்.

ஒரு நாட்டின் மொத்த மூலவளங்களானது பின்வரும் 3 வழிகளில் பயன்படுத்தப்படுகின்றது.

1. மொத்த நுகர்வு
2. மொத்த உள்நாட்டு மூலதனவாக்கம் / மொத்த முதலீடு
3. பொருட்கள் காரணியல்லாத சேவைகளின் ஏற்றுமதி

எனவே மூலவளங்களின் கிடைப்பனவானது மூலவளங்களின் பயன்பாட்டிற்கு எப்பொழுதும் சமனாக இருக்கும்.

| | | | | |
|---|---|---|---|---|
| உள்நாட்டு உற்பத்தி | + இறக்குமதி | = | நுகர்வு + முதலீடு + ஏற்றுமதி | |

## மொத்த உள்நாட்டு சேமிப்பு
## (Domestic Savings)

ஒரு வருட காலப்பகுதியில் ஒரு நாட்டின் அரசியல் எல்லைக்குள் வீட்டுத்துறையினர், நிறுவனத்துறையினர், அரசதுறையினர் ஆகியோரால் உருவாக்கப்பட்ட சேமிப்புக்களின் மொத்த அளவே மொத்த உள்நாட்டு சேமிப்பு ஆகும்.

மொத்த உள்நாட்டு சேமிப்பு பின்வருமாறு கணிப்பிடப்படும்.

| | | | | |
|---|---|---|---|---|
| மொத்த உள்நாட்டு சேமிப்பு | = | மொத்த முதலீடு | - | பொருட்கள் காரணியல்லாத சேவைகளின் தேறிய இறக்குமதி |

அல்லது

| | | | | |
|---|---|---|---|---|
| மொத்த உள்நாட்டு சேமிப்பு | = | மொத்த உள்நாட்டு உற்பத்தி | - | மொத்த நுகர்வு |

* தேறிய இறக்குமதி = இறக்குமதி - ஏற்றுமதி

## மொத்த உள்நாட்டு சேமிப்பு வீதம்
## (Domestic Savings Ratio)

ஒரு வருட காலப்பகுதியில் ஒரு நாட்டின் மொத்த உள்நாட்டு சேமிப்புக்களானது அதன் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் எத்தனை சதவீதமாக உள்ளது என்பதனைக் கூறுவதே மொத்த உள்நாட்டு சேமிப்பு வீதம் ஆகும்.

$$\text{மொத்த உள்நாட்டு சேமிப்பு வீதம்} = \frac{\text{மொத்த உள்நாட்டு சேமிப்பு}}{\text{மொத்த உள்நாட்டு உற்பத்தி}} \times 100$$

## மொத்த தேசிய சேமிப்பு
(National Savings)

குறிப்பிட்ட ஆண்டுக்கான மொத்த உள்நாட்டுச் சேமிப்புடன் வெளிநாட்டுச் சேமிப்புக்களையும் கூட்டுவதன் மூலம் பெறப்படுவதே மொத்த தேசிய சேமிப்பு ஆகும்.

$$\text{மொத்த தேசிய சேமிப்பு} = \text{மொத்த உள்நாட்டு சேமிப்பு} + \text{வெளிநாட்டிலிருந்து கிடைத்த தேறிய காரணி வருமானம்} + \text{தேறிய வெளிநாட்டு தனியார் மாற்றல் பெறுவனவுகள்}$$

## மொத்த தேசிய சேமிப்பு வீதம்
(National Savings Ratio)

ஒரு நாட்டின் குறிப்பிட்ட ஆண்டுக்கான மொத்த தேசிய சேமிப்பானது அதன் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் எத்தனை சதவீதமாக உள்ளது என்பதனைக் கூறுவதே மொத்த தேசிய சேமிப்பு வீதம் ஆகும்.

$$\text{மொத்த தேசிய சேமிப்பு வீதம்} = \frac{\text{மொத்த தேசிய சேமிப்பு}}{\text{மொத்த உள்நாட்டு உற்பத்தி}} \times 100$$

## மொத்த முதலீட்டு வீதம்

ஒரு நாட்டின் குறிப்பிட்ட வருடத்திற்கான மொத்த முதலீடானது அதன் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் எத்தனை சதவீதமாக உள்ளது என்பதனை கணிப்பிடுவதே மொத்த முதலீட்டு வீதம் ஆகும்.

$$\text{மொத்த முதலீட்டு வீதம்} = \frac{\text{மொத்த முதலீடு}}{\text{மொத்த உள்நாட்டு உற்பத்தி}} \times 100$$

## தேசிய வருமானத் தரவுகளின் பயன்பாடுகள் / தேசிய கணக்குகளின் முக்கியத்துவம்

1. ஒரு நாட்டின் குறிப்பிட்ட காலப்பகுதிக்கான செயலாற்றலை அதாவது உற்பத்தி மட்டத்தை அறிந்து கொள்ள முடிதல்.
2. ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சியினை அளவிடப் பயன்படுதல்.
3. எதிர்கால பொருளாதார திட்டங்களைத் தயாரிப்பதற்கு தேசிய வருமான தரவுகள் பயன்படுகின்றன.
4. நாடுகளுக்கிடையே உற்பத்தி, வருமான மட்டங்களை ஒப்பிடு வதற்குப் பயன்படுகின்றன.
5. ஒரு பொருளாதாரத்தின் கட்டமைப்பினையும் அதில் ஏற்படும் மாற்றங்களையும் அறியலாம்.

   அதாவது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் விவசாயத்துறை, கைத்தொழில் துறை, சேவைத்துறை ஆகியவற்றின் பங்களிப்பினையும் அத்துறைகளில் ஏற்படுகின்ற மாற்றங்களையும் அறியலாம்.
6. ஒவ்வொரு காரணி வருமானமும் மொத்த தேசிய வருமானத்தில் கொண்டுள்ள சார்பளவு முக்கியத்துவத்தினை அறிய முடிதல்.
7. ஒரு நாட்டின் மொத்த செலவுகளின் கட்டமைப்பினை அறிய முடிதல், அதாவது நுகர்வுச் செலவுகள், முதலீடுகள் என்பன மொத்த செலவில் வகிக்கும் பங்கினை அறிய முடிதல்.
8. நாட்டின் மொத்த முதலீட்டுக்கு அரசாங்கம், தனியார்துறை ஆகியோரின் சார்பளவுப் பங்களிப்பினை அறிய முடிதல்.
9. நாட்டின் மொத்த மூலவளங்கள், அவற்றின் பயன்பாடு, மொத்த உள்நாட்டு சேமிப்பு , மொத்த தேசிய சேமிப்பு ஆகியவற்றினை அறிய முடிதல்.

## தேசிய வருமானத் தரவுகளின் குறைபாடுகள் / தேசிய கணக்குகளின் நயக்கேடுகள்

1. பிழைப்பு மட்ட பொருளாதார நடவடிக்கைகள் போதியளவு உள்ளடக்கப்படாமை
2. கறுப்புச் சந்தை பொருளாதார நடவடிக்கைகள் உள்ளடக்கப்படாமை.

3. பல்கணிப்பீட்டுப் பிரச்சினை ஏற்படக்கூடிய வாய்ப்புக்கள் காணப் படுதல்.
4. இல்லத்தரசிகளின் சேவைகள், குடும்ப ஊழிய சேவைகள் தேசிய கணக்குகளில் உள்ளடக்கப்படாமை.
5. சட்ட விரோதமான பொருளாதார நடவடிக்கைகள் உள்ளடக் கப்படாமை.
6. உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள் சேவைகளின் அளவில் ஏற்பட்ட மாற்றங்களை தேசிய கணிப்பீடுகள் வெளிப்படுத்துமே தவிர அப்பொருட்கள் சேவைகளின் தரத்தில் ஏற்பட்ட மாற்றங்களை வெளிப்படுத்த மாட்டாது.
7. சூழல் மாசடைதல், இயற்கை வளங்கள் தேய்ந்து போதல் போன்றவை கவனத்தில் கொள்ளப்படாமை.
8. அரசாங்கத்திடமிருந்து பெறப்படும் வட்டி வருமானங்கள் அதாவது அரசுக்குக் கடன் வழங்குவதன் மூலம் மக்கள் பெறும் வட்டி வருமானங்கள் தேசிய வருமானக் கணிப்பீட்டில் உள்ளடக்கப் படுவதில்லை.
9. நாட்டில் நிலவும் உண்மையான வருமானப் பங்கீட்டு நிலமையினை தேசிய வருமானத் தரவுகள் வெளிப்படுத்த மாட்டாது.
10. அரசாங்கத்தின் பொருட்கள் சேவைகளுக்கான விலையிடலில் காணப்படும் சிக்கல்கள்.
11. நாட்டின் உற்பத்தியில் அதிகரிப்பு ஒன்று ஏற்படாத நிலையிலும் தேசிய உற்பத்தியின் பெறுமதிகள் அதிகரித்தல்.
12. தகவல்களையும், தரவுகளையும் பெறுவதில் காணப்படும் சிக்கல்கள் காரணமாக சரியான தேசிய வருமானக் கணிப்பீட்டை மேற்கொள்ள முடியாமை.
13. கல்வி, சுகாதார, மருத்துவ வசதிகள் போன்ற சமூகநல காரணிகளில் ஏற்படும் முன்னேற்றங்களை தேசிய கணிப்பீடுகள் வெளிப்படுத்த மாட்டாது.

## இலங்கையின் தேசிய கணக்கீடுகள்

☞ இலங்கையின் தேசிய மதிப்பீடுகள் முதன் முதலில் டாக்டர் டாஸ் குப்தா என்பவரால் 1947 ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது.

☞ 1949 ஆம் அண்டு இலங்கை குடிசன மதிப்பீட்டு புள்ளிவிபர திணைக்களத்தின் இயக்குனர் இலங்கையின் முதலாவது உத்தியோக பூர்வமான தேசிய வருமானத் தரவுகளை வெளி யிட்டார்.

☞ புள்ளிவிபர ரீதியாக தேசிய வருமான மதிப்பீடுகள் இலங்கை மத்திய வங்கியினால் முதன் முதலில் 1950 இல் வெளியிடப்பட்டது.

☞ இலங்கையில் தற்பொழுது பின்வரும் 2 நிறுவனங்கள் தேசிய வருமானத்தைக் கணிப்பிடுகின்றன.

1) இலங்கை மத்திய வங்கி
2) இலங்கை குடிசன மதிப்பீட்டு புள்ளிவிபர திணைக்களம்

☞ இலங்கையில் பின்வரும் இரு முறைகளில் தேசிய வருமானம் கணிப்பிடப்படுகின்றது.

(1) உற்பத்தி வழி
(2) செலவு வழி

☞ பதினொரு விடயங்களினால் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள் சேவைகளின் கூட்டப்பட்ட பெறுமதிகளைக் கூட்டுவதன் மூலம் உற்பத்தி வழியிலான கணிப்பீடு மேற்கொள்ளப்படுகின்றது.

☞ உற்பத்தி வழியிலான கணிப்பீடானது பின்வரும் 2 முறைகளில் கணிப்பிடப்படுகின்றது.

(1) நடைமுறைக் காரணிச் செலவு விலைகளிலான மதிப்பீடு
(2) நிலையான காரணிச் செலவு விலைகளிலான மதிப்பீடு

☞ செலவு வழியிலான தேசிய வருமானக் கணிப்பீடானது நடைமுறைச் சந்தை விலைகளில் கணிப்பிடப்படுகின்றது.

☞ இலங்கை மத்திய வங்கியானது 1996 ஆம் ஆண்டு விலைகளில் நிலையான விலைத்தேசிய உற்பத்தியை கணிப்பிடுகின்றது.

## சென்மதி நிலுவையும் தேசிய கணக்கீடும்

1. செலவு வழி தேசிய கணக்கீட்டில் இடம்பெறும் பொருட்கள் காரணியல்லாத சேவைகளின் தேறிய ஏற்றுமதியானது சென்மதி நிலுவையின் பொருட்கள் சேவைகள் கணக்கு நிலுவைக்கு சமனாக காணப்படும்.

   எனவே மொத்த உள்நாட்டுச் செலவுடன் சென்மதி நிலுவையின் பொருட்கள் சேவைகள் கணக்கு நிலுவையினைக் கூட்டுவதன் மூலம் மொத்த உள்நாட்டு உற்பத்தி மீதான செலவை அல்லது மொத்த உள்நாட்டு உற்பத்தியைக் கணிப்பிடலாம்.

| | | |
|---|---|---|
| மொத்த உள்நாட்டு உற்பத்தி மீதான செலவு (GDP) | = | மொத்த உள்நாட்டுச் செலவு + சென்மதி நிலுவையின் பொருட்கள் சேவைகள் க/கு நிலுவை |

2. தேசிய கணக்கீட்டில் இடம்பெறும் வெளிநாட்டில் இருந்து கிடைத்த தேறிய காரணி வருமானமானது சென்மதி நிலுவையின் வருமானக் கணக்கு நிலுவைக்கு சமனாகக் காணப்படும்.
   எனவே மொத்த உள்நாட்டு உற்பத்தி மீதான செலவுடன் சென்மதி நிலுவையின் வருமானக் கணக்கு நிலுவையினைக் கூட்டுவதன் மூலம் மொத்த தேசிய உற்பத்தி மீதான செலவை அல்லது மொத்த தேசிய உற்பத்தியை கணிப்பிடலாம்.

| | | | | |
|---|---|---|---|---|
| மொத்த தேசிய உற்பத்தி மீதான செலவு (GNP) | = | மொத்த உள்நாட்டு உற்பத்தி மீதான செலவு | + | சென்மதி நிலுவையின் வருமான க/கு நிலுவை |

3. தேசிய கணக்கீட்டில் இடம்பெறும் பொருட்கள் காரணியல்லாத சேவைகளின் தேறிய ஏற்றுமதி, வெளிநாட்டிலிருந்து கிடைத்த தேறிய காரணி வருமானம் என்பவற்றின் கூட்டுத்தொகை சென்மதி நிலுவையின் பொருட்கள் சேவைகள் வருமானக் கணக்கு நிலுவைக்கு சமனாகக் காணப்படும். எனவே மொத்த உள்நாட்டுச் செலவுடன் சென்மதி நிலுவையின் பொருட்கள் சேவைகள் வருமானக் கணக்கு நிலுவையினை கூட்டுவதன் மூலம் மொத்த தேசிய உற்பத்தி மீதான செலவைக் கணிப்பிடலாம்.

| | | |
|---|---|---|
| மொத்த தேசிய உற்பத்திமீதான செலவு | = | மொத்த உள்நாட்டு செலவு + சென்மதி நிலுவையின் பொருட்கள் சேவைகள் வருமான கணக்கு நிலுவை |

4. மொத்த உள்நாட்டுச் செலவுடன் சென்மதி நிலுவையின் நடைமுறைக் கணக்கு நிலுவையினை (வெளிநாட்டு தேறிய முதலீட்டை) கூட்டி நடைமுறை மாற்றல்களைக் கழிப்பதன் மூலம் மொத்த தேசிய உற்பத்தி மீதான செலவைக் கணிப்பிடலாம்.

| | | |
|---|---|---|
| மொத்த தேசிய உற்பத்தி | = | மொத்த உள்நாட்டுச் செலவு + சென்மதி நிலுவையின் நடைமுறைக் கணக்கு நிலுவை - நடைமுறை மாற்றல் கணக்கு நிலுவை |

5. மொத்த உள்நாட்டுச் செலவுடன் சென்மதி நிலுவையின் நடைமுறைக் கணக்கு நிலுவையினைக் கூட்டுவதன் மூலம் செலவிடத்தக்க மொத்த தேசிய உற்பத்தியை கணிப்பிடலாம்.

செலவிடத்தக்க மொத்த தேசிய உற்பத்தி = மொத்த உள்நாட்டு செலவு + சென்மதி நிலுவையின் நடைமுறைக் கணக்கு நிலுவை

## சூழல் தேசிய கணக்கீடுகள் / பச்சைத் தேசிய கணக்கீடுகள்

பொருட்கள் சேவைகள் உற்பத்தி செய்யப்படுவதனால் இயற்கை வளங்கள் தேய்வடைந்து செல்கின்றன. இதனால் இயற்கை வளங்களின் அளவு குறைவடைகின்றது. ஆனால் தேசிய கணக்கீட்டின் போது இத்தகைய இயற்கை வளதேய்வுகள், வள அழிவுகள் என்பன கவனத்திற் கொள்ளப்படுவதில்லை. இதனால் மொத்தத் தேசிய உற்பத்தியானது அதிகரித்துக் காட்டப்படுகின்றது. அதாவது பொருளாதாரத்தின் சாதனை உயர்வாகக் காட்டப்படுகின்றது.

அத்துடன் உற்பத்தியின்போது சூழல் மாசடைதலும் ஏற்படுகின்றது. அதாவது தொழிற்சாலைகளிலிருந்து வெளியேற்றப்படும் கழிவு நீர், புகைகள் என்பனவற்றினால் காற்று, நீர் அசுத்தமடைந்து சுற்றுப்புறச் சூழல் பாதிப்புறுகின்றது. இத்தகைய இழப்பீடுகளையும் தேசிய கணக்குகள் உள்ளடக்குவதில்லை. இதனாலும் மொத்தத் தேசிய உற்பத்தியானது அதிகரித்துக் காட்டப்படுகின்றது.

எனவே இத்தகைய குறைபாடுகளை நீக்குவதற்கு உற்பத்தியினால் வளங்கள் குறைவடைவதனையும், சூழல் பாதிக்கப்படுவதனையும் மொத்தத் தேசிய உற்பத்தியைக் கருத்திற் கொண்டு சீராக்குதல் வேண்டும். இவ்வாறு சீராக்கிப் பெறப்படும் முறையே சிறந்த முறை ஆகும். இவ்வாறு சீராக்கல்களுக்கு உட்படுத்தப்படும் தேசிய கணக்கீடுகள் **“பச்சைத் தேசிய கணக்கீடுகள்”** அல்லது **“சூழல் தேசிய கணக்கீடுகள்”** எனப்படுகின்றன.

## தேசிய கணக்கீட்டில் பெண்களின் பங்களிப்புகள்

பெண்களில் முக்கிய பிரிவினராகிய இல்லத்தரசிகள் பெருமளவிற்கு ஊழியப்படையில் சேர்க்கப்படுவதில்லை. இதனால் இவர்களால் மேற்கொள்ளப்படும் பல்வேறு பணிகள் அளவிடப்படுவது மில்லை, அவை தேசிய கணக்கீட்டில் சேர்க்கப்படுவதுமில்லை. அதாவது இத்தகைய இல்லத்தரசிகள் பல்வேறு உற்பத்திசார் நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர்.

*உதாரணம்*

பிள்ளை வளர்ப்பு, பாலூட்டல், துணிதுவைத்தல், சுத்தப்படுத்தல், வீட்டுத்தோட்டம் செய்தல், பராமரித்தல் போன்றவை.

இத்தகைய உற்பத்திசார் நடத்தைகள் யாவும் சந்தையூடாக செல்வதில்லை. அத்துடன் இவற்றுக்கு வெகுமதிகளும் வழங்கப் படுவதில்லை. இதனால் பணப்பெறுமதிகளின் அடிப்படையில் இவை மதிப்பிடப்படுவதில்லை. இதனால் இல்லத்தரசிகளின் பங்களிப்பு தொடர்பானவை தேசிய கணக்கீட்டில் சேர்க்கப்படாதுள்ளன. எனவே பெண்களின் பங்களிப்பினை தேசிய கணக்கீடுகள் குறைத்து மதிப்பிடுகின்றன.

எனவே இல்லத்தரசிகளால் மேற்கொள்ளப்படும் உற்பத்திசார் நடவடிக்கைகளை தேசிய கணக்கீட்டில் உள்ளடக்காமை ஒரு குறைபாடாகவும் நடைமுறையில் கொள்ளப்படுகின்றது. இதன் காரணமாக இலங்கை மத்திய வங்கியானது தற்பொழுது இல்லத்தரசிகளின் உற்பத்திசார் நடவடிக்கைகளை ஓரளவிற்கு தேசியக் கணக்கீட்டில் சேர்த்துக்கொள்ளத் தொடங்கியுள்ளது.

*குறிப்பு:*

பொதுவாக பின்வரும் உற்பத்தி நடவடிக்கைகள் அளவிடப்படு வதில்லை. அதனால் அவை தேசிய உற்பத்தியில் சேர்த்துக் கொள்ளப்படுவதில்லை.

(1) வீட்டுத்துறையினர் தமது இல்லத்தினுள் மேற்கொள்ளும் செயற்றிறன் மிக்க செயற்பாடுகள்.

(உதாரணம்: துப்பரவாக்குதல், திருத்தங்கள் செய்தல், துணிதுவைத்தல் போன்றவை)

(2) கணிப்பீட்டுக்குத் தகவல் வழங்கப்படாத செயற்றிறன் மிக்க பொருளாதார நடவடிக்கைகள் (the underground Economy) (அதாவது வரிவிதிப்புக்குப் பயந்து அறிவிக்கப்படாத பொருளாதார நடவடிக்கைகள்)

## மொத்தக் கேள்வியும் மொத்த நிரம்பலும்

## Aggregate demand and Aggregate Supply

ஒரு பொருளாதாரத்தில் பொருட்கள் சேவைகள் மீதான திட்டமிடப்பட்ட செலவினங்கள் யாவும் மொத்தக் கேள்வி எனப்படும். இம் மொத்தக் கேள்வியானது பொருளாதாரத்தின் மொத்த செலவுக்கு சமனாகக் காணப்படும் இது வீட்டுத்துறை, நிறுவனத்துறை, அரசதுறை, வெளிநாட்டுத்துறை ஆகியவற்றினால் மேற்கொள்ளப்படும்.

மொத்தக் கேள்வியானது பின்வருமாறு காட்டப்படும்.

(1) சேமிப்பு முதலீடு தொழிற்படுகின்ற எளிய பொருளாதாரத்தில் மொத்தக் கேள்வி $AD = C + I$

(2) மூடிய பொருளாதாரத்தில் மொத்தக் கேள்வி $AD = C + I + G$

(3) திறந்த பொருளாதாரத்தில் மொத்தக் கேள்வி

$$AD = C + I + G + (X - M)$$

மொத்த நிரம்பல் என்பது, ஒரு பொருளாதாரத்தில் உற்பத்தி செய்யப்பட்ட எல்லாப் பொருட்கள் சேவைகளையும் குறிக்கும். இம்மொத்த நிரம்பலானது பொருளாதாரத்தின் மொத்த வருமானத்திற்கு (Y) அல்லது மொத்த உற்பத்திக்கு சமனாக காணப்படும். $(AS = Y)$

ஒரு பொருளாதாரம் சமநிலையடைவதற்கு பொருளாதாரத்தின் மொத்தக் கேள்வி மட்டமானது அதன் மொத்த நிரம்பல் மட்டத்திற்கு சமனாக காணப்படுதல் வேண்டும் $(AD = AS)$ இவ்வாறு பொருளாதாரம் சமநிலையடையும் போது பொருட்கள் சேவைகளுக்கான மொத்தக் கேள்வி முழுவதையும் பொருளாதாரம் உற்பத்தி செய்து வழங்கத் தயாராக இருக்கும். இதன்போது பொருளாதாரமானது தளம்பலின்றி உறுதியாகக் காணப்படும்.

மொத்தக் கேள்வி மட்டமானது மொத்த நிரம்பல் மட்டத்திற்கு சமனற்று காணப்படும்போது பேரினப் பொருளாதார சமநிலை பாதிக்கப்பட்டு பொருளாதார உறுதியின்மை தோன்றும்.

## வெளிப்பாய்ச்சல்களும் உட்பாய்ச்சல்களும்
## Withdrawals and Injections

ஒரு பொருளாதாரத்தின் தேசிய வருமானச் சுற்றோட்டத்தில் அல்லது சமநிலைத் தேசிய வருமான மட்டத்தில் அல்லது மொத்தக் கேள்வி மட்டத்தில் சுருக்கத்தினை அல்லது குறைவினை ஏற்படுத்தும் மாறிகள் வெளிப் பாய்ச்சல்கள் (w) எனப்படும். இவை வீட்டுத் துறையிலிருந்து அல்லது நிறுவனத் துறையிலிருந்து வெளிச் செல்பவையாகக் காணப்படும். இவ் வெளிப்பாய்ச்சல்கள் பின்வருமாறு.

(1) எளிய பொருளாதாரத்தில் வெளிப்பாய்ச்சல் (W) = S

(2) மூடிய பொருளாதாரத்தில் வெளிப்பாய்ச்சல் (W) = S+T

(3) திறந்த பொருளாதாரத்தில் வெளிப்பாய்ச்சல் (W) = S+T+M

ஒரு பொருளாதாரத்தின் தேசிய வருமானச் சுற்றோட்டத்தில் அல்லது சமநிலைத் தேசிய வருமான மட்டத்தில் அல்லது மொத்தக் கேள்வி மட்டத்தில் விரிவினை அல்லது அதிகரிப்பினை ஏற்படுத்தும் மாறிகள் உட்பாய்ச்சல்கள் (Ij) எனப்படும். இவை வீட்டுத்துறைக்குள் அல்லது நிறுவனத்துறைக்குள் உட்செல்பவையாகக் காணப்படும். இவ் உட்பாய்ச்சல்கள் பின்வருமாறு.


(1) எளிய பொருளாதாரத்தில் உட்பாய்ச்சல் (Ij) = I

(2) மூடிய பொருளாதாரத்தில் உட்பாய்ச்சல் (Ij) = I + G

(3) திறந்த பொருளாதாரத்தில் உட்பாய்ச்சல் (Ij) = I + G + X

ஒரு பொருளாதாரம் சமநிலையடைவதற்கான பிரதான நிபந்தனையாக காணப்படுவது வெளிப்பாய்ச்சல்களானது உட்பாய்ச்சல்களுக்கு சமனாக காணப்பட வேண்டும் (W = Ij) என்பதாகும். வெளிப்பாய்ச்சல்களானது உட்பாய்ச்சல்களுக்கு சமனற்று காணப்படுமாயின் பொருளாதாரத்தின் சமநிலை பாதிக்கப்படும்.

### *தேசிய வருமான சுற்றோட்டத்தினை பொருட்சந்தை காரணிச்சந்தை ஆகியவற்றுடன் தொடர்புபடுத்தல்*




### *வீட்டுத்துறையினரின் இரட்டைப் பங்களிப்பு*

வீட்டுத்துறையினர் காரணிச் சந்தையில் காரணிகளை நிரம்பல் செய்பவராகவும் (வழங்குனர்) அதேவேளை பொருட் சந்தையில் பொருட்கள் சேவைகளுக்கு கேள்வி எழுப்புவோராகவும் (நுகர்வோர்) காணப்படுகின்றனர்.

### *நிறுவனத் துறையினரின் இரட்டைப் பங்களிப்பு*

நிறுவனத்துறையினர் காரணிச் சந்தையில் உறபத்திக் காரணிகளுக்கு கேள்வி எழுப்புவோராகவும் (நுகர்வோர்) அதேவேளை பொருட்சந்தையில் பொருட்கள் சேவைகளை நிரம்பல் செய்பவராகவும் (வழங்குனர்) காணப்படுகின்றனர்.

# பயிற்சிகள்

1. திறந்த பொருளாதாரம் ஒன்று தொடர்பான தரவுகள் பின்வருமாறு (தொகைகள் யாவும் மில்லியன் ரூபாவில் தரப்பட்டுள்ளன.)

நுகர்வு.............................................. = 1,000+ 0.75yd
முதலீடு.............................................. = 600
அரச செலவீடு.................................. = 900
ஏற்றுமதி..............................................= 500
வரி......................................................= 0.2 y
இறக்குமதி...........................................= 0.125 yd

இங்கு Y - வருமானம், Yd - செலவுக்கான வருமானம்

**கணிப்பிடுக.**

1) சமநிலையின் போதான வெளியீட்டு மட்டம்
2) சமநிலையில் வரியின் அளவு
3) செலவுக்கான வருமானம்
4) இறக்குமதியின் அளவு
5) வர்த்தக நிலுவை

2. எல்லை நுகர்வு நாட்டம், சராசரி நுகர்வு நாட்டம் ஆகியவற்றுக் கிடையிலான வேறுபாட்டை தெளிவுபடுத்துக.

3. பெயரளவிலான மொத்த உள்நாட்டு உற்பத்தி (Nominal GDP) உண்மை மொத்த உள்நாட்டு உற்பத்தி (Real GDP) ஆகியவற்றை வேறுபடுத்துக.

4. எல்லை சேமிப்பு நாட்டம் (MPS) என்றால் என்ன? பின்வரும் தகவல்களிலிருந்து எல்லை சேமிப்பு நாட்டத்தைக் கணிப்பிடுக.

| வருமானம் (ரூபா) | நுகர்வு (ரூபா) | வரிவீதம் |
|---|---|---|
| 10000 | 8500 | 20 % |
| 12000 | 8800 | 30 % |

5. பின்வரும் தரவுகளைப் பயன்படுத்தி எல்லை நுகர்வு நாட்டத்தினைக் கணிப்பிடுக.

| வருமானம் (மில்லியன் ரூபா) | நுகர்வு (மில்லியன் ரூபா) |
|---|---|
| 400 | 600 |
| 800 | 900 |
| 1200 | 1200 |

6. நுண்பாகப் பொருளியலுக்கும் பேரண்டப் பொருளியலுக்கும் இடையிலான வேறுபாட்டைத் தெளிவுபடுத்துக.

7. பேரினப் பொருளாதாரக் குறிக்கோள்கள் எவை?

8. அரச தலையீடற்ற எளிய பொருளாதாரமொன்றினை கவனத்திற் கொள்க. வருமானத்தில் 20% சேமிக்கப்படுகின்றது. முதலீடு 1000 மில்லியன் ரூபாவாகக் காணப்படின் சமநிலைத் தேசிய வருமானம், நுகர்வு ஆகியவற்றைக் காண்க.

9. அரச தலையீடு அற்ற எளிய பொருளாதாரம் தொடர்பான தரவுகள் பின்வருமாறு

   Y = 2000 மில்லியன் ரூபா, C = 0.9y

   சேமிப்பு மட்டத்தையும், நுகர்வு மட்டத்தையும் கணிப்பிடுக.

10. அரசாங்க தலையீடு இல்லாத எளிய பொருளாதாரம் ஒன்றின் நுகர்வுச் சார்பு பின்வருமாறு:

    $C = 200 + 0.8y$

    1) இப்பொருளாதாரத்தின் வருமானப் பெருக்கியின் பெறுமதியைக் காண்க.
    2) சேமிப்பு சார்பு எவ்வாறு இருக்கும்?
    3) முதலீடு ரூபா 250 மில்லியனாக காணப்படின் சமநிலை வெளியீட்டு மட்டம் யாது?
    4) எந்த வருமான மட்டத்தில் சேமிப்பு பூச்சியமாக இருக்கும்?

11. மூடிய பொருளாதாரமொன்றில் நுகர்வானது எப்பொழுதும் செலவுக்கான வருமானத்தில் முக்கால் பங்கு எனவும் முதலீடு ரூபா 200 மில்லியன் எனவும், அரசசெலவு ரூபா 300 மில்லியன் எனவும், வரி, வருமானத்தில் ஐந்திலொரு பங்கு எனவும் கருதுக.

    1) சமநிலை வெளியீட்டு மட்டம் யாது?
    2) சமநிலையின் போதான நுகர்வு, சேமிப்பு மட்டங்களைக் கணிப்பிடுக.
    3) வருமானப் பெருக்கியின் பெறுமதி யாது?

12. மூடிய பொருளாதாரம் ஒன்று தொடர்பான தரவுகள் பின்வருமாறு

    $C = 400 + 0.75y$ ; $I = 500$ ; $G = 600$

    1) பின்வரும் அட்டவணையை பூர்த்திசெய்வதன் மூலம் சமநிலைத் தேசிய வருமான மட்டத்தைக் காண்க.

| Y | C | C + I | C + I + G |
|---|---|---|---|
| 500 | | | |
| 1000 | | | |
| 2000 | | | |
| 3000 | | | |
| 4000 | | | |
| 5000 | | | |
| 6000 | | | |
| 7000 | | | |
| 8000 | | | |

2) வரைபடத்தாள் ஒன்றைப் பயன்படுத்தி சமநிலைத் தேசிய வருமான மட்டத்தை வரைபட முறையில் காட்டுக.

13. மூடிய பொருளாதாரம் ஒன்று பற்றிய தரவுகள் பின்வருமாறு

$$C = 0.8\,yd \;;\; I = 80 \;;\; G = 120 \;;\; T = 0.25yd$$

சமநிலை வெளியீட்டு மட்டத்தை கணிப்பிடுக.

14. தேசிய கணக்கீட்டுக்கும் சென்மதி நிலுவைக்கும் இடையிலான தொடர்புகளை விளக்குக.

15. ''சூழல் தேசிய கணக்கீடு'' என்றால் என்ன?

16. தேசிய கணக்கீட்டின் பயன்கள், குறைபாடுகள் எவையென கூறுக.

17. மொத்த உள்நாட்டுச் சேமிப்பு, மொத்தத் தேசிய சேமிப்பு ஆகியவற்றை வேறுபடுத்துக.

18. பின்வரும் தரவுகள் அரசாங்கத்துறை இல்லாத ஒரு திறந்த பொருளாதாரத்தைப் பற்றியவையாகும்.

| வருமான மட்டம் Y ரூபா மில்லியன் | சராசரி நுகர்ச்சி நாட்டம் (APC) | சராசரி இறக்குமதி நாட்டம் (APM) |
|---|---|---|
| 200 | 1.05 | 0.25 |
| 500 | 0.9 | 0.22 |

நுகர்வும் (C), இறக்குமதிகளும் (M) தன்னியல்பானவையும் வருமானத்தில் (Y) ஏகபரிமாண சார்புகளுமாகும். எல்லா வருமான மட்டங்களிலும் முதலீடு (I) ரூபா 200 மில்லியனாகவும் ஏற்றுமதிகள(X) ரூபா 100 மில்லியனாகவும் நிலையாக

உள்ளனவெனக் கருதுக.

1) தெரிவுசெய்த வருமான மட்டங்களில் நுகர்வு, இறக்குமதிப் பட்டியல்களைத் தயாரிக்குக.
2) இவ்வருமான மட்டங்களைக் கையாண்டு சமநிலைத் தேசிய வருமான மட்டத்தையும் அதனோடு தொடர்புள்ள நுகர்வு, இறக்குமதி பெறுமதிகளையும் கணிக்குக.
3) சமநிலைத் தேசிய வருமானத்தில் வர்த்தக மீதியினைக் காண்க.
4) பெருக்கியினது பெறுமதியினைக் கணிக்குக.

19. திறந்த பொருளாதாரமொன்று பற்றிய சில தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | | | |
|---|---|---|---|
| நுகர்வுச் சார்பு | C | = | 400 + 0.8 yd |
| தனியார் முதலீடு | I | = | ரூபா 100 மில்லியன் |
| அரசாங்க செலவீடு | G | = | ரூபா 150 மில்லியன் |
| வருமானவரி | T | = | 0.25 Y |
| ஏற்றுமதி | X | = | ரூபா 70 மில்லியன் |
| இறக்குமதி | M | = | 0.1 Y |

1) இப்பொருளாதாரத்தின் தேசிய வருமானத்தின் சமநிலை மட்டத்தை கணிக்குக.
2) வருமானப் பெருக்கியின் பெறுமதி யாது?
3) ஏற்றுமதிகள் 20 மில்லியனால் அதிகரித்தால் புதிய சமநிலைத் தேசிய வருமானம் எவ்வாறு மாற்றமடையும்?
4) ஏற்றுமதிகள் மாறாமல் இருக்க எல்லை இறக்குமதி நாட்டம் 0.2 ஆக அதிகரிப்பின் சமநிலை தேசிய வருமான மட்டம் எவ்வாறு மாற்றமடையும்?

20. நுகர்வுத் தொழிற்பாடு, சேமிப்புத்தொழிற்பாடு ஆகியவற்றை வேறுபடுத்துக.

21. மொத்த உள்நாட்டு உற்பத்தி, மொத்த தேசிய உற்பத்தி ஆகியவற்றை வரையறுக்குக.

22. ''மொத்த உள்நாட்டு உற்பத்தியும் மொத்த உள்நாட்டுச் செலவும் எப்பொழுதும் சமனாகக் காணப்படும்" இக்கூற்றை ஏற்றுக்கொள்வீரா? விளக்குக.

23. பேரினப் பொருளாதார இயக்கிகள் யாவை? இத்தகைய இயக்கிகளுக் கிடையிலான தொடர்புகளை வரைபடம் மூலம் விளக்குக.

24. 'வருமானப் பெருக்கி' என்றால் என்ன? இதன் முக்கியத்துவம் யாது?

25. முதலீட்டுப் பெருக்கி, வரிப்பெருக்கி, முடுக்கி ஆகியவற்றை விளக்குக.

26. தேசிய வருமான சமநிலை என்றால் என்ன?

27. நுண்பாகப் பொருளியல், பேரினப் பொருளியல் ஆகியவற்றை வேறுபடுத்துக?

28. பொருளாதாரமொன்றின் பேரினப் பொருளாதார மாறிகளைக் கூறுக.

29. பேரினப் பொருளாதார முகாமை என்றால் என்ன?

30. பேரினப் பொருளாதாரமொன்றின் பிரதான துறைகளைக் கூறுக.

31. வீட்டுத்துறை என்பதனை வரையறுக்குக.

32. வீட்டுத்துறையின் பொருளாதார நடவடிக்கைகளைக் கூறுக.

33. நிறுவனத்துறை என்றால் என்ன?

34. நிறுவனத்துறையின் பொருளாதார நடவடிக்கைகளைக் கூறுக.

35. அரச துறை என்றால் என்ன?

36. அரச துறையினால் நிறைவேற்றப்படும் பொருளாதாரப் பணிகளைக் கூறுக.

37. வெளிநாட்டுத்துறையில் உள்ளடங்கும் இரு பிரதான நடவடிக்கைகளும் எவை?

38. பொருளாதார இடைத் தொடர்புகளின் வகைகளைக் கூறுக.

39. சேமிப்பு, முதலீடு என்பன அற்ற எளிய பொருளாதார வருமானச் சுற்றோட்டத்தினை வரைபில் காட்டுக.

40. சேமிப்பு, முதலீடு என்பன காணப்படுகின்ற எளிய பொருளாதார வருமானச் சுற்றோட்டத்தினை வரைபில் காட்டுக.

41. எல்லை நுகர்வு நாட்டம் (MPC) என்பதனை வரையறுக்குக.

42. எல்லை சேமிப்பு நாட்டம் (MPS) என்பதனை வரையறுக்குக.

43. சராசரி நுகர்வு நாட்டம் (APC) என்றால் என்ன?

44. சராசரி சேமிப்பு நாட்டம் (APS) என்றால் என்ன?

45. எல்லை இறக்குமதி நாட்டம் (MPM) என்றால் என்ன?

46. சராசரி இறக்குமதி நாட்டம் (APM) என்றால் என்ன?

47. எல்லை முதலீட்டு நாட்டம் (MPI) என்றால் என்ன?

48. எல்லை வரிநாட்டம் (MPT) என்றால் என்ன?

49. எளிய பொருளாதார தேசிய வருமான சமநிலையின் இயல்புகளைக் கூறுக.

50. மூடிய பொருளாதார தேசிய வருமான சமநிலையின் இயல்புகளைக் கூறுக.

51. திறந்த பொருளாதார தேசிய வருமான சமநிலையின் இயல்புகளைக் கூறுக.

52. எளிய பொருளாதார தேசிய வருமான சமநிலையினை வரைபில் காட்டுக.

53. மூடிய பொருளாதார தேசிய வருமான சமநிலையினை வரைபில் காட்டுக.

54. திறந்த பொருளாதார தேசிய வருமான சமநிலையினை வரைபில் காட்டுக.

55. எளிய பொருளாதார தேசிய வருமான சமநிலைக்கான பிரதான நிபந்தனை எது?

56. மூடிய பொருளாதார தேசிய வருமான சமநிலைக்கான பிரதான நிபந்தனை எது?

57. திறந்த பொருளாதார தேசிய வருமான சமநிலைக்கான பிரதான நிபந்தனை எது?


58. மூடிய பொருளாதாரத்தில் வருமானப்பெருக்கி எவ்வாறு கணிப்பிடப்படும்?

59. திறந்த பொருளாதாரத்தில் வருமானப்பெருக்கி எவ்வாறு கணிப்பிடப்படும்?

60. அரச செலவுப் பெருக்கி என்றால் என்ன? இது எவ்வாறு கணிப்பிடப் படுகின்றது?

61. சமநிலை வரவு செலவுத் திட்டப்பெருக்கி எவ்வாறு கணிப்பிடப்படும்?

62. பின்வரும் வரைபடத்தை பயன்படத்தி கீழே தரப்படும் வினாக்களுக்கு விடைதருக.




(i) அரச தலையீடற்ற எளிய பொருளாதாரத்தின் சமநிலை தேசிய வருமானத்தைக் குறிக்கும் புள்ளி எது?

(ii) மூடிய பொருளாதாரத்தின் சமநிலைத் தேசிய வருமானத்தை குறிக்கும் புள்ளி எது?

(iii) திறந்த பொருளாதாரத்தின் சமநிலைத் தேசிய வருமானத்தை குறிக்கும் புள்ளி எது?

(iv) வரைபடத்தில் e என்ற பகுதி குறிப்பது ..................................

(v) வரைபடத்தில் f என்ற பகுதி குறிப்பது ..................................

(vi) வரைபடத்தில் g என்ற பகுதி குறிப்பது ..................................

(vii) வரைபடத்தில் h என்ற பகுதி குறிப்பது ..................................

63. பொருளாதாரம் ஒன்ற தொடர்பான தரவுகள் வருமாறு
$C = 200 + 0.75yd$ ; $I = 3,000$ ; $G = 275$ ; $T = 100 + 0.2y$

(i) சமநிலைத் தேசிய வெளியீட்டு மட்டத்தை காண்க.

(ii) வரியின் அளவு யாது?

(iii) பாதீட்டு நிலுவை யாது?

(iv) செலவுக்கான வருமானம் யாது?

(v) சேமிப்பு எவ்வளவு?

64. எளிய பொருளாதாரம் ஒன்று தொடர்பான தரவுகள் வருமாறு,

நுகர்வு = $200 + 0.8y$

முதலீடு = 400 மில்லியன் ரூபா

கணிப்பிடுக.

(i) சமநிலைத் தேசிய வருமான மட்டம்

(ii) தேசிய வருமான சமநிலையின்போது நுகர்வின் அளவு

65. பொருளாதாரம் ஒன்றுக்கான நுகர்வுச்சார்பு பின்வருமாறு தரப்படுகின்றது.

$$C = 50 + 0.75y$$

பின்வரும் அட்டவணையைப் பூர்த்தி செய்க.

| வருமானம் (Y) | 50 | 100 | 150 | 200 | 250 | 300 | 350 | 400 | 450 | 500 | 600 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| நுகர்வு (C) | | | | | | | | | | | |

66. ஒரு பொருளாதாரம் பற்றிய தரவுகள் வருமாறு

| வருமானம் (Y) | நுகர்வு (C) |
|---|---|
| 400 | 380 |
| 600 | 540 |

(i) நுகர்வுச் சார்பைக் கூறுக.

(ii) சேமிப்புச் சார்பைக் கணிப்பிடுக.

67. நுகர்வுச் சார்பு ஒன்று பின்வருமாறு

$$C = 250 + 0.9y$$

பின்வருவனவற்றை கணிப்பிடுக.

| வருமானம் Y | நுகர்வு C | சேமிப்பு S | சராசரி நுகர்வு நாட்டம் APC | சராசரி சேமிப்பு நாட்டம் APS |
|---|---|---|---|---|
| 500 | | | | |
| 1000 | | | | |
| 1500 | | | | |
| 2000 | | | | |
| 2500 | | | | |
| 3000 | | | | |
| 3500 | | | | |
| 4000 | | | | |

68. பொருளாதாரம் ஒன்று தொடர்பான தரவுகள் வருமாறு

| வருமானம் (Y) | சேமிப்பு (S) |
|---|---|
| 3,000 | 400 |
| 5,000 | 1,200 |

(i) சேமிப்புச் சார்பைக் காண்க.

(ii) நுகர்வுச் சார்பைக் கணிப்பிடுக.

(iii) நுகர்வுக் கோடு, சேமிப்புக்கோடு ஆகியவற்றை வரைபில் காட்டுக.

69. அரச தலையீடற்ற எளிய பொருளாதாரம் ஒன்று தொடர்பான தரவுகள் வருமாறு

$$C = 100 + 0.8y; \quad I = 500$$

(i) சமநிலையின் போதான வெளியீட்டு மட்டம் யாது?

(ii) சமநிலையின் போதான சேமிப்பு, நுகர்வு ஆகியவற்றை கணிப்பிடுக.

(iii) சமநிலையில் வெளிப்பாய்ச்சலானது உட்பாய்ச்சலுக்குச் சமனாகும் என காட்டுக.

(iv) எந்த வருமான மட்டத்தில் சேமிப்பு பூச்சியமாக இருக்கும்?

70. நுகர்வு = $400 + 0.75y$

முதலீடு = 200 மில்லியன் ரூபா

(i) சமநிலைத் தேசிய வருமான மட்டத்தை கணிப்பிடுக.

(ii) சமநிலைத் தேசிய வருமான மட்டத்தை வரைபில் காட்டுக.

(iii) வருமானப் பெருக்கியின் பெறுமதி யாது?

(iv) முதலீடு 100 மில்லியனால் அதிகரித்தால் சமநிலைத் தேசிய வருமானம் எத்தனை மில்லியனால் அதிகரிக்கும்?

71. அரச தலையீடற்ற எளிய பொருளாதாரம் ஒன்று தொடர்பான தரவுகள் வருமாறு.

$$S = 0.2y; \quad I = 500$$

i) தேசிய வருமான சமநிலை மட்டத்தை கணிப்பிடுக.

ii) சமநிலையில் சேமிப்பு, நுகர்வு ஆகியவற்றைக் காண்க.

72. பின்வரும் அட்டவணையைப் பூர்த்தி செய்க.

| வருமானம் Y | நுகர்வு C | சேமிப்பு S | சராசரி நுகர்வு நாட்டம் APC | சராசரி சேமிப்பு நாட்டம் APS |
|---|---|---|---|---|
| 100 | | | | 0.5 |
| 200 | | | 1.125 | |
| 300 | | | | 0 |
| 400 | | 25 | | |
| 500 | | | | 0.1 |

73. ஒரு பொருளாதாரம் பற்றிய தரவுகள் பின்வருமாறு

| நுகர்வு (C) | 475 | 550 |
|---|---|---|
| வருமானம் (Y) | 500 | 600 |

(i) எல்லை நுகர்வு நாட்டத்தின் பெறுமதி யாது?
(ii) எல்லை சேமிப்பு நாட்டத்தின் பெறுமதி யாது?
(iii) நுகர்வுச் சார்பை அமைக்குக.
(iv) சேமிப்புச் சார்பை அமைக்குக.
(v) பின்வரும் வருமான மட்டங்களுக்கான சராசரி நுகர்வு நாட்டம், சராசரி சேமிப்பு நாட்டம் ஆகியவற்றைக் கணிப்பிடுக.

| வருமானம் (Y) | 200 | 400 | 1,000 | 1,500 | 2,000 |
|---|---|---|---|---|---|
| APC | | | | | |
| APS | | | | | |

74. மூடிய பொருளாதாரம் ஒன்று தொடர்பான தரவுகள் வருமாறு

$C = 0.8\ yd$ $\quad$ $G = 1000$

$I = 500$ $\quad$ $T = 0.25y$

கணிப்பிடுக.

(i) சமநிலைத் தேசிய வருமான மட்டம்
(ii) வரியின் அளவு
(iii) பாதீட்டு நிலுவை
(iv) செவிடத்தக்க வருமானம்
(v) சமநிலையின் போதான நுகர்வு, சேமிப்பு அளவுகள்

75. அரச தலையீடுள்ள எளிய பொருளாதாரம் ஒன்று தொடர்பான தரவுகள் பின்வருமாறு

| | | |
|---|---|---|
| நுகர்வு | = | 200 + 0.75 yd |
| முதலீடு | = | 400 மில்லியன் ரூபா |
| அரச செலவு | = | 500 மில்லியன் ரூபா |
| வரி | = | வருமானத்தில் 20% |

கணிப்பிடுக.

(i) சமநிலை வெளியீட்டு மட்டம்

(ii) வரவுசெலவுத்திட்ட நிலுவை

(iii) நுகர்வு, சேமிப்பு மட்டங்கள்

(iv) சமநிலையின் போது வெளிப்பாய்ச்சலும் உட்பாய்ச்சலும் சமனாகும் என காட்டுக.

76. பொருளாதாரமொன்று தொடர்பான தரவுகள் பின்வருமாறு

| | | |
|---|---|---|
| நுகர்வு | = | செலவுக்கான வருமானத்தில் $^3/_4$ பங்கு |
| முதலீடு | = | 200 மில்லியன் ரூபா |
| அரச செலவு | = | 125 மில்லியன் ரூபா |
| வரி | = | வருமானத்தில் 10% |

கணிப்பிடுக.

(i) சமநிலை வெளியீட்டு மட்டம்

(ii) பாதீட்டு நிலுவை

(iii) வருமானப்பெருக்கி

77. மூடிய பொருளாதாரம் ஒன்று தொடர்பான தரவுகள் பின்வருமாறு.

. C = 4/5 yd, I = 440

G = 1000 T = 1/5 y

(i) சமநிலைத் தேசிய வருமானத்தின் அளவு?

(ii) பாதீட்டு பற்றாக்குறையின் அளவு?

(iii) பாதீட்டுப் பற்றாக்குறை நிதியிடப்பட்ட முறை என்பனவற்றைக் கணிப்பிடுக.

78. பின்வரும் வெற்றிடங்களை நிரப்புக.

(1) உற்பத்தி பெறுமதி = இடைக்கொடுப்பனவுகள் + ..................
..............................

(2) மொத்த உள்நாட்டு உற்பத்தி = ..........................................
+ கைத்தொழில்துறை + சேவைத்துறை

(3) மொத்த உள்நாட்டு உற்பத்தியில் விவசாயத்துறையின் பங்களிப்பு
= விவசாயத்துறை x 100 ÷ ....................................

(4) மொத்தத் தேசிய உற்பத்தி = மொத்த உள்நாட்டு உற்பத்தி + ..............................................................................................

(5) மொத்த உள்நாட்டு உற்பத்தி = மொத்த தேசிய உற்பத்தி + .............................. (-) ..............................

(6) வெளிநாட்டிலிருந்து கிடைத்த தேறிய காரணி வருமானம் = .............................. (-) ..............................

(7) சந்தை விலைத் தேசிய உற்பத்தி = நடைமுறைக்காரணி விலைத் தேசிய உற்பத்தி + .............................. (-) .............. ......................

(8) தேறியமறைமுகவரி = .............................. (-) .......... ..................................

(9) நிலையான விலைத் தேசிய உற்பத்தி = ...................... x 100÷ ..............................................................

(10) மொத்தத் தேசிய உற்பத்தி சுருக்கி = நடைமுறை விலைத் தேசிய உற்பத்தி x 100÷ ........................................

(11) தலா உற்பத்தி = ............................ ÷ நடு ஆண்டுக் குடித்தொகை

(12) தேறிய தேசிய உற்பத்தி = .................................... (-) .................................................. மூலதனத்தேய்வு

(13) மொத்த உள்நாட்டு வருமானம் = வாடகை + கூலியும் சம்பளங்களும் + வட்டி + இலாபம் + ..............................

(14) மொத்தத் தேசிய வருமானம் = மொத்த உள்நாட்டு வருமானம் + ..............................................................................

(15) தேறிய தேசிய வருமானம் = மொத்த தேசிய வருமானம் - ..............................................................................

(16) மொத்த தேசிய வருமானம் - (பகிரப்படாத இலாபங்கள் + நிறுவன வரிகள் + அரச சொத்து வருமானங்கள் + பெறுமானத் தேய்வு ஒதுக்கம்) + ..........................................................
= ..........................................................................

(17) தனிநபரின் கையாள்தகு வருமானம் = தனிநபர்களின் வருமானம் (-) ... ....................................................................

(18) மெய்த்தேசிய வருமானம் = ........................ x 100
நடைமுறை வருட உற்பத்திச் சுருக்கி

(19) மொத்த உள்நாட்டுச் செலவு = மொத்த நுகர்வுச் செலவு + ....... ....................................

(20) மொத்த நுகர்வுச் செலவு = ..................................................
+ அரசாங்கச் நுகர்வு

(21) மொத்த முதலீடுகள் = ........................................ + இருப்பு மாற்றங்கள்

(22) மொத்த முதலீடுகள் = மொத்த உள்நாட்டுச் செலவு (-) ..........................................................................

(23) மொத்த உள்நாட்டு உற்பத்தி மீதான செலவு = ..................
........................+ பொருட்கள் காரணியல்லாத சேவைகளின் ஏற்றுமதி (-) ..................................................................

(24) சந்தை விலையில் மொத்த உள்நாட்டு உற்பத்தி = மொத்த உள்நாட்டு செலவு + ............................................. (-)
............ ......................................................................

(25) பொருட்கள் காரணியல்லாத சேவைகளின் தேறிய இறக்குமதி =.................................... (-) ............................................

(26) பொருட்கள் காரணியல்லாத சேவைகளின் தேறிய ஏற்றுமதி =.................................... (-) ............................................

(27) மொத்த உள்நாட்டு உற்பத்தி மீதான செலவு = சந்தை விலையில் ............................................................

(28) மொத்த தேசிய உற்பத்தி மீதான செலவு = சந்தை விலையில் மொத்த உள்நாட்டு உற்பத்தி + ..........................................

(29) மொத்த உள்நாட்டு உற்பத்தி மீதான செலவு + ................................... (-) ............................................ = சந்தை விலையிலான மொத்த தேசிய உற்பத்தி

(30) மொத்த தேசிய உற்பத்தி மீதான செல்வு மொத்த உள்நாட்டு மீதான செலவு + .............................. (-) ...................................

(31) தேறிய தேசிய உற்பத்தி மீதான செலவு = சந்தை விலையிலான மொத்த தேசிய உற்பத்தி (-) ............................

(32) பொருட்கள் சேவைகளின் ஏற்றுமதி - பொருட்கள் சேவைகளின் இறக்குமதி = ..........................................................

(33) மொத்த மூலவளங்கள் = ........................................................ + பொருட்கள் காரணியல்லாத சேவைகளின் இறக்குமதி

(34) மூலவளங்களின் பயன்பாடு = மொத்த நுகர்வு + ............................. + ..................................................

(35) சந்தை விலையிலான மொத்த தேசிய உற்பத்தி + .......................... = மொத்த நுகர்வு + மொத்த முதலீடு + ...................................

(36) மொத்த முதலீடு = மொத்த மூலவளங்கள் (-) மொத்த நுகர்வு (-) ..........................................................................

(37) மொத்த உள்நாட்டு உற்பத்தி மீதான செலவு = மொத்த மூலவளங்கள் (-) ..........................................................

(38) மொத்த உள்நாட்டுச் சேமிப்பு = மொத்த முதலீடு (-) .........
...............................................................................................

(39) மொத்த உள்நாட்டு நிலையான மூலதனவாக்கம் + ........... ......................... (-) பொருட்கள் காரணியல்லாத சேவைகளின் தேறிய இறக்குமதி = ...........................................................

(40) மொத்த உள்நாட்டு சேமிப்பு வீதம் = மொத்த உள்நாட்டு சேமிப்பு X 100/ ........................................

(41) மொத்த தேசிய சேமிப்பு = .................................... + வெளிநாட்டு தேறிய காரணி வருமானம் + ................................

(42) மொத்த தேசிய சேமிப்பு வீதம் = .................................. X 100 ÷........................................................................

(43) மொத்த முதலீட்டு வீதம் = .................................... X 100 ÷ சந்தை விலையிலான மொத்த உள்நாட்டு உற்பத்தி

(44) சந்தை விலையிலான மொத்த உள்நாட்டு உற்பத்தி (-) மொத்த உள்நாட்டு செலவு = ..........................................................

(45) நிலையான விலையிலான மொத்த தேசிய வருமானம் = ............. ....................................... + வர்த்தக மாற்றுவீத தேறிய விளைவு

(46) சந்தை விலையிலான மொத்த உள்நாட்டு உற்பத்தி (-) மொத்த நுகர்வுச் செலவு = ..............................................................

(47) அரச தலையீடுகளற்ற எளிய பொருளாதாரத்தில் Y = ........... ................. ஆகவும், சேமிப்பு = .................................... ஆகவும் காணப்படும். இங்கு மொத்த நிரம்பல் = .................................. ஆகவும் மொத்தக் கேள்வி = .................................. ஆகவும் காணப்படும்.

(48) நுகர்வு C = a + by எனக் காணப்படும் போது a = ............................. எனவும் b = ................................ எனவும் கொள்ளப்படும்

(49) மூடியபொருளாதாரம் ஒன்றில் Y = ........... ................. ஆகவும் S+ T= ...................................... ஆகவும் காணப்படும். இங்கு AD = ............................ ஆகவும் AS = .............................. ஆகவும் காணப்படும்.

(50) திறந்த பொருளாதாரம் ஒன்றில் Y = ...............................
ஆகவும் ..................................... = I + G + X ஆகவும் காணப்படும். இங்கு AS = ............................ ஆகவும் AD = .................................. ஆகவும் காணப்படும்.

(51) yd = .......................... ஆகக் காணப்படும். இங்கு y என்பது வருமானத்தையும் yd என்பது ...................................... ஐயும் குறிக்கும். அரச தலையீடுகளற்ற எளிய பொருளாதாரத்தில் yd = ............................................................... ஆகக் காணப்படும்.

(52) ஒருவருட காலப்பகுதியில் ஒரு நாட்டின் வதிவுடையோரிடமுள்ள வளங்களான ஊழியம், மூலதனம், முயற்சி போன்றவற்றை பயன்படுத்தி உற்பத்தி செய்யப்பட்ட பெறுமதி ............................ ஆகும்.

(53) ஒரு வருட காலப்பகுதியில் ஒரு நாட்டினுள் உற்பத்தி செய்யப்பட்ட இறுதிப் பொருட்கள் சேவைகளின் மொத்தப் பெறுமதி ............... ......................... ஆகும்.

(54) குறிப்பிட்ட ஆண்டுக்கான மொத்த உள்நாட்டு உற்பத்தியைவிட மொத்தத் தேசிய உற்பத்தியானது குறைவாக இருந்தது. இதற்கான காரணம் ............................................................ எதிர்க்கணியமாக இருந்ததாகும்.

(55) வர்த்தக மாற்றுவீத தேறிய விளைவானது எதிர்க்கணியமாக இருக்கின்ற போது மெய்த்தேசிய உற்பத்தியைவிட.................. .............................. குறைவாக இருக்கும்.

(56) ஒரு நாட்டுக்குள் இறுதிப்பொருட்கள் சேவைகளைக் கொள்வனவு செய்வதற்கு ஏற்பட்ட செலவு................................................ ஆகும்.

(57) ஒரு நாட்டுக்குள் உற்பத்தி செய்யப்பட்ட இறுதிப்பொருட்கள் சேவைகளைக் கொள்வனவு செய்வதற்கு ஏற்பட்ட செலவு ............ .............................................. ஆகும்.

(58) மொத்த உற்பத்தி பெறுமதியிலிருந்து இடைக்கொடுப்பனவுகளை கழிப்பதன் மூலம் பெறப்படுவது ........................................... ஆகும்.

(59) மொத்த தேசிய வருமானத்திலிருந்து நிறுவனங்களது பங்கிடப்படாத இலாபங்கள், வர்த்தக வரிகள், பெறுமானத்தேய்வு, அரச சொத்து வருமானம் போன்றவற்றையும் வீட்டுத்துறையினர் மீதான நேர்வரிகளையும் கழித்து வீட்டுத்துறையினர்க்கான மாற்றல்களை கூட்டுவதன் மூலம் பெறப்படுவது ........................................... ஆகும்.

(60) வருமானத்தில் ஏற்பட்ட மாற்றத்திற்கும் முதலீட்டில் ஏற்பட்ட மாற்றத்திற்கும் இடையிலான விகிதம் ........................................... எனப்படும்.

79. மொத்த உள்நாட்டுச் செலவு, மொத்த உள்நாட்டு உற்பத்தி மீதான செலவு என்பனவற்றை வேறுபடுத்துக.

80. உள்நாட்டு உற்பத்தியை கணிப்பிடுவதற்கு செலவீட்டு வழியை கையாளும் போது அதில் உள்ளடக்கப்படாத செலவின் வகைகள் எவை?

81. வீட்டுத்துறையினரின் வருமானத்தினைப் பெற்றுக்கொள்வதில் மொத்த தேசிய உற்பத்தியின் பெறுமதிக்கு தேவைப்படும் சீராக்கல்கள் யாவை?

82. எச்சந்தர்ப்பங்களில் ஒரு நாட்டினது மொத்த உள்நாட்டுச் செலவு அதன் மொத்த தேசிய உற்பத்தியினது பெறுமதியிலும் பார்க்க உயர்வாக இருக்கலாம்?

83. குறித்த ஓராண்டில் ஒரு கம்பனிக்கு விற்பனை வருமானம் ஒரு மில்லியன் ரூபா கிடைத்தது. இந்த கம்பனி அந்த ஆண்டில் நாட்டின் தேசிய பொருளாக்கத்திற்கு ஒரு மில்லியன் ரூபா பங்களிப்பு செய்துள்ளது என கூறலாமா? உமது விடைக்கு காரணம் தருக.

84. 2004 ஆம் ஆண்டிற்கான ஒரு பொருளாதாரத்தின் தேசிய வருமானத் தரவுகள் நடப்பு காரணி விலைகளில் மில்லியன் ரூபாய்களில் பின்வருமாறு.

| | |
|---|---|
| விவசாயத்துறையில் கூட்டிய பெறுமதி | 155,000 |

| | |
|---|---|
| கைத்தொழில் துறையில் கூட்டிய பெறுமதி | 375,000 |
| சேவைத்துறையில் கூட்டிய பெறுமதி | 470,000 |
| வெளிநாட்டிலிருந்த கிடைத்த தேறிய காரணி வருமானம் | 25,000 |
| மறைமுகவரிகள் | 15,000 |
| மானியம் | 4,750 |
| மூலதன நுகர்ச்சி | 6,000 |
| 1999 ஆம் ஆண்டுக்கான மாறாவிலைத் தேசிய உற்பத்தி | 750,000 |
| மொத்தத் தேசிய உற்பத்திச் சுருக்கி (1996 = 100) | 125 |
| நட்டாண்டுக் குடித்தொகை (மில்லியன்) | 20 |

*கணிப்பிடுக.*

(i) நடைமுறைக் காரணிச்செலவு விலைகளில் மொத்த உள்நாட்டு உற்பத்தி

(ii) நடைமுறைக் காரணிச்செலவு விலைகளில் மொத்த தேசிய உற்பத்தி

(iii) நடைமுறை சந்தை விலைகளில் மொத்த தேசிய உற்பத்தி

(iv) சந்தை விலைகளில் தேறிய தேசிய உற்பத்தி

(v) நிலையான விலைகளில் (1996 விலைகளில்) மொத்த தேசிய உற்பத்தி

(vi) 2000 ஆம் ஆண்டிற்கான பொருளாதார வளர்ச்சி வீதம்

(vii) தலா உற்பத்தி (நடப்பு காரணி விலைகளில்)

(viii) தலா மெய்த் தேசிய உற்பத்தி

(ix) மொத்த உள்நாட்டு உற்பத்தியில் ஒவ்வொரு துறைகளினதும் பங்களிப்பு வீதங்கள்

85. குறித்த ஆண்டுக்கான இலங்கையின் நடைமுறைச் சந்தை விலைகளிலான தேசிய கணக்கீட்டு தரவுகள் (மில்லியன் ரூபாய்களில்) பின்வருமாறு.

| | |
|---|---|
| 1. பொருட்களினதும் காரணியல்லா பணிகளினதும் இறக்குமதிகள் மீதான தனியார் நுகர்வு.......... | 220,000 |
| 2. உள்நாட்டு உற்பத்திப்பொருட்கள் காரணியல்லாத பணிகள் மீதான தனியார் நுகர்வு.......... | 565,000 |
| 3. பொருட்கள் பணிகள் மீதான மத்திய அரசின் நடைமுறைச் செலவு | 98,000 |
| 4. பொருட்கள் பணிகள் மீதான உள்ளூராட்சி அரசின் நடைமுறைச்செலவு | 1,500 |
| 5. மொத்த உள்நாட்டு நிலையான மூலதனவாக்கம் - அரசினதும் அரச தொழில் முயற்சிகளினதும்.......... | 35,000 |
| 6. மொத்த உள்நாட்டு நிலையான மூலதனவாக்கம் - அரசினதும் கூட்டுத்தாபனங்களும் தனியார் துறையும்.......... | 265,000 |

7. இருப்புக்களின் மாற்றம்........................................................................ 100
8. வெளிநாட்டிலிருந்து கிடைத்த தேறிய காரணி வருமானம்.................. -17,800
9. பொருட்களினதும் காரணியல்லாப் பணிகளினதும் ஏற்றுமதிகள்..........391,000
10. பொருட்களினதும் காரணியல்லாப் பணிகளினதும் இறக்குமதிகள்.......470,000
11. வெளிநாட்டு தேறிய தனியார் மாற்றல்கள்........................................... 6,000

கணிப்பிடுக.

(1) மொத்த தனியார் நுகர்வுச் செலவு
(2) பொது நுகர்வு
(3) மொத்த நுகர்வு
(4) மொத்த உள்நாட்டு நிலையான மூலதனவாக்கம்
(5) மொத்த முதலீடு
(6) மொத்த உள்நாட்டுச் செலவு
(7) பொருட்களினதும் காரணியல்லாப் பணிகளினதும் தேறிய ஏற்றுமதிகள்
(8) மொத்த உள்நாட்டு உற்பத்தி மீதான செலவு
(9) சந்தை விலையில் மொத்த உள்நாட்டு உற்பத்தி
(10) மொத்த தேசிய உற்பத்தி மீதான செலவு
(11) சந்தை விலையில் மொத்த தேசிய உற்பத்தி
(12) மொத்த மூலவளங்களின் கிடைப்பனவு
(13) மொத்த மூலவளங்களின் பயன்பாடு
(14) மொத்த உள்நாட்டு சேமிப்பு
(15) மொத்த உள்நாட்டு சேமிப்பு வீதம்
(16) மொத்த தேசிய சேமிப்பு
(17). மொத்த தேசிய சேமிப்பு வீதம்
(18) மொத்த முதலீட்டு வீதம்

86. ஒரு பொருளாதாரத்தில் A, B, C ஆகிய மூன்று நிறுவனங்கள் உள்ளன எனக் கொள்க. C நிறுவனமானது தனது உற்பத்திப் பொருட்களை 40,000 ரூபாவிற்கு நுகர்விற்காக விற்பனை செய்த அதேவேளை A, B ஆகிய நிறுவனங்களிடமிருந்து முறையே ரூபா 8,000, 12,000 பெறுமதியுள்ள மூலப்பொருட்களையும் எரிபொருட்களையும் பெற்றுக்கொண்டது. B நிறுவனமானது A இடமிருந்து ரூபா 1,000 இற்கு பொருட்களைக் கொள்வனவு செய்த அதேவேளை B தனிப்பட்ட நுகர்விற்காக ரூபா 2,000 இற்கு தனது பொருட்களை விற்பனை செய்தது. ஒவ்வொரு நிறுவனத்தினதும் கூட்டப்பட்ட பெறுமதிகளையும், மொத்த கூட்டப் பட்ட பெறுமதிகளையும் கணிப்பிடுக.

87. அரசாங்க துறையினைக் கொண்ட, ஒரு மூடப்பட்ட பொருளாதாரத்தின் நுகர்வுத் தொழிற்பாடு பின்வருமாறு:

$$C = 1{,}200 + 0.75yd$$

மேற்படி பொருளாதாரம் தொடர்பான மேலதிக சில தகவல்கள் வருமாறு

| | | | |
|---|---|---|---|
| தனியார் முதலீடு | I | = | 300 |
| அரசாங்க செலவீடு | (G) | = | 500 |
| நேர்வரி | (T) | = | 0.2y |

1) இப்பொருளாதாரத்தின் சமநிலைத் தேசிய வருமான மட்டத்தை கணிப்பிடுக.

2) மேற்படி சமநிலையின் போது நுகர்வுச் செலவீடு, சேமிப்பு ஆகியவற்றின் மட்டங்களைக் கணிப்பிடுக.

3) இப்பொருளாதாரத்தின் வருமானப் பெருக்கியின் பெறுமதியைக் கணிக்குக.

4) இப்பொருளாதாரத்தின் நிறைதொழில் மட்டத்திற்கு தொடர்புடைய தேசிய வருமானம் ரூபா 6,000 மில்லியன் என மதிப்பீடு செய்யப்படுகின்றதாயின் தொடர்புடைய இடைவெளியை (வீக்க இடைவெளியா / சுருக்க இடைவெளியா)

88. "$Yd = Y - T + R$ என்பதிலிருந்து நீர் விளங்கிக் கொள்வது யாது?

89. மூடப்பட்ட பொருளாதாரம் பற்றிய தரவுகள் பின்வருமாறு

| | | |
|---|---|---|
| C | = | 600 + 0.8yd |
| I | = | 400 மில்லியன் ரூபா |
| G | = | 200 மில்லியன் ரூபா |
| T | = | 0.25 y |
| R | = | 200 மில்லியன் ரூபா |

(1) சமநிலை வெளியீட்டு மட்டத்தை காண்க.

(2) இப்பொருளாதாரத்தின் வருமானச் சுற்றோட்டத்தை வரைக.

90. மூடப்பட்ட பொருளாதாரம் ஒன்று தொடர்பான தரவுகள் பின்வருமாறு

S = 400 + 0.25yd
I = 300 மில்லியன் ரூபா
G = 600 மில்லியன் ரூபா
T = 100 மில்லியன் ரூபா

(1) வெளிப்பாய்ச்சல் உட்பாய்ச்சல் முறையில் சமநிலைத் தேசிய வருமானத்தை கணிப்பிடுக.

(2) பின்வரும் அட்டவணையினைப் பூர்த்தி செய்து சமநிலைத் தேசிய வருமானத்தைக் காட்டுக.

| Y | C | S | I | G | T | Yd | S+T | I+G | E |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1,000 | | | | | | | | | |
| 2,000 | | | | | | | | | |
| 3,000 | | | | | | | | | |
| 4,000 | | | | | | | | | |
| 5,000 | | | | | | | | | |
| 6,000 | | | | | | | | | |

91. ஒரு பொருளாதாரம் தொடர்பான தரவுகள் பின்வருமாறு

| வருமானம் (Y) | நுகர்வு (C) |
|---|---|
| 300 | 275 |
| 600 | 500 |

(i) இப்பொருளாதாரத்தின் நுகர்வுச் சார்பை அமைக்குக.
(ii) இப்பொருளாதாரத்தின் சேமிப்புச் சார்பு யாது?
(iii) எந்த வருமான மட்டத்தில் சேமிப்பானது பூச்சியமாக இருக்கும்?
(iv) இப்பொருளாதாரத்தில் பெருக்கியின் பெறுமதி என்னவாக இருக்கும்?
(v) தனியார் துறையின் முதலீடு 100 மில்லியன் ரூபாவாக இருப்பின் இப்பொருளாதாரத்தின் சமநிலை வெளியீட்டின் பெறுமதி யாது?

92. திறந்த பொருளாதாரம் ஒன்று தொடர்பான தரவுகள் பின்வருமாறு

| | | |
|---|---|---|
| நுகர்வு | = | செலவுக்கான உற்பத்தியில் 85 % |
| தனியார் முதலீடு | = | 1,000 மில்லியன் ரூபா |
| அரச முதலீடு | = | 600 மில்லியன் ரூபா |
| வரி | = | உற்பத்தியில் (வருமானத்தில்) 20 % |

ஏற்றுமதி = 500 மில்லியன் ரூபா
இறக்குமதி = வருமானத்தில் 10 %

*பின்வருவனவற்றை கணிப்பிடுக.*

i) சமநிலையின் போதான வெளியீட்டின் பெறுமதி
ii) அரச பாதீட்டின் மீதி
iii) வியாபார நிலுவை
iv) சமநிலையின் போதான சேமிப்பின் அளவு
v) தனியார் துறையின் முதலீடு 100 மில்லியன் ரூபாவாக இருப்பின் இப்பொருளாதாரத்தின் சமநிலை வெளியீட்டின் பெறுமதி யாது?

93. எளிய பொருளாதாரம் ஒன்று தொடர்பான தரவுகள் பின்வருமாறு

நுகர்வு = $200 + 0.75y$
முதலீடு = 100 மில்லியன் ரூபா

(i) இப்பொருளாதாரத்தின் சமநிலைத் தேசிய வருமான மட்டத்தை வரைபட முறையில் வரைபுத்தாள் ஒன்றில் காட்டுக.
(ii) இப்பொருளாதாரத்தின் முதலீட்டுப் பெருக்கியின் பெறுமதியை கணிப்பிடுக.

94. மூடிய பொருளாதாரம் ஒன்று தொடர்பான தரவுகள் கீழே தரப்படுகின்றன.

நுகர்வு C = $500 + 0.8\,Yd$
தனியார் முதலீடு I = 100 மில்லியன் ரூபா
அரச முதலீடு G = 460 மில்லியன் ரூபா
வரி T = $200 + 0.2\,Y$

(i) சமநிலைத் தேசிய வருமான மட்டம் யாது?
(ii) பொருளாதாரத்தின் செலவிடத்தக்க வருமானம் யாது?
(iii) அரச வரவு செலவுதிட்ட நிலுவையை காண்க.
(iv) சமநிலையின் போதான நுகர்வு, சேமிப்பு ஆகியவற்றைக் காண்க.

95. பின்வரும் தரவுகள் ஒருபொருளதாரத்தின் 2003ஆம் ஆண்டுக்கான நடைமுறைக் காரணி விலையிலான தேசிய வருமானத் தரவுகள் ஆகும். (எல்லாத் தரவுகளும் மில்லியன் ரூபாவில் தரப்பட்டுள்ளது)

தயாரிப்புத் தொழில் ........................ 95000
மொத்த சில்லறை வர்த்தகம் ........................ 108000
வேளாண்மை ........................ 11500

| | |
|---|---|
| சுரங்கத் தொழிலும் கல் உடைத்தலும் | 12400 |
| கடற்றொழில் | 12820 |
| கட்டடவாக்கம் | 15400 |
| மின்சாரம், வாயு, நீர் | 7800 |
| காட்டுத் தொழில் | 10750 |
| போக்குவரத்து, களஞ்சியப்படுத்தல், | 50220 |
| வங்கித்தொழில், காப்புறுதி, உண்மைச் சொத்து | 27500 |
| குடியிருப்புக்களின் உடமை | 10100 |
| பொது நிர்வாகம், பாதுகாப்பு | 19300 |
| ஏனைய பணிகள் | 19210 |
| வெளிநாட்டில் இருந்து கிடைத்த காரணி வருமானம் | 14000 |
| வெளிநாட்டுக்கு அனுப்பிய காரணி வருமானம் | 24000 |
| 2002 ஆம் ஆண்டுக்கான நிலையான விலைகளிலான மொத்த தேசிய வருமானம் | 288000 |
| நேரில் வரிகள் | 4500 |
| நட்டாண்டுக்குடித்தொகை | 20 மில்லியன் |
| உள்ளார்ந்த விலைச் சுட்டெண் (1996=100) | 130 |
| மூலதனத்திற்கான தேய்வு | 3500 |
| மானியம் | 1700 |

**கணிப்பிடுக :**

1. நடைமுறைக் காரணிச் செலவு விலைகளிலான மொத்த உள்நாட்டு உற்பத்தி
2. மொத்த உள்நாட்டு உற்பத்தியில் விவசாயத்துறை, கைத்தொழில்துறை என்பவற்றின் பங்களிப்பு?
3. வெளிநாட்டிலிருந்து கிடைத்த தேறிய காரணி வருமானம்?
4. நடைமுறைக் காரணிச் செலவு விலைகளினாலான மொத்த தேசிய உற்பத்தி?
5. சந்தை விலைகளில் மொத்த தேசிய உற்பத்தி?
6. தேறிய தேசிய உற்பத்தி?
7. மெய்த் தேசிய உற்பத்தி?
8. தலா உற்பத்தி
9. தலா மெய்த்தேசிய உற்பத்தி?
10. பொருளாதார வளர்ச்சி வீதம்?

96. பின்வரும் தரவுகள் ஒரு பொருளாதாரத்தின் 2003 ஆம் ஆண்டிற் கான தேசிய வருமானம் பற்றியவையாகும். (எல்லாத் தரவுகளும் மில்லியன் ரூபாவில் தரப்பட்டுள்ளது)

| | |
|---|---|
| நடைமுறை காரணிவிலையில் மொத்த உள்நாட்டு உற்பத்தி | 193400 |
| வெளிநாட்டிலிருந்து கிடைத்த தேறிய காரணி வருமானம் | (-13200) |
| வெளிநாட்டிலிருந்து கிடைத்த காரணி வருமானம் | 21450 |
| நேரில்வரிகள் | 2700 |
| மானிய உதவுதொகைகள் | 1400 |
| 2002 ம் ஆண்டுக்கான மாறாவிலைத் தேசிய உற்பத்தி | 99500 |
| உள்ளார்ந்த தேசிய உற்பத்திச் சுருக்கி (1996=100) | 175 |
| மூலதனத்திற்கான தேய்வு | 2050 |
| நட்டாண்டுக் குடித்தொகை | 19 மில் |

**பின்வருவனவற்றை கணிப்பிடுக :**

1. நடைமுறை காரணிச் செலவு விலைகளில் மொத்தத் தேசிய உற்பத்தி?
2. வெளிநாட்டுக்கு அனுப்பிய காரணி வருமானம்?
3. நடைமுறை சந்தை விலைகளில் மொத்தத் தேசிய உற்பத்தி?
4. 1996 ஆம் ஆண்டு விலைகளில் மொத்தத் தேசிய உற்பத்தி
5. தலா மெய்த்தேசிய உற்பத்தி
6. சந்தை விலைகளில் தேறிய தேசிய உற்பத்தி?
7. பொருளாதார வளர்ச்சி வீதம்?

97. கீழே தரப்படும் விடயங்கள் ஒரு நாட்டின் 2002 ஆம் ஆண்டுக்குரிய தேசியவருமானத் தரவுகள் ஆகும். (எல்லாத் தரவுகளும் நடைமுறைக் காரணிச் செலவு விலைகளில் தரப்பட்டுள்ளது)

| | மில்லியன் ரூபா |
|---|---|
| விவசாயத் துறையில் கூட்டிய பெறுமதி | 68740 |
| கைத்தொழில் துறையில் கூட்டிய பெறுமதி | 88390 |
| சேவைத் துறையில் கூட்டிய பெறுமதி | 112500 |

| | |
|---|---|
| மொத்தத் தேசிய உற்பத்தி ........................................ | 260000 |
| மறைமுக வரிகள் ........................................ | 4375 |
| மானியங்கள் ........................................ | 1690 |
| மூலதனத்திற்கான தேய்வு ........................................ | 1800 |
| 2001ஆம் ஆண்டிற்கான மாறாவிலைத் தேசிய உற்பத்தி ......... | 190000 |
| 2002ஆம் ஆண்டிற்கான மாறாவிலைத் தேசிய உற்பத்தி ..... | 200000 |

**பின்வருவனவற்றை கணிப்பிடுக :**

1. வெளிநாட்டிலிருந்து கிடைத்த தேறிய காரணி வருமானம்?
2. நடைமுறை சந்தை விலையில் மொத்த தேசிய உற்பத்தி?
3. தேறிய மறைமுக வரிகள்?
4. தேறிய தேசிய உற்பத்தி?
5. உள்ளார்ந்த மொத்த தேசிய உற்பத்திச் சுருக்கி?
6. பொருளாதார வளர்ச்சி வீதம்?

98. பின்வரும் தரவுகள் ஒரு பொருளாதாரத்தின் நடைமுறைக் காரணிச்செலவு விலைகளிலான 2003 ஆம் ஆண்டுக்குரிய தேசிய வருமானத் தரவுகள் ஆகும்.

| | மில்லியன ரூபா |
|---|---|
| விவசாயத்துறையின் கூட்டிய பெறுமதி ........................ | 40000 |
| கட்டடவாக்கம் ........................................ | 15000 |
| தயாரிப்புத் தொழில் ........................................ | 10000 |
| சுரங்கத்தொழிலும் கல் உடைத்தலும் ........................ | 5000 |
| மின்சாரம், வாயு, நீர் ........................................ | 8000 |
| சேவைத்துறையில் சேர்க்கப்பட்ட பெறுமதி .................... | 75000 |
| 2003 ஆம் ஆண்டுக்கான மெய்த்தேசிய உற்பத்தி.......... | 120000 |
| 2002 ஆம் ஆண்டுக்கான மெய்த்தேசிய உற்பத்தி.......... | 110000 |
| தேறிய மறைமுக வரிகள் ........................................ | (-1500) |
| தேறிய வெளிநாட்டு காரணி வருமானம் ........................ | (-3000) |

**பின்வருவனவற்றை கணிப்பிடுக :**

1. நடைமுறை காரணிச் செலவு விலைகளில் மொத்தத் தேசிய உற்பத்தி?
2. நடைமுறை சந்தை விலைகளில் மொத்தத் தேசிய உற்பத்தி?
3. மொத்தத் தேசிய உற்பத்திச் சுருக்கி?

4. பொருளாதார வளர்ச்சி வீதம்?
5. மொத்த உள்நாட்டு உற்பத்தியில் விவசாயத்துறை, கைத்தொழிற்துறை, சேவைத்துறை ஆகிய துறைகளின் சார்பளவான பங்களிப்பு?

99. ஒரு நாட்டின் 2003ஆம் ஆண்டுக்குரிய நடைமுறைக் காரணிச் செலவு விலைகளிலான தேசிய வருமானத் தரவுகள் வருமாறு:

| | மில்லியன் ரூபா |
|---|---|
| கூலியும் சம்பளங்களும் | 87600 |
| அரசுக்குகடன் வழங்கி வீட்டுத்துறை பெற்ற வட்டி வருமானம் | 4500 |
| பகிரப்படாத இலாபங்கள் | 12300 |
| வாடகை | 47500 |
| வட்டி | 36400 |
| சுயதொழில் வருமானங்கள் | 28450 |
| பங்குலாபங்கள் | 63500 |
| வெளிநாட்டிலிருந்து கிடைத்த காரணி வருமானம் | 4830 |
| பெறுமானத் தேய்வு | 5100 |
| வெளிநாட்டுக்கு அனுப்பிய காரணி வருமானம் | 13470 |
| நேர்வரிகள் | 3400 |
| மானிய உதவு தொகைகள் | 1800 |
| மறைமுக வரிகள் | 13500 |
| 2002 ஆம் ஆண்டுக்கான நிலையான விலைத்தேசிய உற்பத்தி | 145549 |
| நட்டாண்டு குடித்தொகை | 20 மில்லியன் |
| உள்ளார்ந்த தேசிய உற்பத்தி சுருக்கி (1996=100) | 175 |

**பின்வருவனவற்றை கணிப்பிடுக :**

1. மொத்த உள்நாட்டு வருமானம்?
2. மொத்த தேசிய வருமானம்?
3. 1996 ஆம் ஆண்டு விலைகளில் தேசிய வருமானம்?
4. பொருளாதார வளர்ச்சி வீதம்?
5. குடித்தனத் துறையினரின் வருமானம்?
6. குடித்துறையின் செலவிடக்கூடிய வருமானம்?

100.ஒரு நாட்டுக்குரிய 2002 ஆம் ஆண்டுக்கான நடைமுறை காரணிச்செலவு விலைகளிலான தேசிய வருமானத் தரவுகள் பின்வருமாறு.

| | மில்லியன் ரூபா |
|---|---|
| விவசாயத்துறையின் கூட்டப்பட்ட பெறுமதி .................. | 37025 |
| வாடகை.......................................................... | 38410 |
| கூலியும் சம்பளங்களும் .............................................. | 93300 |
| கட்டடவாக்கம் ............................................................ | 55200 |
| கைத்தொழிற்துறையின் கூட்டப்பட்ட பெறுமதி ......... | 12000 |
| மொத்த சில்லறை வர்த்தகம் ......................................... | 7500 |
| குடியிருப்புக்களின் உடமை ......................................... | 4750 |
| பொதுநிர்வாகம் பாதுகாப்பு ........................................... | 17850 |
| வங்கித்தொழில், காப்புறுதி, உண்மைச் சொத்துக்கள் | 8620 |
| ஏனைய பணிகள் ............................................................ | 4700 |
| போக்குவரத்து களஞ்சியப்படுத்தல் ............................... | 19000 |
| வட்டி ........................................................................ | 26500 |
| இலாபங்கள் ............................................................... | 44735 |
| மூலதனத் தேய்வு .......................................................... | 8500 |
| வெளிநாட்டிலிருந்து கிடைத்த தேறிய காரணி வருமானம் ........ | (-13650) |
| 2001 ஆம் ஆண்டுக்கான மெய்த்தேசிய வருமானம் ....... | 70000 |
| நட்டாண்டுக் குடித்தொகை ........................................ | 19 மில்லியன் |
| நேர்வரிகள் ................................................................... | 15800 |
| நேரில் வரிகள் ............................................................. | 25300 |
| மானியக் கொடுப்பனவுகள் ........................................... | 13250 |
| உள்ளார்ந்த தேசிய உற்பத்திச் சுருக்கி (1996 = 100) | 250 |

**பின்வருவனவற்றை கணிப்பிடுக :**

1. நடைமுறைக் காரணி விலைகளில் மொத்த உள்நாட்டு வருமானம்?
2. நடைமுறைக் காரணி விலைகளில் மொத்த தேசிய வருமானம்?
3. 1996 ஆம் ஆண்டு விலைகளில் மொத்த தேசிய வருமானம்?
4. நடைமுறை காரணி விலைகளில் மொத்த உள்நாட்டு உற்பத்தி?
5. நடைமுறை சந்தை விலைகளில் மொத்த தேசிய உற்பத்தி?
6. மாறாவிலை தேசிய உற்பத்தி?

7. மொத்த உள்நாட்டு உற்பத்தியில் விவசாயத்துறை, கைத்தொழிற்துறை என்பவற்றின் சார்பளவான பங்களிப்பு?
8. தலா உற்பத்தி
9. தலா வருமானம்?
10. தலா மெய்த்தேசிய உற்பத்தி?
11. தலா மெய்த்தேசிய வருமானம்?
12. பொருளாதார வளர்ச்சி வீதம்?

101. ஒரு நாட்டின் 2003ஆம் ஆண்டிற்குரிய தேசிய வருமானத் தரவுகள் பின்வருமாறு (எல்லாத் தரவுகளும் நடைமுறைச் சந்தை விலையில்)

மில்லியன் ரூபாவில்

| | |
|---|---|
| உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள் காரணியல்லாத சேவைகள் மீதான தனியார் நுகர்வு | 475000 |
| மத்திய அரசின் நடைமுறைக் கொடுப்பனவு | 955000 |
| உள்ளூராட்சி அரசின் நடைமுறைக் கொடுப்பனவு | 3500 |
| இறக்குமதி செய்யப்பட்ட பொருட்கள் காரணியல்லாத சேவைகள் மீதான தனியார் நுகர்வு | 195000 |
| மொத்த உள்நாட்டு நிலையான மூலதனவாக்கம் | 223000 |
| இருப்புகளின் மாற்றம் | 1500 |
| பொருட்கள் காரணியல்லாத சேவைகளின் ஏற்றுமதி | 330000 |
| பொருட்கள் காரணியல்லாத சேவைகளின் இறக்குமதி | 395000 |
| வெளிநாட்டிலிருந்து கிடைத்த காரணி வருமானம் | 12000 |
| வெளிநாட்டுக்கு அனுப்பிய காரணி வருமானம் | 27500 |
| மூலதன தேய்வு | 5500 |

**பின்வருவனவற்றை கணிப்பிடுக :**

1. மொத்த தனியார் நுகர்வுச் செலவு?
2. மொத்த அரசாங்க நுகர்வுச் செலவு?
3. மொத்த நுகர்வுச் செலவு?
4. மொத்த முதலீடுகள்?
5. மொத்த உள்நாட்டு செலவு?
6. தேறிய ஏற்றுமதிகள்?
7. தேறிய இறக்குமதிகள்?
8. வெளிநாட்டிலிருந்து பெற்ற தேறிய காரணி வருமானம்?

9. மொத்த உள்நாட்டு உற்பத்தி மீதான செலவு?
10. மொத்த தேசிய உற்பத்தி மீதான செலவு?
11. தேறிய தேசிய உற்பத்தி மீதான செலவு?

102. ஒரு நாட்டின் குறிப்பிட்ட ஆண்டிற்கான சந்தை விலையிலான தேசிய வருமானத் தரவுகள் பின்வருமாறு:

| | மில்லியன் ரூபாவில் |
|---|---|
| மொத்த தனியார் நுகர்வுகள் | 565400 |
| மொத்த பொது நுகர்வுகள் | 76300 |
| சந்தை விலையில் மொத்த உள்நாட்டு உற்பத்தி | 667700 |
| பொருட்கள் காரணியல்லாத சேவைகளின் இறக்குமதி | 307420 |
| பொருட்கள் காரணியல்லாத சேவைகளின் ஏற்றுமதி | 237700 |
| வெளிநாட்டு தேறிய காரணி வருமானம் | (-6900) |

**பின்வருவனவற்றை கணிப்பிடுக :**

1. மொத்த முதலீடுகள்?
2. மொத்த முதலீட்டு வீதம்?
3. மொத்த உள்நாட்டுச் செலவு?
4. சந்தைவிலையில் மொத்தத் தேசிய உற்பத்தி?
5. . மூலவளங்களின் கிடைப்பனவு?
6. மூலவளங்களின் பயன்பாடு?

103. ஒரு நாட்டின் குறிப்பிட்ட ஆண்டுக்கான தேசிய வருமானத் தரவுகள் பின்வருமாறு

| | மில்லியன் ரூபாவில் |
|---|---|
| நடைமுறைக் காரணி விலையிலான மொத்த உள்நாட்டு உற்பத்தி | 102000 |
| தேறிய மறைமுக வரிகள் | (-6000) |
| வெளிநாட்டிலிருந்து கிடைத்த தேறிய காரணி வருமானம் | (-2500) |
| பொது நுகர்வு | 25000 |

| | |
|---|---|
| தனியார் நுகர்வு | 42000 |
| மொத்த முதலீடு | 37500 |
| மொத்த உள்நாட்டு நிலையான மூலதனவாக்கம் | 28500 |
| பண்டங்கள் காரணியல்லாத பணிகளின் இறக்குமதி | 8500 |

**பின்வருவனவற்றை கணிப்பிடுக :**

1. மொத்த உள்நாட்டு செலவு
2. மொத்த உள்நாட்டு உற்பத்தி மீதான செலவு
3. மொத்த தேசிய உற்பத்தி மீதான செலவு
4. மொத்த மூலதனவளங்களின் கிடைப்பனவு
5. மூலவளங்களின் பயன்பாடு
6. மொத்த உள்நாட்டுச் சேமிப்பு வீதம்

104. பின்வரும் தரவுகளின் உரிய தரவுகளை மட்டும் பயன்படுத்தி சந்தை விலைகளிலமைந்த மொத்த உள்நாட்டு வருமானத்தை கணிப்பிடுக.

| | மில்லியன் ரூபாவில் |
|---|---|
| ஊழியம் மீதான கொடுப்பனவுகள் | 500 |
| விவசாய உற்பத்தி | 230 |
| மொத்தலாபம் | 200 |
| வட்டிச் செலுத்தல்கள் | 150 |
| கைத்தொழில் உற்பத்திகள் | 220 |
| தேறிய நேரில்வரி | 50 |
| வாடகைச் செலுத்தல்கள் | 75 |
| பொதுநுகர்வு | 350 |
| ஏற்றுமதிகள் | 140 |

105. பின்வரும் தரவுகளிலிருந்து உரியவற்றை பயன்படுத்தி குடித்தன துறையினரின் வருமானத்தைக் கணிப்பிடுக.

| | மில்லியன் ரூபாவில் |
|---|---|
| காரணிச் செலவு விலைகளில் மொத்த தேசிய உற்பத்தி | 5000 |
| தேறிய வெளிநாட்டு தனியார் மாற்றல்கள் | 650 |
| ஓய்வூதியம் | 350 |
| வீட்டுத்துறைக்கான உதவு தொகைகள் | 250 |
| அரசுக்கு வீட்டுத்துறையினர் வழங்கிய கடன்களுக்காக | |

| | |
|---|---|
| வீட்டுத்துறையினர் பெற்ற வட்டி | 400 |
| பெறுமானத்தேய்வு ஒதுக்கம் | 250 |
| அரச சொத்து வருமானங்கள் | 325 |
| வாடகை வருமானம் | 1200 |

106. பின்வருவனவற்றிலிருந்து பொருத்தமான பெறுமதிகளை தெரிவு செய்து மொத்த உள்நாட்டு உற்பத்தியின் மீது மேற்கொள்ளப்பட்ட செலவினத்தை கணிப்பிடுக.

| | மில்லியன் ரூபாவில் |
|---|---|
| பொது நுகர்வு | 50000 |
| தனியார் நுகர்வு | 75000 |
| தேறிய வெளிநாட்டு காரணி வருமானம் | 12000 |
| மொத்த உள்நாட்டு மூலதனங்கள் | 35000 |
| பொருட்கள் காரணியல்லாத சேவைகளின் ஏற்றுமதி | 22000 |
| பொருட்கள் காரணியல்லாத சேவைகளின் இறக்குமதி | 17000 |
| ஊழியத்திற்கான கொடுப்பனவுகள் | 20000 |
| வட்டிக் கொடுப்பனவுகள் | 16500 |
| தொக்குகளின் மாற்றம் | 25000 |

107. பின்வரும் தரவுகளை பயன்படுத்தி கீழ்வரும் வினாக்களுக்கான விடைகளைத் தருக.

| | மில்லியன் ரூபாவில் |
|---|---|
| பொதுநுகர்வு | 15000 |
| இறக்குமதிகள் | 8500 |
| முதலீடுகள் | 7250 |
| மொத்த உள்நாட்டு நிலையான முதலீடுகள் | 5500 |
| மொத்த நுகர்வு | 37500 |
| தேறிய வெளிநாட்டு காரணி வருமானம் | (-3500) |
| சந்தைவிலைகளில் மொத்த உள்நாட்டு உற்பத்தி | 42250 |

**பின்வருவனவற்றை கணிப்பிடுக :**

1. சந்தை விலைகளில் மொத்த தேசிய உற்பத்தி
2. தேறிய ஏற்றுமதி
3. மொத்த உள்நாட்டு சேமிப்பு
4. மூலவளங்களின் கிடைப்பனவு
5. மூலவளங்களின் பயன்பாடு

6. மொத்த உள்நாட்டு சேமிப்பு வீதம்
7. மொத்த முதலீட்டு வீதம்

108. ஒரு பொருளாதாரம் சம்மந்தமாக 2003 ஆம் ஆண்டிற்குரிய பின்வரும் தரவுகள் உமக்குத் தரப்பட்டுள்ளன. சகல தொகைகளும் மில்லியன் ரூபாவிலே தரப்பட்டுள்ளன.

| | |
|---|---|
| விவசாயத்துறையில் கூட்டிய பெறுமானம் | 2600 |
| தனியார் நுகர்வு | 6000 |
| பண்டங்களினதும் சேவைகளினதும் ஏற்றுமதி | 1300 |
| மொத்த உள்நாட்டு நிலையான மூலதனம் | 800 |
| கைத்தொழில் துறையில் கூட்டிய பெறுமானம் | 2000 |
| வெளிநாடுகளிலிருந்து தேறிய காரணிவருமானம் | 100 |
| பொது நுகர்வு | 1500 |
| அரசாங்க வருமானம் | 1700 |
| வெளிநாட்டுச் சொத்துக்கள் | 2800 |
| பண்டங்கள், சேவைகள் ஆகியவற்றினது இறக்குமதி | 1800 |
| சேவைகள் துறையில் கூட்டிய பெறுமானம் | 3500 |
| தொக்குகளில் (கையிருப்பில்) மாற்றம் | 200 |
| மொத்த தேசிய உற்பத்தி | 600 |

**பொருத்தமான தரவுகளைப் பயன்படுத்தி பின்வருவனவற்றைக் கணிக்க.**

1. மொத்த உள்நாட்டு உற்பத்தி
2. மொத்த தேசிய உற்பத்தி
3. மொத்த உள்நாட்டுச் செலவு
4. வெளிநாட்டில் தேறிய முதலீடு

## கடந்த கால பரீட்சை வினாக்கள்
## *1997*

1. (i) மொத்தத் தேசிய உற்பத்தியின் பெறுமதியினை, வருமான அணுகு முறையைப் பயன்படுத்தியும் செலவு அணுகு முறையைப் பயன்படுத்தியும் பெற்றுக் கொள்ளலாம் என்பதை நிரூபிப்பதற்கு உதாரணரீதியான புள்ளி விபரங்களின் உதவியுடன் அட்டவணை யொன்று தயாரிக்கவும்.

   (ii) வீட்டுத்துறை வருமானத்தினைப் பெற்றுக்கொள்வதில், மொத்தத் தேசிய உற்பத்தியின் பெறுமதிக்குத் தேவைப்படும் சீராக்கல்கள் யாவை?

2. மூடப்பட்ட பொருளாதாரமொன்றிலே நுகர்வு எப்பொழுதும் செலவுக்கான வருமானத்தில் முக்கால் பங்காகும் எனவும் முதலீடு (I) ரூ.50 பில்லியானாகும் எனவும் அரசாங்க நடவடிக்கை இல்லையெனவும் கருதுக.

(i) தேசிய சமநிலை வருமான மட்டத்தை கணிக்குக.

(ii) முதலீடு ரூ. 75 பில்லியனாக உயர்ந்தால், புதிய சமநிலைத் தேசிய வருமானம் எவ்வளவாகும்?

(iii) முதலீடு ரூ.50 பில்லியனில் நிலையாக உள்ளது எனக் கொள்ளவும். எல்லா வருமானங்களிலும் 20 சதவீதம் நேர்வரியாக அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. திட்டமிடப்பட்ட அரசாங்கச் செலவு ரூ.30 பில்லியனாக இருந்தால், சமநிலைத் தேசிய வருமானம் எவ்வளவாகும்?

3. வருமான முறையினூடாக மொத்தத் தேசிய உற்பத்தியின் மதிப்பீட்டினைச் செய்யுமிடத்து, பின்வருவனவற்றில் எவை நீக்கப்படுகின்றன?

(i) கூலிகள்
(ii) புலமைப் பரிசில்களின் பெறுமதி
(iii) பங்குலாபங்கள்
(iv) ஓய்வூதியங்கள்
(v) நேர்வரிகள்
(vi) அரசாங்கத்திலிருந்து வட்டி வருமானங்கள்
(vii) தொழில் நிறுவனங்களின் பங்கிடப்படாத இலாபங்கள்
(viii) உணவு முத்திரைகளின் பெறுமதி

4. பின்வரும் வசனங்களில் இடைவெளிகளை நிரப்புக.

(i) மொத்த உள்நாட்டு உற்பத்தி + ........................................ = மொத்த தேசிய உற்பத்தி

(ii) மொத்தத் தேசிய உற்பத்தி - தேய்வுப் பெறுமதி = ......................... ............................

5. பின்வரும் வசனங்களில் இடைவெளிகளை நிரப்புக.

(i) மொத்த உள்நாட்டுச் செலவு + பொருட்களினதும் காரணியல்லாச் சேவைகளினதும் ஏற்றுமதிகள் - பொருள்களினதும் காரணியல்லாச் சேவைகளினதும் இறக்குமதிகள் = ...............................................

(ii) தனியார் நுகர்வும் பொது நுகர்வும் + மொத்த உள்நாட்டு நிலையான மூலதனவாக்கம் + இருப்புகளில் மாற்றம் = ........ ......................................

6. அரசாங்க நடவடிக்கைகள் இல்லாத மூடப்பட்ட பொருளாதார மொன்றினை எடுத்துக் கொள்ளவும். இதில் $I = 600$, $S = 0.25Y$ என்பவற்றுடன் பொருளாதாரம் சமநிலையிலிருப்பின், **Y, C** ஆகியவற்றின் பெறுமதிகளைக் காணவும்.

7. அரசாங்க நடவடிக்கைகள் இல்லாத மூடப்பட்ட பொருளாதாரமொன்றினை எடுத்துக் கொள்ளவும். அத்தகைய ஒரு பொருளாதாரத்தில் மொத்தக் கேள்வி எவ்வாறு அதிகரிக்கலாம்?

## *1998*

8. (i) வருமானம், செலவு, வெளியீடு ஆகிய முறைகளில் தேசிய உற்பத்தியினை மதிப்பீடு செய்யுமிடத்து இரட்டைக் கணிப்பீடு என்பதனை தவிர்ப்பதற்கு என்ன ஒழுங்குகள் கையாளப்படும்?

   (ii) உற்பத்தியில் எதிர்க்கணிய பெறுமதிகள் விளைவிக்கப்படுவதைக் கணக்கெடுக்கத் தவறுதல் மொத்த தேசிய உற்பத்தி மதிப்பீடுகளின் பிரதான குறைபாடாகும். இக்கூற்றினை உதாரணங்களுடன் விளக்குக.

9. (i) பேரின பொருளாதாரச் சமநிலை என்பதால் விளங்கிக் கொள்வதென்ன?

   (ii) கீழ் காணப்படுவது வெளிநாட்டு வர்த்தகமில்லாத பொருளாதார மொன்றைப் பற்றிய தரவுகளாகும்.

| | | |
|---|---|---|
| முதலீடு | $I =$ | 50 மில்லியன் ரூபா |
| அரசாங்க செலவு | $G =$ | 30 மில்லியன் ரூபா |
| நுகர்வு | $C =$ | செலவுக்கான வருமானத்தில் (Yd) 0.8 |
| வரிகள் | $T =$ | மொத்த வருமானத்தில் (Yd) 0.25 |

   சமநிலையில் மொத்த வருமானத்தின் (Y) பெறுமதி என்ன? இதில் வரவு செலவுத்திட்டக் குறைவா அல்லது மிகையா ஏற்படலாம்? இத்தொகை எவ்வளவாகும்?

10. ஒரு பொருளாதாரத்தின் மொத்தக் கேள்வியில் பின்வருவனவற்றில் எவை சேர்க்கப்படுகின்றன?

   (i) T (வருவாய்கள்) (ii) G (அரசாங்க செலவுகள்)

   (iii) M (இறக்குமதிகளின் பெறுமதி) (iv) S (சேமிப்பு)

(v) C (நுகர்வு) (vi) X (ஏற்றுமதிகளின் பெறுமதி)
(vii) I (முதலீடு)

11. (i) விவசாயம், கைத்தொழில், சேவைகள் ஆகியவற்றில் கூட்டப்படும் பெறுமதி =..................................................
(ii) மொத்தத் தேசிய உற்பத்தி - வெளிநாட்டிலிருந்து பெறும் காரணி வருமானம் +........................................................ = மொத்த உள்நாட்டு உற்பத்தி .

12. (i) மொத்த உள்நாட்டு உற்பத்தி + .................................... = மொத்த வளங்கள்
(ii) (நடைமுறை விலைகளில் மொத்த தேசிய உற்பத்தி + நிலையான விலைகளில் மொத்த தேசிய உற்பத்தி) X 100= ........................................................................

13. மொத்த உள்நாட்டு உற்பத்தியில் இருந்து பெறுகின்ற வருமானங்களில் பின்வரும் எந்த வருமானங்கள் சேர்க்கப்படுவதில்லை?
(i) அரசாங்க படுகடன் மீது செலுத்தப்படும் வட்டி
(ii) தொழில் நிறுவனங்களின் பங்கிடப்படாத இலாபங்கள்
(iii) ஓய்வூதியங்கள்
(iv) அரசாங்கத்தின் சொத்து வருமானம்

14. தேசிய வருமானக் கணக்குகளில் பொருளாதாரத்தில் உற்பத்தி செய்யப்படும் பொருள்கள் சேவைகள் சில சேர்க்கப்படாதது ஒரு குறைபாடாகக் கருதப்படுகின்றது. பின்வருவனவற்றில் எவை சேர்க்கப்படுவதில்லை.
(i) இடைப் பொருள்கள்
(ii) சந்தைப்படுத்தாத வெளியீடுகள் அல்லது பிழைப்பு மட்ட வெளியீடுகள்
(iii) வெளிநாட்டிலிருந்து தனியாரினால் அனுப்பப்படும் பணம்
(iv) தலைமறைவான அல்லது சட்டவிரோதமான பொருளாதார நடவடிக்கைகள்

## 1999

15. 1997 இல் இலங்கையின் மொத்த தலா உற்பத்திப் பெறுமதி அமெரிக்க டொலரில் நிலவிய நாணயமாற்று வீதத்தின் அடிப்படையில் 800 டொலர்களாக இருந்துள்ளது. ஆனால் இதனை

கொள்வனவு சக்தி சமன்பாட்டின் அடிப்படையில் அளவிட்டபொழுது அது மூன்று மடங்குக்கு மேலான பெறுமதியினை, அதாவது 2480 டொலர்களைக் கொண்டுள்ளது?

(i) கொள்வனவுச் சக்திச் சமன்பாடு என்றால் என்ன?

(ii) நிலவுகின்ற நாணயமாற்று வீதத்தின் அடிப்படையில் அமெரிக்க டொலர்களில் பெறும் மதிப்பிட்டிற்கும் கொள்வனவு சக்திச் சமன்பாட்டின் அடிப்படையில் பெறப்படும் மதிப்பீடுகளுக்கு மிடையே பெருமளவு வித்தியாசம் ஏற்படுவதை எவ்வாறு விளக்கலாம்?

(iii) மொத்த தலா உற்பத்தியினை கொள்வனவு சக்தி சமன்பாட்டில் கணக்கிடுதல் பற்றிய முக்கியத்துவம் பற்றிக் கருத்துரைக்குக.

16. ஒரு மூற்பட்ட பொருளாதாரம் பற்றிய பேரின பொருளாதார மாறிகள் கீழ்வருமாறு தரப்பட்டுள்ளன.

முதலீடு (I) ரூ. 150 பில்லியன்

அரசாங்க செலவீடு (G) ரூ. 270 பில்லியன்

நுகர்வு (C) செலவுக்கான வருமானத்தின் (Yd) 80 சதவீதமாக காணப்பட்டுள்ளது.

வரிகள் (T) வருமானத்தில் (Y) 10 சதவீதமாக அமைந்துள்ளது.

$$I = 150 \qquad C = 0.8\,Yd$$
$$G = 270 \qquad T = 0.1\,Y$$

(i) பொருளாதாரம் சமநிலையில் இருக்குமிடத்து, தேசிய வெளியீட்டின் பெறுமதி என்ன?

(ii) சேமிப்பிற்கும் முதலீட்டிற்கும் இடையே உள்ள வேறுபாடு யாது? இப் பொருளாதாரத்தில் சேமிப்பு (S), முதலீடு (I) சமன்பாடு (S=I) சமநிலை தொடர்பாக ஏன் ஒரு தேவையான நிபந்தனையாக இல்லை.

(iii) அரசாங்க வரவு செலவுத் திட்டத்தில் உள்ள பற்றாக்குறையின் அளவு என்ன? அரசாங்கம் எவ்வாறு வரவு செலவுத் திட்டப் பற்றாக்குறையினை நிதிப்படுத்தியுள்ள்து?

17. தேசிய வருமானக் கணக்கு என்பதன் பொருள் யாது?

(i) வருட முடிவில் ஒரு பொருளாதாரத்தில் உள்ள எல்லா உற்பத்தி அலகுகளினதும் கணக்குகளின் கூட்டுத்தொகை.

(ii) ஒரு நாட்டின் மொத்த உற்பத்தி தொடர்பான வெளியீடு, வருமானம், செலவீடு ஆகிய அணுகு முறைகளைப் பயன்படுத்தி பெறப்படும் பெறுமதியாகும்.

(iii) கூட்டப்படும் பெறுமதி, இறுதிப் பொருள் பெறுமதி ஆகியவற்றைப் பயன்படுத்தி தேசிய வெளியீட்டுப் பெறுமதியினைப் பெறுதல்

(iv) உள்நாட்டு உற்பத்தியுடன் வெளியிலிருந்து கிடைக்கப்பெறும் தேறிய காரணி வருமானத்தைக் கூட்டுமிடத்துப் பெறப்படும் ஒரு நாட்டின் தேசிய வெளியீடு.

18. வெளியீடு, வருமானம், செலவு ஆகிய மாற்றீடான அணுகு முறைகளைப் பயன்படுத்தி தேசிய உற்பத்தி பற்றிய மதிப்பீடுகள் மேற்கொள்ளப்படும் போது ஏன் ஒரே முடிவினைத் தருகின்றன?

(i) ஒரு பொருளாதாரத்தின் மொத்தவெளியீடு, மொத்த வருமானம், மொத்தசெலவீடு ஆகியவை கட்டாயமாகச் சமமானவையாக இருப்பதனால்.

(ii) இம் மதிப்பீடுகளில் வித்தயாசம் ஏற்படின் அவை புள்ளிவிபர முரண்பாடுகளினால் ஏற்படுபவையாகக் கருதப்படுவதனால்.

(iii) தேசிய வெளியீட்டின் பெறுமதி, அவ்வெளியீட்டிலிருந்து பெறப்படும் வருமானம், அவ்வெளியீட்டின் மீதான செலவீடு ஆகியவை ஒரே விடயத்தைக் குறிப்பதனால்.

(iv) வருமானச் சுற்றோட்டம், அவை எல்லாம் சமனாவதனை உறுதிப் படுத்துவதனால்.

19. தவறான கூற்றுக்களாக உங்களால் கருதப்படுவதனை இனங் காண்க.

(i) மொத்த உள்நாட்டுச் செலவீடு, மொத்த உள்நாட்டு உற்பத்தியினைக் கொள்வனவு செய்வதற்கான செலவாகும்.

(ii) மொத்த உள்நாட்டு உற்பத்தியுடன் வெளிநாட்டு வர்த்தக நிலுவையினைக் கூட்டுமிடத்து கிடைப்பது மொத்த தேசிய உற்பத்தி

(iii) வருமான அணுகுமுறையினைப் பயன்படுத்தி தேசிய உற்பத்தியினை மதிப்பிடும் பொழுது உழைப்பு வருமானங்களே கணக்கில் எடுக்கப்படும்.

(iv) நடப்பு விலைகளில் உள்ள மொத்த தேசிய உற்பத்தியினை நிலையான விலைகளிலான மொத்த தேசிய உற்பத்தியாக மாற்றுமிடத்து அதன் விளைவாக உள்ளார்ந்த மொத்த தேசிய விலைச் சுட்டி கிடைக்கின்றது.

20. ஒரு நாட்டின் தேசிய உற்பத்தியினை, செலவீட்டு முறையினைப் பயன்படுத்தி மதிப்பிடும் போது, நீக்கப்படும் செலவீட்டுக் கூறுகளை இனங்காண்க.
   (i) போர் தொடர்பாக அரசாங்கத்திற்கு ஏற்படும் செலவு
   (ii) தொழில் நிறுவனங்களினால் இடைப்பொருள்களின் மீது செய்யப்படும் செலவு
   (iii) வெளிநாட்டிலிருந்து அரசாங்கத்தினால் கடன் பெற்றுச் செய்யப்பட்ட செலவு
   (iv) நிலம், சொத்து ஆகிய பொருள்களின் மறு விற்பனை

21. ''பேரின பொருளாதாரச் சமநிலை'' என்பதன் பொருள் என்ன? நீங்கள் ஏற்றுக் கொள்ளும் விடைகளை இனங்காண்க.
   (i) ஒரு பொருளாதாரத்தில் பொருட்சந்தைகளும், காரணிச் சந்தைகளும் சமநிலையில் இருத்தல்.
   (ii) சேமிப்பு முதலீட்டுக்குச் சமனாக இருத்தல்
   (iii) ஒரு பொருளாதாரத்தின், மொத்த வெளியீடு தளம்பலில்லாமல் உறுதியாக இருத்தல்.
   (iv) விலையின் உறுதிப்பாடும், அரசாங்க வரவு செலவுத்திட்டத்தில் பற்றாக்குறை இல்லாத நிலைமையும்
   (v) பொருளாதாரமொன்றின் மொத்த வெளியீட்டின் பெறுமதிக்கு சமனாக மொத்தக் கேள்வி இருத்தல்.

22. ஒரு எளிமையான (அரசாங்கம், வெளிநாட்டு வர்த்தகம் இல்லாத) பொருளாதாரமாகக் கொள்ளவும். இப்பொருளாதாரத்தின் மொத்த வெளியீட்டின் பெறுமதி ரூ. 5,000 மில்லியன் ($Y = 5,000$) நுகர்வு மொத்த வருமானத்தில் நான்கில் மூன்று பங்காகின்றது. ($C = 0.75$ y) இந்த வெளியீட்டு மட்டம் மாற்றமின்றி தொடர்ந்து செல்வதற்கு என்ன தேவை பூர்த்தி செய்யப்பட வேண்டும்?

## 2000

23. பின்வரும் கூற்றுக்களை விளக்கி அவை பற்றி சுருக்கமாக கருத்துரை வழங்குக.
   (i) தேசிய வருமானக் கணக்குகள், உற்பத்தியினால் சுற்றுப்புறச் சூழல் மீது ஏற்படும் விளைவுகளைக் கணக்கெடுப்பதில்லை.

(ii) ஒரு பொருளாதாரத்தில் உற்பத்தி தொடர்பாக பெண்களினால் வழங்கப்படும் பங்களிப்பினை, மொத்த தேசிய உற்பத்தி மதிப்பீடுகள், குறைத்துக் காட்டுகின்றன.

(iii) அபிவிருத்தியடைந்து வரும் பொருளாதாரங்களில் அமெரிக்க டொலர்களின் அடிப்படையில் கணிப்பிடப்படும் மொத்த தேசிய உற்பத்தி வெளியீட்டின் சரியான பெறுமதியினை குறைத்து மதிப்பிடுகின்றது.

24.(i) மூடப்பட்ட பொருளாதாரமொன்றில் பேரின பொருளாதார சமநிலையில் எத்தகைய காரணிகள் மாற்றத்தினை ஏற்படுத்தலாம்?

(ii) ஒரு எளிதான பொருளாதாரத்தில் (வீட்டுத் துறையுடன் உற்பத்தி அலகுகள் மட்டும்) 'பெருக்கி' எவ்வாறு கணிப்பிடப்படுகின்றது என்பதை விளக்குக.

(iii) ஒரு மூடப்பட்ட பொருளாதாரமானது திறந்த பொருளாதாரமாக மாறுமிடத்து பேரினப் பொருளாதார சமநிலை அடிப்படைகள் எவ்வாறு மாற்றமடைகின்றன என்பதனை விளக்குக.

25. மொத்த தேசிய உற்பத்தியின் உள்ளார்ந்த விலைச் சுட்டெண் பற்றிய பின்வரும் கூற்றுக்களில் எது சிறந்த வரைவிலக்கணமாகக் கருதப்படலாம்?


(i) நுகர்வோர் விலைகளும் உற்பத்தியாளர்கள் விலைகளும் உள்ளடக்கியதாக கணிக்கப்பட்ட விலைக் குறிகாட்டி

(ii) நடைமுறை விலைகளில் மொத்த தேசிய உற்பத்தியினை நிலையான விலைகளிலான மொத்த தேசிய உற்பத்தியாகப் பெறுவதற்கு வெவ்வேறு விலைக் குறிகாட்டிகளினால் சுருக்கி நிலையான விலைகளிலான மொத்த தேசிய உற்பத்தி கிடைக்கப்பெற்ற பின்னர் வருகின்ற விலைக்குறிகாட்டி.

(iii) நாட்டில் நுகர்வு செய்யப்படும் எல்லாப் பொருள்களையும், சேவைகளையும், உள்ளடக்கிய மத்திய வங்கியினால் தயாரிக்கப்பட்ட பிரசுரிக்கப்படாத ஒரு விலைக் குறிகாட்டி

(vi) மொத்த விற்பனை விலைகளுடன் இக்குறிகாட்டியினை தயாரிப்பதற்காக இறக்குமதி, ஏற்றுமதி விலைகளையும் சேர்த்தல்.

26. பேரினப் பொருளாதார சமநிலை $Y = E$ என்ற சமன்பாட்டினால் காட்டப்படுகின்றது. வரைபடமுறையாக பின்வரும் வரைபடத்தில் இச்சமநிலையினைக் காட்டுக.




27. மூடப்பட்ட பொருளாதாரமொன்றில் பேரினப் பொருளாதாரச் சமநிலையினை அடைவதற்கு எத்தகைய குறிப்பான நிலைமைகளைத் திருப்திப்படுத்துதல் வேண்டும்? விடையினைக் குறியீடுகளினால் காட்டுக.

## 2001

28.(i) ''ஒரு நாட்டின் மொத்த உள்நாட்டுச் செலவீடானது எப்போதும் அந்நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்திக்குச சமமாகும்'' இக்கூற்றினை நீர் ஏற்றுக்கொள்வீரா? உமது விடையினை விளக்குக.

(ii) ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சியை அளவிடுவதற்கு மொத்த உள்நாட்டு உற்பத்தியின் மதிப்பீடுகள் எவ்வாறு பயன்படுத்தப்பட முடியும் என்பதை விளக்குக.

(iii) 1999 இல் இலங்கையில் தலா மொத்த தேசிய உற்பத்தியானது, கொள்வனவு சக்தி சமநிலை டொலர்களின் அடிப்படையில் 3056 என கணிப்பிடப்பட்டுள்ளது. இக்கூற்றினால் நீர் விளங்கிக் கொள்வது யாது?

(iv) எளிய பொருளாதார மாதிரியுரு ஒன்றுக்கு அரசாங்க நடவடிக்கைகள் உள்ளடக்கப்படும்போது சமநிலை வெளியீட்டிலும், வருமான பெருக்கியிலும் ஏற்படும் மாற்றங்கள் யாவை?

29. திறந்த பொருளாதாரமொன்றில் கீழ்வரும் சேர்மானங்களில் மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு சமமானதாக அமைவது எது?

(i) $C + G + I$

(ii) $C + G + I + X$

(iii) $C + G + I + X_1 - M_1$

(iv) C + G + I + X - M

C நுகர்வாகவும், G - அரசாங்க செலவாகவும், I - முதலீடாகவும், X, M என்பன முறையே பொருட்கள் சேவைகளின் ஏற்றுமதியும், இறக்குமதியுமாக அமைகின்றன.

30. நீர் ஏற்றுக்கொள்ளாத கூற்றுக்களை இனங்காண்க.
   (i) நாட்டின் மொத்த வெளியீட்டுப் பெறுமதியிலிருந்து ஏற்றுமதிப் பெறுமதியை கழிப்பதன் மூலம் மொத்த உள்நாட்டு உற்பத்தியைப் பெறலாம்.
   (ii) ஒரு நாட்டு மக்களால் உற்பத்தி செய்யப்படும் மொத்த வெளியீட்டுப் பெறுமதியே மொத்தத் தேசிய உற்பத்தியாகும்.
   (iii) நிலையான விலையில் கணிப்பிடப்பட்ட மொத்தத் தேசிய வெளியீடே மெய்யான மொத்தத் தேசிய உற்பத்தியாகும்.
   (iv) நேரில் வரிகளற்ற தேசிய வெளியீடே காரணிச் செலவிலான மொத்தத் தேசிய உற்பத்தியாகும்.

31. அரசாங்கமும், வெளிநாட்டு வர்த்தகமுமற்ற எளிய பொருளாதாரம் ஒன்றின் வெளியீடு சமநிலையில் உள்ளது என அனுமானித்துக் கொள்க. நிறுவனத்துறையினரது முதலீட்டில் வீட்டுத்துறையினரது சேமிப்புக்கு ஏற்றவாறான அதிகரிப்பு ஏற்படாத பட்சத்தில் இந்தச் சமநிலைக்கு நிகழுவது யாது?
   (i) முதலீட்டு மட்டத்தை உயர்த்துவதற்கு அரசாங்கம் தலையிடும், எனவே சேமிப்புக்குச் சமமாக முதலீடு தொடர்ந்து இருக்கும்.
   (ii) நிறுவனங்கள் முன்னர் போலவே அதே வெளியீட்டினை தொடர்ந்து உற்பத்தி செய்வதுடன், விற்பனையையும் மேம்படுத்தும், எனவே சமநிலையானது மாற்றமின்றி இருக்கும்.
   (iii) முதலீட்டை விடவும் சேமிப்பு அதிகரிப்பதனால் வருமானச் சுற்றோட்டம் சுருங்குவதுடன் வருமான மட்டச் சமநிலையும் வீழ்ச்சியடையும்.
   (iv) மேலதிக சேமிப்பானது வட்டி வீதத்தைக் குறைத்து மூலதன ஊக்குவிப்பினை ஏற்படுத்துவதுடன், சமநிலையில் மாற்றத்தை ஏற்படுத்தமாட்டாது.

32. அரசாங்கமும், வெளிநாட்டு வர்த்தகமுமற்ற எளிய பொருளாதார மொன்றின் வெளியீடு சமநிலையில் உள்ளதென அனுமானித்துக்

கொள்க. இப்பொருளாதாரத்தின் எல்லைச் சேமிப்பு நாட்டம் 0.2 ஆக அமைந்துள்ளது எனின் முதலீட்டு மட்டம் ரூ. 100 மில்லியனால் அதிகரிக்கும்போது சமநிலை வருமானமட்டம் எவ்வளவால் அதிகரிக்கும்?

..................................................................................................

33. கீழ்வரும் கூற்றுக்களில் பேரினப் பொருளாதாரச் சமநிலை நிலவுவதனைச் சரியாக விளக்கும் கூற்று எது?
   (i) இது பணவீக்கமற்ற ஸ்திரமான ஒரு நிலையாகும்.
   (ii) இது உற்பத்தியின் உத்தம மட்டத்தில் அமைந்த ஒரு நிலையாகும்.
   (iii) இது வருமானம் வெளியீட்டு மட்டங்களில் மாற்றத்தை ஏற்படுத்தும் சக்திகள் செயற்படாத ஒரு நிலையாகும்.
   (iv) இது நிறை தொழில் மட்டம் நிலவும் ஒரு நிலையாகும்.

## 2002

34. குறிப்பிட்ட காலப்பகுதியினுள் குறித்த புவியியற் பிரதேசமொன்றிலான உற்பத்திச் செயற்பாடுகள் அனைத்திலும் கூட்டப்பட்ட பெறுமதிகளின் மொத்தம் பின்வரும் பதத்தினால் குறிப்பிடப்படுகின்றது.
   (i) மொத்தத் தேசிய உற்பத்தி (ii) மொத்த உண்ணாட்டு உற்பத்தி
   (iii) மெய்த் தேசிய உற்பத்தி (iv) மொத்தக் கைத்தொழல் வெளியீடு

35. மொத்தத் தேசிய உற்பத்தியின் பெறுமானம் உமக்குத் தரப்பட்டுள்ளது. மொத்த உள்நாட்டு உற்பத்தியின் பெறுமானத்தை நீர்கணிக்க வேண்டியிருக்கிறது. எச்சீராக்கங்களை நீர் செய்து கொள்வீர்?
   (i) பண்டங்களினதும் சேவைகளினதும் ஏற்றுமதிகளின் பெறுமதியைக் கூட்டுதல்
   (ii) வெளிநாட்டிலிருந்து கிடைக்கப்பெற்ற காரணி வருமானங்களைக் கழித்தல்
   (iii) பண்டங்களினதும் சேவைகளினதும் இறக்குமதிகளின் பெறுமதியைக் கழித்தல்

(iv) வெளிநாட்டிலிருந்து பெற்றுக்கொண்ட காரணிச் சேவைகளுக்கு வழங்கப்பட்ட கொடுப்பனவுகளைக் கூட்டுதல்.

(v) தேறிய வெளிநாட்டு முதலீட்டைக் கழித்தல்.

36. நீர் இணங்கக் கூடியதாகவுள்ள கூற்றுக்களை இனங்காண்க.

(i) மொத்த உள்நாட்டுச் செலவு என்பது பொருளாதாரமொன்றின் நுகர்வு, முதலீட்டுச் செலவுகள் என்பவற்றின் கூட்டுத்தொகையாகும்.

(ii) மொத்த உள்நாட்டுச் செலவிலிருந்து இறக்குமதிகளின் பெறுமதியைக் கழிப்பதன் மூலம் மொத்த உள்நாட்டு உற்பத்தியைப் பெறலாம்.

(iii) மொத்த தேசிய உற்பத்தியிலிருந்து மூலதனச் சாதனங்களின் பெறுமானத் தேய்வினைக் கழிக்கும் பொழுது தேறிய தேசிய உற்பத்தி பெற்றுக்கொள்ளப்படும்.

(iv) உற்பத்தியிலிருந்து தோற்றுவிக்கப்படும் கூலிகள், வாடகை, வட்டி, இலாபங்கள் என்பவற்றின் கூட்டுத்தொகை மொத்த உள்நாட்டு உற்பத்திக்குச் சமனாகும்.

37. எளிய பொருளாதாரமொன்றில் சமநிலை வருமான மட்டமானது (Y) ரூபா 1000 மில்லியன் எனவும் எல்லை நுகர்வு நாட்டம் (MPC) 0.8 எனவும் கருதுக. ரூபா 1500 மில்லியன் எனும் சமநிலை வருமான மட்டத்தை எய்துவதற்கு முதலீட்டை (I) எவ்வளவு தொகையினால் உயர்த்துல் வேண்டும்?

38. எளிய பொருளாதாரமொன்றில் சராசரி நுகர்வு நாட்டம் 0.75 எனவும் முதலீட்டு மட்டம் (I) ரூபா 400 மில்லியன் எனவும் கருதுக. சமநிலை வருமான மட்டம் யாது?

39. திறந்த பொருளாதாரமொன்றில் வருமானச் சுற்றோட்டத்தின் வெளிப்பாய்ச்சல்கள் யாவை? சரியான விடைகளின்கீழ் கோடிடுக. நுகர்வு, சேமிப்பு, முதலீடு, வரிகள், மானியங்கள், இறக்குமதிகள், ஏற்றுமதிகள், வெளிநாட்டு ஒதுக்குகளில் வீழ்ச்சி, பொதுப்படுகடன்

## 2003

40. பின்வருவனவற்றுள் எது தரப்பட்ட ஒரு ஆண்டிற்கான மொத்த உள்நாட்டு உற்பத்தியில் சேர்த்துக் கொள்ளப்படும்?

(i) கம்பனி ஒன்றினது 1000 பங்குகளின் கொள்வனவு

(ii) பங்குக் கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபடும் ஒரு தரகு நிறுவனத்திற்கு ஒருவன் தான் வாங்கிய பங்குகளின் பெறுமதியில் 2% வீதத்தைச் செலுத்துதல்.

(iii) ஓய்வு பெற்ற ஒரு அரசாங்க சேவையாளர் பெறும் மாதாந்த ஓய்வூதியக் கொடுப்பனவு

(iv) பல்கலைக்கழக மாணவன் ஒருவன் பெறும் மாதாந்த புலமைப் பரிசில்படி

(v) திறைசேரி உண்டியல்களின் மீது அரசாங்கம் செலுத்தும் வட்டிக் கொடுப்பனவு

41. தரப்பட்ட ஒரு பொருளாதாரம் தொடர்பாக பின்வருவனவற்றைக் கருதுக.

ஏற்றுமதிகள் = 300; இறக்குமதிகள் = 400; வரிகள் = 1100;
அரசாங்க செலவீடுகள் = 1400; சேமிப்பு = 900;
இப்பொருளாதாரத்தின் முதலீட்டு மட்டம் யாது?

(i) 600 (ii) 700 (iii) 900 (iv) 1100 (v) 1300

42. அரசாங்கமும் வெளிநாட்டுத் துறையும் இல்லாத ஒரு எளிய பேரினப் பொருளாதார மாதிரியினைக் கருதுக. சேமிப்பு சார்பு $S = -300 + 0.1Y$ யாக வரையறுக்கப்படும் நிலையில், முதலீடு 200 ஆல் அதிகரிக்குமாயின் நுகர்வு எவ்வளவால் அதிகரிக்கும்?

43. பொருளாதாரமொன்றின் தேசிய வருமானம் தொடர்பான பின்வரும் கணக்கீட்டுத் தரவுகள் உமக்குத் தரப்படுகின்றன:

| கணக்கு | தொகை (ரூபா மில்லியன்) |
|---|---|
| தனியார் நுகர்வுச் செலவீடு | 45,000 |
| பொது நுகர்வுச் செலவீடு | 15,000 |
| மொத்த முதலீடு | 20,000 |
| இருப்புக்களின் மாற்றம் | 500 |
| தேறிய ஏற்றுமதிகள் | -5,000 |
| இறக்குமதிகள் | 16,000 |
| வெளிநாட்டுத் தேறிய காரணி வருமானங்கள் | -2,000 |
| வெளிநாட்டு தேறிய மாற்றல்கள் | 5,000 |

பின்வருவனவற்றைக் கணிக்குக.

(i) மொத்தத் தேசிய உற்பத்தி

(ii) செலவிடக்கூடிய மொத்தத் தேசிய உற்பத்தி

(iii) தேசிய சேமிப்புக்கள்
(iv) சென்மதி நிலுவையின் நடப்புக் கணக்கு மீதி

44.(i) 'ஒரு திறந்த பொருளாதாரத்தில் தேசிய வருமானச் சமநிலையைக் கூறுவதற்கு இரண்டு வழிகள் உள்ளன' வழமையான குறியீடுகளுடன் அவற்றைக் கூறுக.

(ii) பின்வரும் சமன்பாடுகளால் வரையறுக்கப்பட்ட பேரினப் பொருளாதார மொன்றைக் கருதுக: (பெறுமதிகள் ரூபா மில்லியன்களில்)

$C = 200 + 0.9\,Yd$
$I = 80$
$G = 300$
$T = 120$

இதில் C = நுகர்வு, I = முதலீடு, G = அரசாங்க செலவீடுகள், T = வரிகள்

மேற்படி தகவல்களைக் கையாண்டு பின்வருவனவற்றிற்கு விடையளிக்குக.

(அ) தேசிய வருமானத்தின் சமநிலை மட்டத்தை கணிக்குக.
(ஆ) முதலீடு ரூபா 20 மில்லியனால் அதிகரிக்குமாயின் சமநிலைத் தேசிய வருமான மட்டத்திற்கு என்ன நடக்கும்?
(இ) நிறைதொழில் மட்டத் தேசிய வருமானம் ரூபா 5000 மில்லியனாக இருப்பதற்கு அப்பொருளாதாரத்தில் முதலீடு எவ்வளவால் அதிகரிக்க வேண்டும்?

## 2004

45. T=50 ஆகவும், நுகர்வுச் சார்பு $C = 0.75\,(Y - T) + 100$ ஆகவுமிருக்குமாயின், சேமிப்புச் சார்பானது
(i) $S = 0.75\,(Y-T) - 100$
(ii) $S = 0.75\,(Y-T) + 100$
(iii) $S = 0.25\,(Y-T) - 100$
(iv) $S = 0.25\,(Y-T) - 175$
(v) $S = 0.25\,(Y-T) + 100$ ஆகவிருக்கும்

46. பின்வருவனவற்றுள் எது உண்மையற்றது?
(i) $Y = C + I + G + X - M$
(ii) $I + G + X = S + T + M$
(iii) $Y = C + I + G + NX$ (NX = தேறிய ஏற்றுமதிகள்)

(iv) $Y + M = C + I + G + X$

(v) $Y = C + S + T$

47. குறித்த ஓர் ஆண்டுக்கு ஒரு பொருளாதாரத்தின் தேசிய வருமானக் கணக்கீடுகள் பற்றிய பின்வரும் தரவுகள் உமக்குத் தரப்படுகின்றன.

| கணக்கு | தொகை (ரூபா / பில்லியன்) |
|---|---|
| தனிநபர் நுகர்வு | 450 |
| உழியர்களுக்கான கூலி / நட்டஈடு | 375 |
| ஏற்றுமதிகள் | 120 |
| தேறிய வெளிநாட்டுக் காரணி வருமானம் | 30 |
| அரசாங்கக் கொள்வனவுகள் | 30 |
| மொத்த முதலீடுகள் | 100 |
| இறக்குமதிகள் | 160 |
| தேறிய நேரில் வியாபார வரிகள் | 15 |
| தேறிய வட்டி | 60 |
| இலாபங்கள் | 70 |
| வாடகை வருமானம் | 40 |
| வீட்டுத் துறையினருக்கான மாற்றல் கொடுப்பனவுகள் | 5 |
| தனிநபர் வரிகள் | 20 |

(i) பின்வருவனவற்றைக் கணிக்குக.

- (அ) மொத்தத் தேசிய உற்பத்தி
- (ஆ) மொத்த உள்நாட்டு உற்பத்தி
- (இ) தேறிய உள்நாட்டு உற்பத்தி
- (ஈ) தேசிய வருமானம்
- (உ) செலவிடத்தகு தனியார் வருமானம்

(ii) தரப்பட்ட வருடத்திற்கான தேய்வின் அளவு யாது?

(iii) இலங்கையில் வீட்டுத்துறையினருக்கான பிரதான அரசாங்க மாற்றல் கொடுப்பனவுகளைப் பட்டியற்படுத்துக.

## ஆசிரியரின் நூல்கள்

நூல் – 1 பேரினப் பொருளாதாரம் – 3ம் பதிப்பு (தேசிய வருமானம்)

நூல் – 2 உற்பத்திக் கோட்பாடு, செலவுக் கோட்பாடு, சந்தை அமைப்புக்கள், வெளிவாரி விளைவுகளும் சந்தைத் தோல்வியும் (3ம் பதிப்பு)

நூல் – 3 உற்பத்தி வளங்களும், உற்பத்தி சாத்திய வளையியும் (2ம் பதிப்பு)

நூல் – 4 நெகிழ்ச்சிக் கோட்பாடு (3ம் பதிப்பு)

நூல் – 5 சந்தை சமநிலை (2ம் பதிப்பு)

நூல் – 6 அரச பொருளாதாரம் (3ம் பதிப்பு)

நூல் – 7 பணம், வங்கி, பொதுவிலை மட்டம் (2ம் பதிப்பு)

நூல் – 8 பொருளாதார வளர்ச்சியும் அபிவிருத்தியும்

நூல் – 9 சர்வதேச வர்த்தகமும் நிதியும்

நூல் – 10 கேள்விக் கோட்பாடு, நிரம்பல் கோட்பாடு

## விஷேட பதிப்புகள்

- க.பொ.த உயர்தர பரீட்சை வினாவிடை (1997– 2004)
- பயிற்சி நூல் – 1 (5 மாதிரி வினாத்தாள்களும் விடைகளும்)
- பயிற்சி நூல் – 2 (சந்தைப் பொருளாதாரம் 2ம் பதிப்பு)